ஆடி - 2022 நன்கொடை 30

# கண்ணாமூச்சி

மண்சார் இலக்கிய இதழ் தனிச்சுற்று ஆடல் 1 பாடல் 3









**கண்ணாமூச்சி வாழ்த்துகிறது!**

பாவலர் இரெ.சுப்பிரமணியன் - அனிதா இணையரின் அன்பு மகள் சு.நறுமுகை சென்னையில் தமிழ்வளர்ச்சித்துறை மற்றும் செய்தித்துறை நடத்திய தமிழ்நாடு நாள் விழா பேச்சுப் போட்டியில் முதலிடம் பெற்றமைக்காக நீர்வளத்துறை அமைச்சர் மாண்புமிகு துரைமுருகன் அவர்களிடமிருந்து பரிசுத்தொகை ரூ.50000மும் சான்றிதழும் கலைவாணர் அரங்கில் பெறும் நிகழ்வு.

# எளிய இலக்கியம்

தோழமைக்கு வணக்கம்.

கண்ணாமூச்சி மூன்றாவது இதழ்...

முதல் இதழில் இருந்த எழுத்தில், வடிவமைப்பில் சிறுசிறு தவறுகள் சரிசெய்யப்பட்டு இரண்டாவது இதழைச் செய்தோம்.

மூன்றாவது இதழ் எப்படி என்ற கருத்திற்காய் உங்கள் கைகளுக்கு வருகிறது.

எது இலக்கியம் என்ற கேள்வியோ... இதுதான் இலக்கியம் என்ற பிடிவாதமோ நாம் கொண்டிருக்கவில்லை. இலக்கியத்தில் உள்ள இருண்மை தவிர்த்து, முடிந்த அளவு எளிமை செய்யவே விரும்புகிறோம். எளிமை என்ற பெயரில் நீர்த்தவற்றை முன்னிறுத்துவதையும் தவிர்க்கவே செய்கிறோம்.

நாங்கள் செய்வது இலக்கியமா... தெரியாது. ஆனால் சத்தியமான எதார்த்தம்.

எளிய மனிதர்களை அவர்கள் சார்ந்த வாழ்வியலை முன்வைக்கவே முயற்சிக்கிறோம். அவர்களே நாங்களாகவும் அதுவே எங்கள் வாழ்வாகவும் இருந்திருக்கிறது... இருக்கிறது.

வழக்கம்போலவே இந்த இதழுக்கும் குடும்பச்சூழல், பணிச்சூழல் மத்தியில் பெரும் ஒத்துழைப்பு வழங்கிய கலைபாரதி, பாலகுமரன் பரிதி உள்ளிட்ட ஆசிரியர் குழுவின் கைபிடித்து நன்றியை காணிக்கை செய்கிறேன்.

தொடர்ந்து இணைந்திருங்கள் புரிதலின் புள்ளியில்.

பாமணியாற்றுப் படுகையிலிருந்து...

அன்பின் ஈரங்களுடன்,

**கோ.அருணகிரி**

ஆசிரியர்.

**கண்ணாமூச்சி**
மண்சார் இலக்கிய இதழ்
தனிச்சுற்று
திருவள்ளுவர் ஆண்டு 2053
ஆடி - 2022

நிறுவனர்
**ப. பரிதிபாண்டியன்**

ஆலோசகர்
**அம்ரா பாண்டியன்**

ஆசிரியர்
**கோ.அருணகிரி**

ஆசிரியர் குழு
கலை பாரதி
த.ரெ.தமிழ்மணி
சா.தமிழ்ச்செல்வன்
ஞா.ஜெயக்குமார்
சா.சிவகுமார்
க.தங்கபாபு
பாலகுமரன் பரிதி
தமிழாதன்

இதழ் வடிவமைப்பு
விடா பப்ளிகேஷன்ஸ்

தொடர்பு முகவரி
சன்மேன் டெய்லர்ஸ்
9 அரிசி கடைத் தெரு, மன்னார்குடி
திருவாரூர் மாவட்டம்.
கைபேசி: 9976052585, 9655480092

படைப்புகளை அனுப்ப
வாட்ஸ் அப் எண் 9659335462
மின்னஞ்சல்
kannamoochi.mannai@gmail.com

கண்ணாமூச்சியில் வெளிவரும் படைப்புகளுக்குப் படைப்பாளர்களே பொறுப்பாவர்.

# உள்ளே...

சிறுகதை :

**எட்டாம் வகுப்பு**
- பா.செய்ப்பிரகாசம் | **15**

அகழ்தல் :

**கொஞ்சம் இலக்கணம்!**
- ஆ.அரிமாப்பாமகன் | **20**

கட்டுரை :

**வீட்டுக்கு வீடு வானொலிப் பெட்டிக்கு அருகில்.!**
-இரா.மோகன்ராஜன் | **24**

கவிதை :

**தமிழர் வேர்களைத் தேடி**
-இலரா மோகன் | **54**

கட்டுரை:

**ஊடலும் சாடலும்**
- சு.இராமசுப்பிரமணியன் | **58**

சந்தா விவரம்:
**தனி இதழ். 30**
**ஆண்டு சந்தா 150**
அஞ்சல் செலவு உட்பட
**மூன்றாண்டு சந்தா. 450**
அஞ்சல் செலவு உட்பட

சந்தா, நன்கொடை வளர்ச்சி நிதி தொடர்புக்கு
**கூகுள் பே 9659335462**



# ஆத்துல தண்ணி வந்துட்டு...

கோ. அருணகிரி

**தை** மாசம் வரைக்கும் ஆத்துல நல்லாவே தண்ணி ஓடும். பங்குனியிலே லேசா குறையும். பங்குனித் திருவிழா பாக்கக்கூட, மொழங்கால் தண்ணியிலதான் குறுக்க விழுந்து சாமி பார்க்கப் போவோம்.

''சாமி கெளம்ப வேட்டு போட்டாச்சி. ரோடு சுத்திப் போனா சாமி பந்தலடித் தாண்டிப் போயிடும் வாங்கடியாயான்னு...'' வாசல்ல நின்னு கொண்டலட்சுமி அத்த, குஞ்சிமாமா பொண்டாட்டி கூப்பிடுவாங்க.

''ஏக்கா.. இந்த இருட்டுல ஆத்துக்குள்ள விழுந்து போவ முடியுமா?'' அம்மா கேட்கும்.

''அட நீ ஒரண்ட.... வெளியில பாத்தியா இல்லையா? பகலாட்டம் நெலவடிக்குது'' குஞ்சு பொண்டாட்டி சொல்லும், வாங்கடி... வாங்கடின்னு கூப்பிட்டபடி பார்வதி அத்தையும் வந்துடும். ''புள்ளையளோ கூட்டிக்கிட்டு இருட்டுக்குள்ளாறப் போறோம். யாரு வூட்டுலயாவது செத்த கைலாம்பு இருந்தா எறவ வாங்கிட்டு வாங்கடின்னு கொண்டலட்சுமி அத்தை சொல்லும். நான் ஓடிப்போயி ரெண்டு மூணு வூட்டுல கேட்பேன். பேட்டரிக் கட்ட இல்லாம கெடக்குடா சின்னவனே என்பாங்க. சிலர் நாங்களும் சாமி பாக்கப் போறோம், எங்களுக்கும் வேணும் என்பாங்க. உடனே, பார்வதி அத்தை,

''எவ கொடுப்பா... இந்தத் தெருவுல அறுத்த கைக்குச் சுண்ணாம்பு தர மாட்டளுவ, கஞ்ச செருக்கி மவளுவ... சரி இரு நா என் வூட்டுல போயி எடுத்தாரேன்னு'' கடேசியா சொல்லும்.

''பாத்தியா இந்தச் செருக்கிய இவ வூட்டுல இருக்கிறத மொதல்லயே சொல்லாம தெருவெல்லாம் அலைய

விடுறா.. இவ சொல்றா அடுத்தவள கஞ்ச செருக்கின்னு''

''ஏட்டி சும்மா இருங்கடி... காதுல வுழுந்தா எடுத்தார மாட்டான்னு'' கொண்டலட்சுமி குசுகுசுன்னு சொல்லும்.

இதுல பார்வதி மட்டுந்தான் எங்க பங்காளி வூட்டு அத்தை. கொண்டலட்சுமி–தெருவுல ரெண்டு மூணு லட்சுமி இருந்ததாலயும், அவுங்க கொண்டைப் போட்டிருந்ததையும் அடையாளப்படுத்தி அப்படிக் கூப்புடுவார்கள்.

குஞ்சி பொண்டாட்டி பேரு என்னான்னு தெரியாது. அந்த அத்தையோட புருசன் பேரு திருவாரூர் குஞ்சிபுள்ளை. அவர் பூர்வீகம் திருவாரூர். பழ யாவாரம் செய்வார். வேலிமுட்டின்னு சொல்லப்படும் மது கசாயத்தைக் குடிச்சுட்டு தெருவ அளந்துகிட்டுத்தான் வருவாரு. புது வாடகை சைக்கிளு முன் ஆண்டிபாரில் ஒரு அருவாள சொருகிகிட்டு தடதடன்னு அவர் போறத தெருவே ஒரு தினுசாட்டம் பார்க்கும்.

கடைகளில் சென்று ரவுடி தோரணையில் பணம் கேட்பார். சிலர் கொடுத்து விடுவார்கள். சிலர் இதே ரோதனையா போச்சேன்னு விரட்டுவார்கள். அப்படி விரட்டுபவர்களிடம்,

"எனக்கு காசு இல்லைன்னு சொல்லிட்ட இல்ல. நாளைக்குப் பார்ரா... இந்தத் திருவாரூர் குஞ்சி யாருன்னு?'' என்றபடி அவர் கிளம்பையில் அதை யாரும் பெரிசுப்படுத்த மாட்டார்கள். மறுநாள் காலையில் கடை திறக்க வரும் கடைக்காரர் அதிர்ந்து நிற்பார். பூட்டு முழுசும் நரகல் அள்ளி அப்பப்பட்டிருக்கும். ஆட்களை வச்சி வாசல், பூட்டு, கதவு எல்லாம் கழுவிக் கொண்டிருக்கும் முதலாளியிடம் சைக்கிளில் கால் ஊன்றியபடி குஞ்சி கேட்பார்.

''யோ... இப்ப தெரியுதா? இந்த திருவாரூர் குஞ்சி யாருன்னு?''

"அட கருமம் புடிச்சவனே இருடா ஒன்ன போலீசுல புடிச்சுக் கொடுக்குறேன்...''

''போய் சொல்லு... போலீசில் என் பேரு திருவாரூர் குஞ்சி இல்ல.. பீகுஞ் சின்னுதான் சொல்லுவானுவ''

என்று சொல்ல கடைத்தெரு இந்தக் காட்சிய சிரிப்பதா? அழுவதா? என்று தெரியாமல் வேடிக்கை பார்க்கும்.

திருவாரூர் குஞ்சி பத்தி எவ்வளவோ சொல்லலாம்.

எங்க ஊர்ல ஒரு பெரிய மனிதரின் மனைவி இறந்து போனார். ஒரு பெரிய வீட்டுத் துக்க நிகழ்வுக்கான எல்லாப் படாபடோரோபங்களுடனும் அந்த வீடு இருக்கு. பிரேதம் எடுக்க தயாராகிட்டிருந்த கடைசி நேரத்துல திருவாரூர் குஞ்சி ஒரு சின்ன மாலையுடன் அங்கே வாரார்.

''மகராசி போயிட்டியே... நா எப்ப வூட்டுக்கு வந்தாலும் கொழகொழன்னு காப்பி கொடுப்பியே... இனி எப்ப இந்தக் கையால அந்தக் காப்பி குடிக்கப்போறேன்னு'' அழுவுறாரு. கொஞ்ச நேரம் இதை அனுபவிச்சக் கூட்டம்,

''ஏய் குடிச்சுப்புட்டு வந்து அழுவுறான்யா.. அவன இழுத்து இந்தாண்ட வுடுங்கன்னு'' கூட்டத்துல ஒருத்தர் கத்துராரு. உடனே, குஞ்சுபுள்ளைய கூட்டத்துல இருந்த ஒரு ஆள் இழுத்து வுடுறான். கையப்புடிச்சி அழுததுல கைகட்டு அவுந்துப் போகுது. 'கட்ட அவுத்துட்டான் கட்டுங்கைய்யான்னு' ஒருவர் கத்த,

''வேணாம்.. வேணாம்.. குளுசம் வரப்போகுது, குளிப்பாட்ட வேண்டிய வேலையைப் பாருங்க''

எல்லாம் முடிஞ்சி சுடுகாட்டாங்கரையில ராட்டி வச்சி மூடையில அந்தம்மா வீட்டுக்காரரு சொல்றாரு...

''அவ கையில ஒரு வளையல் போட்டிருப்பா. அதைக் கழட்ட வேண்டாம்.. அவளோடயே அது போகட்டும்'' என்கிறார்.

‘‘வளையலா? அப்படி ஏதும் இல்லையே?’’ என்கிறார் சடங்கு செய்யுறவரு.

‘‘நல்லா பாருங்க... ஒரு கையில இருக்கு. ஒரு கையில இல்ல. பிரேதத்தை இறக்கையில பாடையில.. இல்ல வீட்டுலகீட்டுல விழுந்துட்டா...’’

‘‘அட.. இல்லையா அதைக் கழட்வே அவ ரொம்ப சிரமப்படுவா... எப்ப கழட்டுனாலும் கை வலிக்கும்பா.. அதுனாலதான் அவ கூடவே அது போகட்டும் என்கிறேன்’’

உடனே கூட்டத்தில் ஒருத்தர்,

‘‘திருவாரூர் குஞ்சிதான் கடைசியிலே பிரேதத்துல வுழுந்து அழுதான். அப்பதான் கைகட்டு அவுந்துச்சி. அதோட குளிப்பாட்ட எடுத்தாச்சி. சரி காரியத்த முடிங்க. மன்னார்குடிய விட்டு எங்க போகப்போறான். ஆள புடிச்சிக் கொண்டாந்திருவோம்’’

அதுபோலவே ரெண்டு நாள் தேடலுக்குப் பின்பு குஞ்சி பிடிபடுகிறார். கம்பு கழியுடன் ஆட்களை வச்சி விசாரணை நடக்கவே, அந்தப் பெரிய மனிதர் வீட்டில்,

‘‘இது என்னய்யா... அநியாயமா இருக்கு. நான் மட்டுமா துக்கத்துக்கு வந்தேன். வந்த எல்லோரையும் விசாரிங்கய்யா...’’

‘‘வந்த யாரும் சாவு வீட்டுல இந்த ஈனக்காரியத்த செய்ய மாட்டாங்கடா... இவன் சரிவரமாட்டான். இவனுக்கு எங்க போனாலும் ஜாமீன் போடுற கோவிந்தராச கூப்புடுங்கய்யா...’’

அவர் வந்தும் குஞ்சி வாய் திறக்க வில்லை.

‘‘சரி அவன விடுங்கய்யா... வளையல் எத்தனைக் கிராமோ அதனை நா ஏத்துக்கிறேன்’’

குஞ்சி விடுவிக்கப்படுகிறார். பத்து நாட்களுக்குப் பிறகு கோவிந்தராசுவும் குஞ்சியும் பேசிக் கொண்டிருக்கையில்,

‘‘உனக்கு எல்லா எடத்துலேயும் வந்து தலை கொடுக்குற எங்கிட்ட கூட உண்மையைச் சொல்லல பாரு. நேத்துதான் அவங்ககிட்ட போயி நாலு கிராம் வளையலுக்கு காசு கொடுத்துட்டு வந்தேன்’’

‘‘அட கம்முனாட்டி நீ ஏன்டா நாலு கிராமுக்கு காசு கொடுத்தே... அது இருந்ததே ரெண்டு கிராம் தானே...’’



‘‘திருட்டு தாயளி அப்ப நீதான் எடுத்தியா...’’

‘‘யாரு திருட்டு தாயளி... ரெண்டு கிராமுக்கு தங்கமும் மீதி செம்ப வச்சி செஞ்ச வளையல நாலு கிராமுனு ஒன்கிட்ட காசு வாங்குன அவந்தான் திருட்டுப்பய’’

குஞ்சி சவுண்டுவிட ஒரே வேடிக்கையாப் போச்சு.

எனவே, அவர் பேரையும் சேர்த்து குஞ்சி பொண்டாட்டின்னு தெரு பொண்டுவளும், குஞ்சிமாமா வூட்டு அத்தைன்னு நாங்களும் கூப்பிடுவோம். சாதிசனமா இல்லாட்டியும் அக்கம் பக்கம் மனிதர்களை அத்தை, மாமா, அத்தாச்சின்னு உறவுமுறை சொல்லி அழைத்த காலம் அது.

பார்வதி அத்தை கைலாம்பை எடுத்து வந்த பிறகு சாமி பார்க்க கிளம்புவோம். ஆத்துக்கரைய நெருங்கையில,

''ஏ... கைலாம்பை வச்சிருக்குற ஆளு முன்னாடி போங்கடி ஆயான்னு அம்மா சொல்ல, பார்வதி அத்தை முன்னாடி போகும், நான் பின்னாடி போவேன்.

இரவுப்பூச்சிகளின் சத்தமும் தவளைகளின் சத்தமும் இரவுநேர இசையாய் மாறி இருக்கும். ஒரு தவளைச் சத்தம் மட்டும் வித்தியாசமாய்க் கேட்க,

''ஏய் எல்லாரும் நில்லுங்கடி''ன்னு பார்வதி அத்தை ஆத்துத்தண்ணியில கால வச்சி ஒரு சலம்பு சலம்பிவிடும். அந்தத் தண்ணீ சத்தத்துல கரையோரம் கெடக்குற பூச்சிப் பொட்டுவ ஓடிடும். தவளையப் புடிக்க ஒரு நீர் கொறட்ட பாம்பு தண்ணிக்குள்ளாற ஓடும்.

அதன் பிறகு, எல்லோரும் தண்ணியில இறங்குவோம். பொண்டுவ எல்லாம் முழங்கால் அளவு சீலையை சுருட்டிக்குவாங்க. நான் சின்னப்பயங்கிறதால டவுசர கழட்டிக்கிட்டு முண்டக்கட்டயாகவே தண்ணியில எறங்குவேன். நிலா வெளிச்சத்துல பூச்சிகளின் தவளைகளின் சத்தத்துடன் ஜில்லுன்று இருக்கும் தண்ணியில எறங்கி ஆத்த கடப்பது ஒரு அமானுஷ்ய அனுபவம். என் கைவிரலப் புடிச்சி அழைச்சிக்கிட்டு போற பார்வதி அத்தை, திடீர்னு கையை விட்டு,

''நீ முன்னாடி போடா''ங்கும்

புரியாமல் விழிக்க,

''போடா சின்னவனேன்னு'' லேசா அதட்டும். நான் இந்தாண்ட வந்ததும் சொர்ர்ன்னு தண்ணிக்குள் சத்தம் கேட்கும். திரும்பிப் பார்த்தா தொடை வரை மடக்குன புடவையோட அந்தத் தண்ணியிலேயே ஒன்னுக்குப் பேஞ்சிகிட்டே வரும். பகல் நேரத்தில் கூட ஆத்த கடக்கும் நடடுத்தர வயது பெண்கள் இப்படி ஒன்னுக்குப் போவார்கள். கரையை நெருங்கையில் ரெண்டு கை தண்ணியை அள்ளித் தொடையில அடிச்சிக்குவாங்க.

பாமணி ஆற்றுப்படுகையில் பிறந்த எங்களுக்கு ஆறுதான் மிகப்பெரிய பொழுதுபோக்கு. பல்லு வெலக்குறதிலேருந்து பாத்திரம் வெலக்குறது எல்லாம் ஆத்துலதான். பங்குனி மாசத்துக்குப் பிறகு தண்ணீர் வரத்துக் குறைந்து, ஒரு சீலைத்தலைப்பு மாதிரி ஓரமாய் ஓடும். அதுலேயே சனங்க கால், கை கழுவுவாங்க.. தரையோடு தரையா படுத்து, குளிச்சிக்கிட்டு இருப்பாங்க.. குடிநீருக்கு மட்டும் அதைப் பயன்படுத்த மாட்டோம். குடிநீருக்கு ஊத்து வெட்டிக் கொள்வது வழக்கம்.

நாங்கள் எல்லாம் மாலை நேரத்தில் விளையாடும்போது, பெண்கள் ஊற்றில்தான் தண்ணீர் தூக்குவார்கள். வெய்யில் நேரத்தில் யாராவது அதில் கால், கை கழுவி விடுவார்கள் என்பதால் தண்ணீர் தூக்கி முடித்ததும் கருவைமுள்ளை வெட்டி ஊத்த சுற்றிப் போட்டு வைப்பார்கள். அப்படியும் சிலர் இறங்கி கால் கழுவி விடுவார்கள். சாயங்காலம் ஊத்துக்கரையில் பெரிய சண்டையே நடக்கும்.

''எந்தக் காளியாயில போறவனோ ஊத்துல எறங்கி, சூத்த கழுவிட்டு போயிருக்கான்...''

"அட... ஒப்புரான, குடிக்கிற தண்ணியில மனசு வந்து யாரு பண்ணி இருப்பா இப்படி...'' என பொண்டுவ ஒருவரை ஒருவர் விசாரித்தபடி ஊத்துத் தண்ணியை எறச்சி ஊத்தி சுத்தம் செய்வார்கள்.

சித்திரை, வைகாசி மாத இரவுகளில் வீட்டில் புழுக்கம் தாங்காமல் ஆற்றுமணலில் பாய் விரித்து படுத்துக் கிடப்பவர்களும் உண்டு.

அந்த மாதக் காலங்களில் விவசாய வேலை பெருசா இருக்காது என்பதால் ஆற்றில் பவுன் நோண்டுவது என்று ஒரு பெரிய வேலை நடக்கும். அந்தக் காலத்தில் குழந்தைகள் முதல் பெரியவர்கள்

அனைவரும் குளிப்பது ஆற்றில்தான் என்பதால் அவர்கள் தவறவிடும் கொலுசு, மூக்குத்தி என சிறுசிறு பொருட்கள் தண்ணீரில் அடித்து வந்து மணலில் புதைந்துவிடும். ஊதாரித்தனமான செலவு செய்பவர்களை, அவனுக்கென்ன "ஆத்துல வருது... மணல்ல சொருவுது..." என்று சொல்கிற பழமொழியும் வழக்கத்தில் உண்டு.

எனவே, அதிகாலையில் ஒரு மண்வெட்டி, சிறு கை கரணையுடன் பாமணி, கர்ணாவூர், வாஞ்சூர், தேவங்குடி, வேட்டைத்திடல், சவளக்காரன் போன்ற கிராமங்களில் இருந்து ஆண்களும் பெண்களுமாய் வந்து ஆற்றுமண்ணை நோண்டுவார்கள். மதிய சாப்பாட்டை ஒரு அலுமினிய வாளியில் பழையசோத்தை எடுத்து வந்து விடுவார்கள். ஆற்றங்கரை மரநிழலில் அமர்ந்து சாப்பிட்டுவிட்டு தலையில் ஒரு துண்டை போட்டபடி உச்சி வெய்யிலில் கூட உட்கார்ந்து நோண்டியபடி இருப்பார்கள்.

சிலருக்கு சிலசில பொருட்கள் கிடைக்கும். அது பெரிய செய்தியாய் பரவ அடுத்தநாள் ஆற்றில் கூட்டம் நிறைய இருக்கும். பவுன் கிடைத்ததாகச் சொல்லப்படும் இடத்தைச் சுற்றி நிறைய சனங்கள் சேர்ந்துவிட, நேத்து யார், யார் எங்க நோண்டினிங்களோ அங்க போய் நோண்டுங்க என வாக்குவாதம், சண்டைகூட நடப்பதுண்டு.

அப்படி கெடச்சப் பொருட்கள கம்மாளத் தெருவுல ஓர் அரை இருட்டான ஓட்டு வீட்டில் இருக்கும் மனிதரிடம் கொண்டு கொடுப்பது வழக்கம். அவர் இவர்களை கண்டுகொள்ளவே மாட்டார். இவர்கள் தயங்கி தயங்கி எடுத்தப் பொருளை கொடுக்கையில் அதைக் கையாலக் கூட வாங்க மாட்டார்.

"ம்... இப்படி வை. அட ஏம்பா மண்ண கிண்டிக்கிட்டு வந்து எம் மாரடிக்கிறீங்க.." என சலித்துக் கொள்வார்.

"ஏதோ பாத்து கொடுங்கைய்யா..."

"என்னத்த கொடுக்கறது.. நேத்து ஒங்க ஆளுக ஒருத்தன் வந்து இப்படி கெஞ்சி னான்னு வாங்கினேன். சுத்தம் பண்ணி பார்த்தா வெறும் செம்புதான் இருக்கு..."

"இது பவுனு தானுங்கைய்யா... வெளில விசாரிச்சிட்டுத்தான் வந்தேன்..."

"ஏ... அங்கையே கொடுக்க வேண்டியது தானே?"

"அது எப்படிங்க... ஒங்ககிட்டதான் வாடிக்கையா கொடுக்கிறது"

சரி இந்தான்னு இருபது, முப்பது ரூபாய் தரப்படும். பவுன் ஆயிரத்து மேல் விற்ற காலத்தில் அவர்களும் ஏதோ ரெண்டு நாள் சம்பளம் கிடைத்த மகிழ்ச்சியில் வாங்கிச் செல்வார்கள்.

பவுன் நோண்டுவது, பட்டம் விடுவது, மணல்வீடு கட்டி விளையாடுவது, நிலவொளியில் பாய்விரித்துப் படுத்துக் கிடப்பது, ஊற்றில் தண்ணீர் எடுப்பது எனக் கோடைக்காலத்திற்கே உரிய எல்லா விசயங்களையும் கடந்து...

ஆனி மாதத்துவக்கத்தில் மேட்டூர் அணைத்திறப்பு கரகரப்பான ரேடியோ அறிவிப்பாக வெளிவரும். இன்னைக்கி தண்ணித் தொறந்தா ரெண்டு நாளில் கல்லணை வந்து சேரும். அப்புறம் ரெண்டு நாளில் நம் ஆத்துக்கே வந்துடும்னு பெரியவர்கள் பேசிக் கொள்வார்கள்.

வேப்பம்பழங்கள் உதிர்வது, அக்காக்குருவி கத்துவது, ஈரக்காற்று வீசுவது என ஆற்றில் தண்ணீர் வரும்போது அழகாக வெளிப்படும். தூர்வருவது என்ற பெயரில் நடக்கும் அரசியல் எல்லாம் அப்போது இல்லை. வயல்கார முதலாளிகள் தங்கள் வேலையாட்களை விட்டு வாய்க்காலின் ஓரங்களில் இருக்கும் புல், பூண்டு செடிகளை செத்திவிட்டுச் செல்வார்கள்.

திடீரெனு ஒரு நா அதிகாலையில்,

"ஏ... ஆத்துல தண்ணி வந்துட்டுடா"ன்னு சிறுவர்கள் கத்திக் கொண்டு ஓடுவார்கள். வெற்றிலைப் பாக்கு, சூடம் மணலில் கொளுத்தி வைத்து ஆற்றுநீரை வரவேற்பார்கள் பெரியவர்கள். நுங்கும் நுரையுமாய் புதுவெள்ளம் ஓடிவந்து கொண்டிருக்கும்.

●

ஆய்தல்

# நீலமலையில் சுற்றித்திரியும் பச்சைப்புறா

## கலை பாரதி

எதை எழுதுவது என்றால் எதையும் எழுதலாம் என்று சொல்லுவேன் நான். ஆனால் இலக்கியர் கோ. நடராசன் இதைத் தான் எழுதுவேன் என்கிற மனஎழுச்சியோடு தன் மனதிற்குள் அப்பிக் கிடக்கும் வாழ்விட அனுபவத்தை நூலாக்கி நமக்குத் தந்திருக்கிறார். அது பச்சைப் புறாவாக நம் மனசுக்குள் வந்து குந்தியிருக்கிறது. அவரது வாழ்விட அனுபவம் நீலமலை அனுபவமாக சிறகு விரிக்கும் போது படிப்பவருக்கு ஒரு புதிய உணர்ச்சியைத் தருகிறது!

பச்சைப்புறாவில் மொத்தம் 12 கட்டுரைகள். பல்வேறு அனுபவங்கள். ஒவ்வொன்றும் ஒரு மாதிரி. ஆனால் அது புது மாதிரி. இந்நூலின் முதல் கட்டுரை ஆடா. ஆடா என்ற சொல் படுகைக்காரனான எனக்குப் புதிது. பாரதி சொல்வது போன்று சொல் மட்டும் புதிதன்று. அதன் பொருள் புதிது. அது தரும் வளம் புதிது. அது கொடுக்கும் புதிது புதிதான வெளிச்சம் இக்கட்டுரை நெடுக ஒளியூற்றிச் செல்கிறது.

ஆடா என்கிற மலை இடுக்குச் சமவெளி, இயற்கை அன்னையின் பெருங்கொடையாக இக் கட்டுரையை வாசிக்கும்போது உணர முடிகிறது. அதிலும் மென்காற்று, நீரோடை ,பெரும் புல்வெளி நாசி தழுவும் காட்டு மலர்களின் மணம் என்று இவர் எழுதிச் செல்லும்போது அந்த இடத்திற்கே கைவிரல் பிடித்து அழைத்துச் சென்றுவிடுகிறார்.

அந்த ஆடா சகதிக்குள் விழுந்து மாட்டிக்கொண்ட எருமைகளை மீட்கும் நிகழ்வுகளை இவர் சொல்வதுஒரு சிறுகதைக்கான உட்கூறு.

சிறுவர்களுக்கும், செம்மறி ஆடுகளுக்கும், தவளைகளுக்கும், பெருநரிகளுக்கும், வெட்டுக்கிளிகளுக்கும் வாழ்விடமான ஆடா இன்று பெருமுதலாளித்துவ வேட்டைக் காடாக மாறுகிறது என்று மனம் பதைபதைக்க இக்கட்டுரையை முடிக்கிறார் எழுத்தாளர் நடராசன். எழுத்தாளர் சொல்வதைப் போன்று அந்த நீலமலை மாங்குயிலின் ஒப்பாரி இப்போதும் நம் காதுகளில் கேட்டுக் கொண்டுதான் இருக்கிறது!

காளான்கள் என்றால் சம்பா வைக்கோற்போரின் அடியில் விளைந்து கிடக்கும் குடை காளான்களைத் தான் நமக்குத் தெரியும். இவரோ காளான்களைபற்றி ஒரு விரிவான ஆய்வைதந்திருக்கிறார். காளான்களுக்கான சங்கச்சொற்கள், இயற்கை காளான்களைச் சமைக்கும் முறையை சொல்லும்பொழுது அதன் தாளித மணம் படிப்பவர் நாவிலும் எச்சில் ஊற வைக்கிறது.

இந்நூலிலுள்ள எருமைப்புலி கட்டுரை நம்மை மொட்டோரைக்கே அழைத்துச் செல்கின்றது. எருமையை புலி என்றே சொல்கிறார் இவர். எருமைகளை அடைக்கும் தொளா. அதாவது தொழுவம்.அது அமைக்கப்படும் முறை போன்றவற்றை எழுதியுள்ளார். பழங்காலத் தமிழகத்தில் மாடுகளின் இருப்பே ஒருவரின் செல்வத் தன்மையைக் கணக்கிட உதவும். மாடு என்றால் செல்வம். அது மலைவாழ் மக்களைப் பொறுத்தவரை எருமைகளுக்குப் பொருந்திப்போகிறது.ஒருவர் இறந்து விட அவருடன் அவர் வசதிக்கு ஏற்ப எருமைகளைப் போட்டுப் புதைக்கும் வழக்கம் எகிப்தியப் பிரமிடுகளை நினைவுபடுத்துகிறது. உலகம் முழுவதும் ஆதிக்க மனம் ஒரே மாதிரியாகவே சிந்தித்து இருக்கிறது என்பதை வலியின் ஊடாகவே உணர முடிகிறது.




**கதையாடி**
**27/2 நபிகள் நாயகம் தெரு,**
**நரசிங்கபுரம் ஆத்தூர் 636108**
**செல்பேசி 8667298553**
**விலை 120**

மலைவாழ் மக்கள் தங்கக் காசை சேமிப்பது போல சாக்குப்பைகளைச் சேமிப்பார்கள் என்பது படிக்கும் நமக்குப் புதுமையாக இருக்கிறது. அவர்களது விருந்தோம்பலில் சாக்குப்பையும் சுடுசோறும் முதன்மை இடத்தைப் பிடிக்கிறது.

எப்போதும் குளிர்தட்ப நிலவியலில் சாக்குப்பையும் சுடுசோறும் முதன்மையான தாகத்தானே இருக்க முடியும்.

எழுத்தாளர் நடராசனின் இளங்காதல் அனுபவங்கள் இத்தொகுப்பில் பூவாளியாய் பன்னீர் தூவும். அத்தூறலில் நனைகின்றோம் சுடுகின்றது! காய்கின்றோம் குளிர்கின்றது! நடராசனை கவிதை எழுத வைத்த கவிதை அவள். அவர்கள் சாடைமாடையாகப் பேசுவதும் ,ஏதிலார் போல நோக்குவதும் அடேங்கப்பா.. என வியக்கவைக்கிறது. விறகு சேகரித்து,விறகு கட்டை இவர் தூக்கி விட... அவள் கை தவறுவது போல நழுவ விட.... நாவல்மரக்கிளை அவளை இவர் மீது சாயாமல் தடுத்துவிட....பிறகு சரியாக சும்மாடு கோலி இவர் சுமையைத் தூக்கிவிட.... அப்பப்பா திரைப்படக்காட்சி தான் போங்க!

நம்மில் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு கனவுக்கன்னி இருப்பார்கள். ஆனால் எழுத்தாளர் நடராசனின் கனவுக் கன்னி சுந்தரி.சுந்தரி அவர் வீட்டு காராம்பசு. மாடுகளுக்கு பெயர் வைத்து அழைக்கும் மரபு நம் தொல்குடி மரபு. அதனை பாவாணர் “கொற்றன் வந்தான்.. சாத்தி கன்று ஈனும்...” என்று ஆவுந் தமிழரும் கட்டுரையில் பதிவு செய்திருப்பார். அக்கட்டுரை பசுவுக்கும் தமிழருக்குமான நெருக்கமான உறவைச் சொல்லும். காராம் பசுவுக்கும் நடராசனுக்குமான உறவு கனவுக்கன்னி கட்டுரையில் வெளிப்படுகிறது. சுந்தரிக்கு ஃபார்னி கவுண்டர் பிரசவம் பார்ப்பதை,

“இரண்டு கைகளையும் உள் சொருகி தலையையும் முன்னங்கால்களையும் இழுத்துவிட்டார். நின்று கொண்டிருந்த சுந்தரி கால் மடக்கி படுத்துக்கொண்டாள். அழகான பெண் கன்று பிறந்தது”

என்று இவர் விவரிக்கும்போது அட...என்று கண்கள் விரிய நம்மையும் அந்த இடத்திற்கு அழைத்துச் செல்கின்ற வல்லமை பெற்றவராகவே எழுத்தாளர் நடராசன் இருக்கிறார்.

இன்னும் இன்னும் சொல்வதற்கு நிறையவே இருக்கின்றது.இத் தொகுப்பில் உள்ள காட்டுச் சுனையும், தேவதைகளின் குகையும், முளைகட்டிய உருளைக்கிழங்கும் படிப்பவருக்கு ஒரு புதிய பரவசத்தைக் கொடுக்கும் என்று உறுதியாகச் சொல்லலாம்.

இன்னுமொன்று. இந்த நூல் நெடுக இவர் சொல்லுகின்ற உவமைகளும் அதைச் சொல்லுகின்ற நடையும் வாசிப்பை மனதிற்கு நெருக்கமாக முன்னிறுத்துகிறது.

மலை எங்கும் வழிகிறது பச்சைக்குருதி..

முதல்முறை முத்தம் பதித்த பெண்ணின் பொலிவு ..

ஆட்டமும் பாட்டும் இசையுமாய் ஊரே பூத்திருக்கும்.

கீத்துல கெனவுல கூட நினைப்பதில்லை...

காவாய்கள் குடியர்களின் வயிற்றைப்போல உப்பும்...

சந்திர நடிகர் இன்னொரு சூரியனாய் தகித்துக் கொண்டிருப்பது...

வாசிக்கவும் சுவாசிக்கவும் பச்சைப்புறாவில் நிறையவே இருக்கின்றது...

இன்னும் இன்னும் எழுதுங்கள் நடராசன்!

●

# அவர் என்றைக்குமே ஆசிரியர்தான்...

## பாலகுமரன் பரிதி



அப்பா ஆசிரியர் பணியில் இருந்து ஓய்வு பெற்று விட்டார். 30 ஆண்டுகால ஆசிரியர் பணி. இடைநிலை ஆசிரியராகப் பணியில் சேர்ந்து நடுநிலைப்பள்ளி தலைமை ஆசிரியர் வரை பதவி உயர்வு பெற்றார். முப்பது ஆண்டுகளில் பத்திற்கும் மேற்பட்ட இடமாறுதல்கள் ஒரே பள்ளியில் பணிபுரிவதே அப்பாவிற்குப் பிடிக்காது.

அப்பாவின் நண்பர் வீட்டிற்கு வந்தார் “பரிதி, முப்பது வருஷம் சர்வீஸ் ரிட்டயர்மென்ட் ஆயிட்ட. பணி ஓய்வு பாராட்டு விழா நடத்தனும் சங்கத்தைக் கூட்டி சிறப்பா செஞ்சுடுவோம்“ என்றார்.

‘‘நான் விழா வைப்பேன் நீங்க எல்லாம் வந்து துண்டு போர்த்திட்டு போவிங்க, சொந்தகாரன் ரெண்டுபேரு எதுக்குனே தெரியாம மோதிரம் போடுவான், நான் மண்டபம் பிடிக்கணும், சோறு போடணும், என்ன புடிக்காதவன் எல்லாம் மைக்க பிடிச்சி என்னை புகழ்ந்து பேசுவான். ரொம்ப செயற்கையா இருக்கும்யா அதெல்லாம் ஒன்னும் வேண்டாம்“ என மறுத்தார்.

நானும் நிறைய பணி ஓய்வு பாராட்டு விழாக்களை பார்த்திருக்கிறேன். செயற்கையாகத்தான் இருக்கும். அப்பாவிற்கு இப்படியான உலகம் பிடிக்காது. அவர் உலகம் வேறு மாதிரியானது.

பெரும்பாலானோர் பணி ஓய்வு பெற்ற பிறகு தங்கள் அதிகாரத்தை இழந்து விட்டவர்களாக நினைத்துக் கொள்வார்கள். அப்பா ஒருபோதும் தன்னை அதிகாரம் மிக்கவராக நினைத்துக் கொண்டதே இல்லை அதனால் பணி ஓய்வு பெற்ற பிறகு அப்பாவிடம் எந்த மாற்றமும் இல்லை.

ஆறு மாதங்கள் கடந்தன. திடீரென ஒருநாள்,

“டேய் பாலா, நான் காய்கறி கடை வைக்க போறேன்“ என்றார்.

நான் சிரித்துவிட்டேன்.

“ஏன்டா, எனக்கு வியாபாரம் பண்ண தெரியாதா? பீட்டர் கடை பக்கத்தில ஒரு காய்கறி கடை இருக்கு. சந்தப்பேட்டைல இருந்து காய்கறி வாங்கி வந்து விக்கபோறேன். எனக்கும் பொழுது போகும். காய்கறி மிஞ்சினால் வீட்டு சமையலுக்கு ஆகும்’’ என்றார். வழக்கம்போல அம்மாவிடம் எந்த மறுப்பும் இல்லை.

காய்கறி கடை திறந்தார். விடியற்காலையிலேயே சந்தப்பேட்டை போய் காய்கறிகளை வாங்கிக்கொண்டு வந்து காலை 12 மணிவரை வியாபாரம், மீண்டும் மாலை வியாபாரம். ரொம்ப பிசியாகி விட்டார் அப்பா.

அதில் ஒரு பிரச்சினை இருந்துச்சு. சந்தைப்பேட்டையில் மொத்த விலைக்கு காய்கறிகளை வாங்கி வருவார். காய்கறி விலைகளை மறந்துபோவார். தக்காளி 4 ரூபாய் என்றால் 5 ரூபாய்க்கு விற்பார். 6 ரூபாய் என்றால் 4 ரூபாய்க்கு விற்பார். எங்கள் கடையில் விலை பட்டியல் என்று ஒன்று கிடையாது. நாங்கள் சொல்வதுதான் விலை.

விடுமுறை நாட்களில் காலை கடைக்குச்

சென்று, அவரை சாப்பிட வீட்டுக்கு அனுப்பி வைத்துவிட்டு கடையை பார்த்துக் கொள்வேன். ஒரு ஆள் வந்தார்,

“தம்பி உருளைக்கிழங்கு கிலோ எவ்வளவு?”

நான் ஒரு விலையை சொன்னேன்.

“என்னய்யா அநியாய விலைக்கு விக்கிறீங்க” என்றார்.

அப்பாவுக்குப் போன் போட்டேன்.

“டேய் அவனுக்கு இஷ்டம் இருந்தா வாங்க சொல்லு. இல்லைனா எங்க நியாயமான விலை கிடைக்குதோ அங்கயே வாங்கிக்கச் சொல்லு” என சொல்லி போனை துண்டித்தார்.

இதை நான் எப்படி அந்த ஆளு கிட்ட சொல்ல முடியும். ‘நீங்களே ஒரு விலை போட்டு எடுத்துக்கங்க’ எனச் சொல்லி அவர் கேட்ட விலைக்கு கொடுத்தனுப்பினேன்.

இன்னொரு நாள் இன்னொரு மனிதர் முட்டைக்கோஸ் கால் கிலோ கேட்டார். முட்டைகோஸ் முழுதாக இருந்தது எனக்கு வெட்ட தெரியாது. “இல்லைங்க, முழுசாதான் கொடுப்போம்“ என்றேன்.

“என்னாயா வியாபாரம் பண்றீங்க” என்று தலையிலடித்துக் கொண்டு சென்றார். இதெல்லாம் எனக்கு வேடிக்கையாகவே இருக்கும்.

காய்கறி கடைய டெவலப் பண்ணி மளிகை கடை வைக்க போறேன் என்றார். பின்லே ஸ்கூல் கிரவுண்ட் எதுக்க ஒரு கடை இருக்கு பிடித்து விடலாமா என்றார். ஏன் என்று தெரியவில்லை.. பணி ஓய்வுக்குப் பிறகு எது செய்தாலும் என்னிடம் ஒரு வார்த்தை கேட்க ஆரம்பித்தார் அப்பா.

சேட்டு கடை ஹோல் சேல் கடைக்குச் சென்று மளிகை கடைக்குத் தேவையான சாமான்களை வாங்கி வந்து கடையில் அடுக்கினோம். சிகரெட் மட்டும் வாங்கவில்லை. அப்பாவிடம் கேட்டேன்,

“நம்ம கடையில சிகரெட் விற்பனை இல்லடா'' என்றார்.

நான் மனதுக்குள் சிரித்துக் கொண்டேன், நாளை நடக்கவிருக்கும் விபரீதம் எனக்கு முன்னரே தெரிந்துவிட்டது . கிரவுண்டுக்கு விளையாட வரும் இளைஞர்கள் பெரும்பாலானோர் விளையாட வருவதில்லை சிகரெட் பிடிக்கதான் வருகிறார்கள், எப்படியும் கடையில் வந்து சிகரெட் கேட்பார்கள் என்பது எனக்குத் தெரியும்.

காலையிலேயே அப்பாவின் புதுக்கடை திறக்கப்பட்டது. வாசலில் ‘சிகரெட் விற்பனையில்லை’ என்ற போர்டு மாட்டப்பட்டது. நான் கல்லூரிக்குச் சென்று விட்டேன். மாலை கடைக்கு வந்தேன். அந்த போர்டை காணும். அப்பா கடுகடுவென இருந்தார் என்னாச்சுன்னு கேட்டேன்,

“எல்லாப் பயலும் சிகரெட் கேட்குறானுங்கடா, இவனுங்களுக்குச் சிகரெட் இல்லைன்னு சொல்றதே எனக்கு ஒரு வேலையா போச்சு, அதனால கொள்கையில் கொஞ்சம் தளர்வு பண்ணிக்கலாம்னு இருக்கேன். இனிமேல் 18 வயதுக்குட்பட்டவர்களுக்குச் சிகரெட் கிடையாது” என போர்டு மாட்டி சிகரெட் விற்பனையும் தொடங்கியது.

அன்றிலிருந்து தினம் ஒரு பஞ்சாயத்து தான். சிகரெட் வாங்க வரும் சிறுவர்களிடம் “உனக்கு வயசு என்னடா? உனக்கெல்லாம் சிகரெட் கிடையாது போடா” என சண்டை போட ஆரம்பித்தார். அப்பாவிடம் என்ன சொல்லி புரியவைப்பது என்று எனக்கு தெரியவில்லை.

ஒருநாள் இரவு 10 மணிக்கு மேல் ஆகியும் அப்பா கடையை விட்டு வரவில்லை. என்னவென்று பார்க்கலாம் என்று கடைக்குச் சென்றேன். கடை வாசலில் இரண்டு போலீஸ்காரர்கள் அப்பாவிடம் பேசி கொண்டிருந்தனர். நான் அருகில் சென்றேன். போலீஸ்காரர்கள் சென்றுவிட்டனர்.

அப்பா என்னிடம் நடந்தவற்றை கூற ஆரம்பித்தார் ‘‘கிரவுண்டில் நாலு சிறுவர்கள் பீர் குடித்துக் கொண்டு இருந்திருக்கிறார்கள். அதைப் பார்த்த

அப்பா அவர்களை கம்பை எடுத்து விரட்டி வந்து கடைவாசலில் முட்டி போட வைத்து போலீசுக்கு போன் செய்திருக்கிறார். போலீசார் வந்து சிறுவர்களின் பெற்றோர்களை அழைத்து கண்டித்து அனுப்பி வைத்திருக்கின்றனர் என அப்பா சொல்லி முடித்தார்.

நான் கண்கொட்டாமல் அப்பாவை பார்த்துக் கொண்டே நின்றேன்.

"எதுக்கு இந்த தேவை இல்லாத வேலை, அப்படித்தானடா நினைக்கிற" என்றார்.

இல்லை என்று தலையாட்டினேன்.

போலீஸ்காரர்களும் இதைதான் சொன்னார்கள் "உங்களுக்கு எதுக்கு சார் தேவை இல்லாத வேலைனு".

"என்கிட்ட படிக்கிற பசங்க மாதிரி இருக்கானுங்கடா.. கண்ணுக்கு எதிரே கெட்டு போறானுங்க, எப்படி கண்டுக்காம இருக்கிறது" என்றார்.

ஆம். அவர் என்றைக்குமே ஆசிரியராகத்தான் இருந்தார்... ●

---

கவிதை

# பாடம்



அரசுப் பள்ளியில்
அக்ரகாரம்.

மாணவனுக்கு
மனுஅதர்மம்.

பாடப்பிழை
திருத்தலாம்
பயிற்றுப் பிழையை?

நீ
தேவமாரு
நான்
நாடாமாரு!

செவியுற்ற
வள்ளுவன்
செத்துக் கிடக்கிறான்
வகுப்பறையில்.

''எல்லோரும்
சமம்தானே?''

'விடைசொல்லி'
மாணவம்
ஒற்றைக் கேள்வியில்
ஆசிரியமானது!

வேதம் ஓதி
பழக்கப்பட்ட
ஆசிரியம்..
திருந்தும் வரை
மாணவத்திடம்
பாடம் கற்கட்டும்...!

– த.ரெ.தமிழ்மணி

# எட்டாம் வகுப்பு

பா.செயப்பிரகாசம்



அரைக்கால் டவுசர் ; டவுசர் தெரியும்படி கைலியை மேலே தூக்கி மடித்துக் கட்டியிருந்தால் சண்டியர் என்று பேர். மதுரையில் தெருவுக்குத் தெரு சென்ற நூற்றாண்டின் அறுபதுகளில் சண்டியர்கள் உருவாகியிருந்தனர்; எந்த வேலைக்கும் போகாத, எந்த வேலையும் செய்யும் விருப்பமற்ற, உழைப்பு நல்க மறுக்கிற உதிரிகள்.

ஒரு சண்டியர் மோகன்ராசு உருவில் மீனாட்சிபுரம் என்ற நடுத்தரமான ஊரில் உருவாகியிருந்தான். எட்டாம் வகுப்பில் தோல்வி. படிப்பு முடிக்காமல் , நான்கு வருசமாய் ஊர் சுற்றல். அவனது சொத்து தோட்டம், காடு, கரை எனப் பரந்து கிடக்கிறது. வழக்கம் போல கோடையில் கண்மாய் வற்றும். வற்றிக் காய்ந்ததும் களிமண் எடுத்து அவரவர் புஞ்சையில் போட்டுக் கொண்டிருந்தனர் விவசாயிகள். ஒரு நல்ல சம்சாரியெனில், சரள்மண் மூடிய பூமியில் கண்மாய்க் களிமண் வாரி எடுத்துப் போட்டால் அவ்வளவும் தங்கமாகக் காண்பான். மோகன்ராசின் அம்மா, அய்யா தலையில் வண்டுகட்டி, சும்மாடு கூட்டி,அதன்மேல் கெட்டிக்களிமண் நிறைத்த கூடைசுமந்து வேணாத வெயிலில் நிலத்தில் போய்க் கொட்டிக்கொண்டிருந்தனர்.

சண்டியர் அங்கு தென்படவில்லை. புதிதாய் வாங்கிய ஹெர்குலிஸ் சைக்கிளை தொடைகளில் இடுக்கிக் கொண்டு பக்கத்து நகரில் வலம் வந்து கொண்டிருந்தான். சைக்கிளில் ஏறியதும் குதிரையில் உலாவரும் ஒரு மஹாராஜா தோற்றம் வந்துவிடும்.

அவன் பீடி சுண்டவும் பழகி இருந்தான். பீடி சுண்டுகிற அந்த செயலைப் (ஸ்டைல்) பார்த்தால் இறக்குமதி சண்டியர் அல்ல, நிஜமான சண்டியர் என்று கண்ணை மூடி எவரும் சொல்வர்.

*2*

*எட்டாம் வகுப்பில் ஒரு விபரீதமான சம்பவம் நடந்தது. வினோதமானது என வேற பெயர் சூட்டி அடையாளப்படுத்திடவியலாது. வேற வேற வார்த்தைகளிலான அடையாளம் சம்பவத்தின் தீவிரத்தை நீர்த்துப் போகச் செய்யும்.*

*அது எட்டாம் வகுப்பு வரையான அரசு நடுநிலைப் பள்ளி; எட்டாம் வகுப்பின் மொத்த எண்ணிக்கை 30; பையன்கள் 20, பெண் பிள்ளைகள் 10. இதில் ஏழு பேர் மாசார்பட்டியிலிருந்து படிக்க வந்து சென்றனர். அன்றைக்கு முதல் மூன்று பீரியடுகளுக்கு வகுப்பெடுக்க வேண்டிய ஆசிரியர்கள் மூவர் விடுமுறை. காலை இடைவேளையின் பின் வகுப்பறைக்குள் நுழைந்த பெண்பிள்ளைகள் கரும்பலகையில் எழுதப்பட்டிருந்த வாசகங்கள் கண்டு அதிர்ச்சி உற்றனர். கால்களைச் சுண்டி இழுத்து குப்புறக் கவிழ்த்து விட்டது போல் உணர்ந்தனர் . கண்கள் அதிர்ச்சியுடன் விரிந்தன.*

*நாயகி 95% மணிமொழி 85% அச்சம்மாள் 70% லோகேஸ்வரி 65% காவேரி 50% கன்னியம்மாள் 60% ஞானசவுந்தரி 85% பார்வதி 80% மீதி இரண்டுபேருக்கு மதிப்பெண் போடமுடியாதபடிக்கு பெண்பிள்ளைகளின் வருகை அமைந்தது.*

*பெண்ணின் உடல் வடிவைக் கொண்டு அழகுக்கு மதிப்பெண் இட்டிருந்தனர் மாணவர்கள். பெண் என்றால் உடம்பு . உடல் திரட்சி, சதைப் பிடிப்பு, முகவடிவு எனப் பூசனம் பிடித்துப் போயிருந்தது ஆண்களின் பார்வை. அன்றைய ஆணின் துருப்பிடித்த கண்கள் இன்றைய ஆணின் கண்களாகவும் இருந்தன எனபதைச் சாட்சிப்படுத்திற்று வாசகம்.*

*சுருக்கென்று தைக்க கோபம் கொண்டு, சில பெண்கள் துணி எடுத்து அழிக்க முயன்றனர். அழிக்கப் போனவர்களை இரு கைகள் விரித்து 'யாரும் அழிக்கக் கூடாது' என்று மறித்திருந்தாள் பார்வதி.*

*''யார் எழுதியது என்ற உண்மை தெரிஞ்சாகணும்"*

*சத்தம் போட்டுக் கத்தினாள்.பையன்கள் ஒருத்தர் கூட அசங்கவில்லை. காட்டிக் கொடுத்த பழி தன்மேல் இறங்கிவிடும் என உத்தமசீலனான சிலர் பயந்து போயிருந்தனர். அறியமுடியாதபடி எல்லா முகங்களும் ஒரே முகங்களாய் இருந்தன. ஒவ்வொருவர் நோட்டுப் புத்தகமாக பார்த்து கையெழுத்தை ஒப்பிட்டுக் கண்டுபிடிக்கும் ஒருவழியுண்டு. ஆனால் அது ஈரெட்டான மதிப்பிடல் வழி. சிலருக்குக் கையெழுத்து வேறு; கரும்பலகை வேறு. அந்தச் சாகசம் கைவந்தவர்கள் பையன்களாக இருந்தார்கள்.*

*மகேந்திரன் பார்வதியைத் தள்ளிவிட்டு கரும்பலகையை கைக்குட்டையால் அழித்திருந்தான். அழித்த பின்னர் பையன்களிடம் நிம்மதிப் பெருமூச்சு உண்டானது.நெஞ்சைப் பிடித்து உலுக்கிய பயத்தின் வேர்கள் இவ்வேளை அலைதல் அடங்கி சற்றே ஓய்ந்தன. ஆயினும் நடுக்கம் முற்றாக நீங்கி விடவில்லை.*

*விடுமுறை எடுத்திருந்த ஆசிரியர்களில் தருமர் ஓவிய ஆசிரியர், நீதிபோதனை ஆசிரியர் என்கிற பொறுப்பினையும் வகித்தார். அவர் ஒருவாரம் விடுப்பு எடுத்திருந்தார்.*

*3*

*பெயருக்குப் பொருத்தமாய் நாயகி எட்டாம் வகுப்புப் பிள்ளைகளில் அழகியாக இருந்தாள். ரத்தினக் கல் மாதிரி தனித்துத் தெரிந்தாள்; மொத்தப் பள்ளிக்கூடமும் அவள் அழகால் சுண்டப்பட்டது. நாயகி கடந்து போகையில் பள்ளிக்கூடச் சுவரில் சாய்ந்தபடி கிளியோபாத்ரா என சில பையன்கள் முணுமுணுத்தார்கள். அதுவும் மாசார்பட்டி கிளியோபாட்ரா ! அச்சடித்த*

தாளில் கண்டது தவிர மீனாட்சிபுரம் மாணவர்கள் கிளியோபாட்ராவின் காலத்தில் வாழ்ந்ததும் இல்லை; நேரில் தரிசித்ததுமில்லை.

குந்துவான் ஆட்டத்தில் தூக்கிச் செருகிய பாவாடையின் கீழ் முழங்கால்களின் கீழ் மஞ்சள் கடைசல் கால்கள் பளிச்சிடும் .குதிகால் தசைகளில் ஓடும் பச்சைப்பசிய நரம்புகள் ஒய்யாரம் கொண்டு மினுக்கிட்டன. ஒரு பறவையின் பாதங்கள் போல சவ்வு விரியும் அகன்ற பாதங்கள். அவை மண்ணில் பதிந்து மேலெழும் வேளை மென்நடை உருவாகும். தானொரு அழகி என்ற பாவமோ, திமிர்ப் பார்வையோ நாயகியிடம் வெளிப்பட்டுக் கண்டதில்லை. பையன்களின் கிண்டலடிப்பு, கிளியோ பாத்ரா முணுணுப்பு அவளை ஒருபோதும் தொட்டதில்லை. முணுமுணுத்தலோ, முறைப்போ காட்டி அவள் எதிர்வினை ஆற்றியதைக் கண்டவரில்லை.

மீனாட்சிபுரத்தை இரண்டாகப் பிளந்துகொண்டு மதுரைச் சாலை தெற்கு வடக்காய் நீளுகிறது. ஊர் மந்தைதாண்டி ஒரு ஒத்தைக்கண் பாலம் கடந்து தெற்குச் சாலை நீண்டு செல்லும். பாலத்தின் கீழ் ஒரு ஓடை; ஓடை என்பதன் இலக்கணத்தை எக்காலத்திலும் அது நிரூபிக்க சுற்றியுள்ள தோட்டக்காடுகளின் விவசாயிகள் விட்டதில்லை. தோட்டக்காடு தண்ணீர் குடிக்கக் குடிக்க, சம்சாரிகள் தோட்டக் கிணறுகளில் ஓடையில் இருந்து குழாய் மூலம் ஏற்றி நிரப்பி விடுகிறார்கள்.

பாலம் கடந்து ஓடைப்பள்ளத்தில் இறங்கி கரையேறியதும் தொடங்குகிறது மாசார்பட்டி செல்லும் சரள்மண் பாதை. எட்டாம் வகுப்பு நாயகி. அச்சம்மாள், லோகேஸ்வரி, மணிமொழி நால்வரும் ஓடைப்பள்ளம் இறங்கி மேடேறி வண்டிப் பாதையில் நடப்பார்கள். பள்ளியிலிருந்து திரும்பும் மாணவிகளுக்காக காத்திருந்தன ஒற்றைக் கண் பாலத்தின் மீது காமஇச்சை கொண்ட இருகண்கள். ஒவ்வொரு நாளும் காத்திருப்பு. அந்தப் பெண்களைப் பார்த்து மோகன்ராசின் கொச்சையான சேட்டைகள்.

நான்கு பெண்களுடன் மூன்று மாணவர்களும் மாசார்பட்டியிலிருந்து உடன் வந்தனர். ராமலிங்கம் தவிர மற்ற மாணவர் இருவரும் மோகன்ராசைப் பந்தாடும் வல்லமை கொண்ட தடித்தடிப் பையன்கள். பெண்கள் இன்னும் வேக நடை கற்கவில்லை அவர்களுடைய நடைக்கு ஈடுதர பெண்பிள்ளைகள் ஓடிஓடித்தான் தொடர்ந்தனர். உழைக்கும் பெண்களெனில் எதைப் பற்றியும் கவலை கொள்ளாத உழைப்பின் வேகநடை வந்திருக்கும்; இவர்கள் பொத்திபொத்தி மெதுநடை நடந்தார்கள். மாணவிகள் ஆடி அசைந்து வருவதற்கு நேரமாகுமென மூவரும் வேகமாய் கடந்து போய்விடுவதுண்டு. மோகன்ராசு அங்கு வந்து உட்காருவதும் கொச்சைப் பேச்சு பேசுவதும், குறிப்பாய் நாயகிமேல் காமக்கோட்டி பிடித்து அங்கசேஷ்டை செய்வதுமென இதை மூவரும் அறியார்.

இன்ன நேரம் என்று இல்லை, வேலை வெட்டி இல்லாமல் காமக்கோட்டி பிடித்து விரட்டிக்கொண்டு திரிபவனுக்கு நேரக் கணக்கு உண்டா? ‘‘நாயகி எங்கெங்கு செல்கிறாயோ, நீ செல்லுமிடமெங்கும் நான் வருவேன்’’ என அவள் கண்ணெதிரே போய் நிற்பான். அன்றைக்குப் பள்ளி விட்டதும் ஊர் திரும்புகையில் நாயகி இரண்டு பாகம் பின்தங்கினாள். ஒத்தைக் கண் பாலத்தில் அமர்ந்த அவனுக்கு வாய்ப்பாக அமைந்தது. நெருங்கி வந்த அவனுடைய கையில் நாயகியின் தாவணி இழுபட்டது. ஓடைப் பள்ளத்தில் இறங்கி கரையேறி தாமதித்த பெண்பிள்ளைகள் நாயகிக்கு நடக்கவிருக்கும் ஆபத்துணர்ந்து, மீண்டும் பள்ளத்தில் இறங்கி ஓடிவந்தார்கள்.

அதற்குள் மோகன்ராசின் பாகவதர் முடியைக் கொத்தாகப் பிடித்து, காலில் இருந்த செருப்பைக் கழட்டி அடித்துக் கொண்டிருந்தாள் நாயகி. தலை, கன்னம், காது, வாய், தடுக்க வந்த கைகள் என

வீசினாள். மோகன்ராசு, எதிர்த் தாக்குதலை அதிலும் மோசமான செருப்படிகளை எதிர்பார்க்கவில்லை. பின்னால் ஓட எத்தனித்தபோது, பார்வதி ஞானசவுந்தரி என எட்டாம் வகுப்புப் பெண்கள் படையொன்று அவனைத் துரத்தி வந்து கொண்டிருந்ததைக் கண்டான். பயந்து இடப்பக்கமாக ஓடாமலிருந்திருந்தால் அவன் மீது படையெடுப்பு நடந்திருக்கும். முத்தின ஆளான, திமிர்கொண்ட உடலின்மேல் பெண்களின் காலணிகள் அணிவகுப்பு செய்திருக்கும். இன்ன லெக்கு என்று அறியாதபடிக்கு, காடுகரை என்று பாராமல் கல்லும்முள்ளும் கீற குறுக்காக ஓட்டம் பிடித்துக் கொண்டிருந்தான். அந்த ஓட்டம் மும்பையில் போய் நின்றது. அவன் மும்பையில் இருப்பதாக ஒரு வாரம் கழித்து அவன் வீட்டுக்குச் சேதி வந்தது.

*4*

கடைசி சனிக்கிழமை பள்ளியில் மாணவர்சங்கக் கூட்டம். அரைநாள் பள்ளிக்கூடம். மதியம் விடுமுறை. தூரம் தொலைவெட்டிலிருந்து வரும் வெளியூர்ப் பிள்ளைகள், வேணாத வெயிலில் திரும்பி ஊர்போக வேண்டியிருந்த போதிலும், கடைசி சனியைத் தவறவிடுவதில்லை; அத்தனை இளம்மனசுகளும் துள்ளாட்டம் கொண்டு, தவ்வாளி போட்டுத் தாவி வந்தன.

மாணவர் சங்கக் கூட்டத்தில் என்னென்ன உண்டு?

பாடல், கதை சொல்லல், அழிப்பாங்கதை, கோமாளி ஆட்டம், அகடவிகடப் பேச்சு எனப் பல தினுசுகளும் பரிமாறப்படும். அழிப்பாங்கதை ஒருவரின் புத்தியை உரசிக் கூர்மைப் படுத்தும். அழிப்பாங்கதை என்கிற விடுகதை போட்டுவிட்டு கூட்டத்திலிருந்து பதிலை எதிர்பார்ப்பார்கள்.யாரிடமிருந்து இந்த விடுகதையை அறிந்து கொண்டனரோ அவரும் வந்திருப்பார். மாணவர் சங்கக் கூட்டத்தில் பெற்றோருக்கும் மற்ற பெரியவர்களுக்கும் அனுமதியுண்டு.

தன் பிள்ளை இவ்வளவு புத்திசாலித்தனமாய் இருக்கிறான் என்பதை கவனிக்க, சோதனை செய்ய வந்தது போல் தோன்றும். தங்களின் சின்னஞ்சிறு குஞ்சு எப்படி ஒரு கலைக்கூடத்தை உருவாக்குகின்றது என ஆசிரியமார்களும் பெற்றோரும் அதிசயித்து உட்கார்ந்திருப்பார்கள். தூக்கணாங் குருவிக்கூடு போல இந்தப் பிஞ்சுகள் என்னமாய் வடிவமைக்கிறார்கள் என்பதில் கிறங்கிப் போனார்கள். இது பிள்ளைகளின் ஆறு; அவர்களின் அணை;அவர்களின் மதகு; எந்த நேரமும் அவர்கள் திறந்து விட, பயன்படுத்த உரிமையுண்டு. இதையெல்லாம் வடிவமைக்க நீதிப்போதனை வாத்தியார் பொறுப்பில் ஓவிய ஆசிரியரிருந்தார்.

போன சனிக்கிழமை காலை மாணவர் சங்கக் கூட்டம் நடைபெற்றபோது,

“கலையே உன் விழி கூட கவி பாடுதே

தங்கச் சிலையே உன் நிழல் கூட ஒளிவீசுதே ”

ஏ.எம். ராஜா பாடிய திரைப்படக் காதல்பாடலை துளசிமணி இனிமையாக இசைத்தான். பாடல் பதின்ம வயதுகளிடை மட்டுமல்ல, பெரிய ஆட்கள் பல பேரின் நாக்கிலும் இதயத்திலும் ஒட்டி ஏலவே ஒலித்துக் கொண்டிருந்த பாடல். துளசிமணி அதை வெளிப்படையாகப் பாடினான்.

பாடல்கள், ஒலிச்சித்திரம், கதை வசனம், காதல்பார்வை, திரை உடல்மொழி என பள்ளிகளில், வீதிகளில், வீடுகளில் சில பதின்ம வயதுகள் நடமாடும் ‘டூரிங் டாக்கீஸ்களாக’ தென்பட்டனர். ஓலைக் கொட்டகை (டூரிங்டாக்கீஸ்) யிலிருந்து இறக்குமதியாகி பதின்மங்களில் கொப்பளித்தது இளம்பருவ வெக்கைத் தாக்கம்.

மாணவர் சங்க கூட்டத்தின் நிறைவில் ஓவியாசிரியர் மாணவர்கள் முன்வந்து நின்றார்.

''இனியும் இதுபோல் ஒரு பாடல் இங்கே ஒலிக்கக்கூடாது" என்றார். 'அஃதொரு காதல் பாடல் அல்ல, காம இச்சை கோர்த்த பாடல். எத்தனையோ பிள்ளைகள் தம் வீடுகளில் பெற்றோரிடம் உறவுகளிடமென்று கேட்டு, காத்திருந்து, வாதனைப்பட்டு சேகரித்து வருகிறவைகள இங்கே நமக்குத் தருகிறார்கள்; அவர்களை எள்ளி நகையாடுவது போலுள்ளது இந்தப் பையனின் பாடல்' என்று சாடினார். அனைவர் பார்வைகளும் துளசிமணி மீது பதிந்தன; அவன் தலை நிமிரவில்லை.

''இன்று ஒலித்த பாடல் நமக்கு ஒரு அவமானம்"

அன்றைக்கு நடந்ததை விட நேற்று நடந்த 'கரும்பலகை வாசகம்' பலமடங்கு குரூரமான பெண்சீண்டல். மொத்த வகுப்பும் ஆண் பார்வையில் இயங்கியிருந்தது.வட்டாரமெங்கும் வேறெந்தப் பள்ளியிலும் வெளிப்பட்டிராத, மண்ணுக்கு ஒவ்வாத கலாச்சாரம். இம்மாதிரி நிகழ்வுகளில் ஒழுங்கு நடவடிக்கையில் தலைமை ஆசிரியை சந்திரமதியை எவரும் 'பீட்' அடிக்க (தோற்கடிக்க) முடியாது.

மோகன்ராசு என்ற சண்டியர் ஊரைக் காலிசெய்து விட்டு ஓடினான். மாணவச்செல்வங்கள் தங்களுக்கு என்ன நேரும் என்னும் யோசனையின் அந்தகாரத்தில் மூழ்கினர்.யோசிப்புகள் முட்டி உடைக்கவியலாத இருட்டாக இருந்தது.நெஞ்சு பதக்,பதக் என்று துடிக்க, ஓவிய ஆசிரியரின் வருகைக்காக காத்திருந்தனர். காத்திருந்த அனைவரது கண்களிலும் ஒருவித நடுக்கம் குடியேறி இருந்தது. ●

---

கவிதை

# கணினி வழிவமைப்பு



எண்ணொடு எழுத்தும் இங்கே
　　எழிலுரு காணும்; நோக்கும்
கண்ணொடு உறவு கொள்ளும்
　　கவிதையும் பாட்டும்; தாரும்
வண்ணமே பொருளைச் சொல்லும்
　　வடிவமே அசையைச் சொல்லும்
சீண்டுமாம் மனதை ஏட்டின்
　　சீர்களும் உரைந டையும்

தலைப்பினைப் பார்த்த தற்குத்
　　தகுந்தநல் ஓவியத்தைக்
கலைநயத் தோடு சேர்க்கக்
　　கதையையும் மாற்றிச் சொல்லும்
புலையென சிந்தை யாலே
　　புனைந்ததோர் ஏடே ஆயின்
குலையென கற்பனையை
　　கொடுத்திடும் வடிவ மைப்பாம்

கற்பனைக் கேற்ற வண்ணம்
　　காட்டலாம் அடடா ஏட்டைப்
பற்றியே பேச வைக்கும்
　　பாங்கினைத் தரலாம் கண்டு
முற்றுமே பொருளுக் கேற்ற
　　முகங்களை அதிலே தார
நற்றுணை வடிவ மைப்பாம்
　　நம்பினேன் ஐயம் இல்லை

**தமிழ்நெஞ்சம் அமின்**
பிரான்சு

# கொஞ்சம் இலக்கணம்!

ஆ.அரிமாப்பாமகன்



## முரண்!

"சொட்டு சொட்டுன்னு சொட்டுது பாரு இங்கே! – மழை
கொட்டு கொட்டுன்னு கொட்டுது பாரு அங்கே!

கஷ்டப்படும் ஏழை சிந்தும் நெற்றி வேர்வை போலே, – அவன்
கஞ்சிக்காகக் கலங்கிவிடும் கண்ணீர்த் துளியைப் போலே, (சொட்டு)

முட்டாப் பயலே மூளை இருக்கா என்று ஏழை மேலே
துட்டு படைச்ச சீமான் அள்ளிக் கொட்டுற வார்த்தை போலே, (மழை கொட்டு).

**(அ. மருதகாசி, ஆடவந்த தெய்வம்).**

***

'கோபம் இருக்கும் இடத்தில் தான் குணம் இருக்கும்' என்பார்கள்.

கோபமும் குணமும் ஒன்றிற்கொன்று எதிரிடைப் பண்பு ஆகும். ஒன்றிற்கொன்று மாறுபாடான முரணான பண்பு. இவ்விரண்டையும் இணைத்து ஒரு சொலவடை!

இப்படி முரணானவற்றை உவமையாக, கருத்தாகப் பாடலில் (உரைநடையிலும் பேச்சிலும் கூட) கூறுவது / தொடுப்பது 'முரண் தொடை' (oxymoron) எனப்படும்.

எடுத்துக்காட்டாக,

*"முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்."*

*"செய்யுளில், சொல் அல்லது பொருள் முரண்பட்டு நயம் பயக்கும் வகையில் அமைவது முரண் தொடை ஆகும். இது செய்யுளின் வெவ்வேறு அடிகளின்*

*முதற் சீர்களில் அமையலாம் அல்லது ஒரே அடியின் வெவ்வேறு சீர்களிலும் அமையலாம்."*

### முரணுக்கு இலக்கணம்:

**"மொழியினும் பொருளினும் முரணுதல் முரணே"** *(தொல்காப்பியம், செய்யுளியல் 91).*

எடுத்துக்காட்டாக:

**"பொய்மையும் வாய்மை இடத்த புரைதீர்ந்த
நன்மை பயக்கும் எனின்."**

*(திருக்குறள் 292).*

**"செல்விருந்து ஓம்பி வருவிருந்து பார்த்திருப்பான்
நல்விருந்து வானத் தவர்க்கு."**

*(திருக்குறள் 86).*

**"புறந்தூய்மை நீரான் அமையும் அகந்தூய்மை
வாய்மையால் காணப் படும்."**

*(திருக்குறள் 298).*

* மேற்கூறப்பட்ட குறட்பாக்களில் பொய்மை x வாய்மை, செல்விருந்து x வருவிருந்து, புறந்தூய்மை x அகந்தூய்மை

என எதிரெதிர்ப் பொருள்கள் கூறப்பட்டமையால் இவை பொருள்முரண் எனப்படும்.

**“வேரல் வேலி வேர்க்கோட் பலவின்**
**சாரல் நாட! செவ்வியை ஆகுமதி!**
**யார தறிந்திசி னோரே சாரல்**
**சிறுகோட்டுப் பெரும்பழந் தூங்கி யாங்கிவள்**
**உயிர்தவச் சிறிது காமமோ பெரிதே.”**

*(குறுந்தொகை 18).*

**கருத்துரை:** *மூங்கிலை வேலியாகக் கொண்ட மலைநிலம். அங்கே, வேரிலுள்ள கொம்புகளில் பலாப்பழங்கள் தொங்குகின்ற மலைநாட்டுத் தலைவனே! விரைவில் தலைவியை மணம் செய்துகொள்ளும் காலத்தை உண்டாக்கிக் கொள்வாயாக! உன்னைத் தவிர யாரால் தலைவியின் நிலையை அறிந்துகொள்ள முடியும்? மலையிலே, சிறிய கொம்பிலே பெரிய பலாப்பழம் தொங்கிக் கொண்டிருப்பதுபோல, தலைவியின் உயிரோ மிகச்சிறியது; அவள் உன்மேல் கொண்ட விருப்பமோ பெரியது.*

* *சிறு (கோடு)* x *பெரும் (பழம்);*

*(தவச்) சிறிது* x *பெரிது.*

**“கோடு கொண்டு எழுந்த கொடுஞ் செலவு எழிலி,**
**பெரும் பெயல் பொழிந்த சிறு புன் மாலை”**

*(முல்லைப்பாட்டு: 56).*

**“சிறுகுடிக் குறவன் பெருந்தோட் குறுமகள்**
**நீரோ ரன்ன சாயல்**
**தீயோ ரன்னவென் உரனவித் தன்றே.”**

*(குறுந்தொகை 95: 35).*

* *சிறு (குடி)* x *பெரும் (தோள்); நீர்* x *தீ.*

** இதில் குடி, தோள் - ஒன்றிற்கொன்று தொடர்பற்ற வேறு வேறு பொருள். ஆனால் அடைமொழியாக வந்த சிறு x பெரு - எதிரெதிர்ச் சொற்களாயமைந்து சொல்முரணுக்கு எடுத்துக்காட்டாயின.

* *நீர்* x *தீ - பொருள்முரண்.*

**“துப்பினால் செய்த கையொடு கால் பெற்ற துளி மஞ்சு**
**ஒப்பினான் தனை நினைதொறும், நெடுங் கண்கள் உகுத்த**
**அப்பினால் நனைந்து, அருந் துயர் உயிர்ப்புடை யாக்கை**
**வெப்பினால் புலர்ந்து, ஒரு நிலை உறாத மென் துகிலாள்.”**

*(கம்பராமாயணம் 5076).*

* *அப்பினால் நனைந்து* x *வெப்பினால் புலர்ந்து;*

*நனைந்து* x *புலர்ந்து - பொருள்முரண்.*

*[ஒப்பு நோக்க:*

“.... Bear this to the queen,

Wet with my tears, and dried again with sighs;”

(Christopher Marlow, Edward II, Act V, Scene 1: 118-119)

* wet x dried].

**“பருங்கண் கவர்கொலை வேழப்**
**படையோன் படப்படர்தீத்**
**தருங்கண் ணுதற்றில்லை யம்பலத்**
**தோன்தட மால்வரைவாய்க்**
**கருங்கண் சிவப்பக் கனிவாய்**
**விளர்ப்பக்கண் ணாரளிபின்**
**வருங்கண் மலைமலர் சூட்டவற்**
**றோமற்றவ் வான்சுனையே!”**

*(திருக்கோவையார் 213).*

* *கருங்கண்* x *சிவப்ப* x *விளர்ப்ப (வெளுக்க).*

**“நஞ்சினோடு அமுதம் கூட்டி**
**நயனங்கள் ஆன என்ன,**
**செஞ்செவே நீண்டு. மீண்டு,**
**சேயரி சிதறி, தீய**
**வஞ்சமும் களவும் இன்றி,**
**மழை என மதர்த்த கண்கள்.**
**அஞ்சன நிறமோ? அண்ணல்**
**வண்ணமோ? அறிதல் தேற்றாம்.”**

*(கம்பராமாயணம், கோலம்காண் படலம் 1131).*

* நஞ்சு x அமுதம்.

முரண் = மாறுபாடு.

**“யாமம் கொள்பவர் சுடர் நிழல் கதூஉம்
கடுமுரண் முதலைய நெடுநீ ரிலஞ்சி”**

*(புறநானூறு 37: 910).*

**“முருகு முரண்கொள்ளும் தேம்பாய்
கண்ணி”**

*(அகநானூறு 28: 6).*

பொருள்:

நீதான், “வேறுபட்ட பல மணங்களும் கமழும், தேனொழுகும் கண்ணியினைச் சூடியவனாக வரும்,...

**“போர் உறும் உள் காமப் புது மயக்கம்
நின்னுடைய
பேர்அறிவைக் கொள்ளைகொளும்
பித்தம் காண் சோர் அறிவில்
கள் அடைக்கும் காமக் கடு மயக்கம்
மெய்ந் நெறிக்கு ஓர்
முள்அடைக்கும் பொல்லா முரண்
கண்டாய் அள்ளல் உற
ஏதம் எலாம் தன்னுள் இடும் காமம்
பாதகத்தின்
பேதம் எலாம் ஒன்றிப் பிறப்பிடம் காண்
ஆதலினால்”**

*(திருவருட்பா 3, 3, 1965: 595600).*

[முரண் = வலிமை என்ற பொருளும் உண்டு.

**“ஒலிவெள் ளருவி யோங்குமலை நாடன்
சிறுகட் பெருங்களிறு வயப்புலி தாக்கித்
தொன்முரண் சோருந் துன்னருஞ் சாரல்
நடுநாள் வருதலும் வரூஉம்
வடுநா ணலமே தோழி நாமே.”**

*(குறுந்தொகை 88).*

உரை: தோழி! ஒலிக்கும் வெள்ளிய அருவியையுடைய உயர்ந்த மலைகளுள்ள நாட்டையுடைய தலைவன், சிறிய கண்ணையுடைய பெரிய களிறு வலியையுடைய புலியை எதிர்த்துப் பொருது தனது பழைய வலி சோர்தற்கிடமாகிய மக்கள் அடைதற்கரிய சாரலின் வழியே இடையிரவில் வருதலையும் செய்வான்; அங்ஙனம் அவன் வருதலி னால் நமக்கு உண்டாகும் பழிக்கு நாம் நாணேம்!

* சிறுகண் x பெரும்களிறு.

** தொல் முரண் = பழைய வலிமை.]

முள் - முருடு - முரள் - முரளுதல் - முரணுதல் - முரண்!

முரண்டுதல் - முரண்படுதல் - முரண்டுபிடித்தல் = ஒட்டாரமாயிருத்தல் = மாறுபட்டு நிற்றல் = முட்டாள், அறிவில் முட்டுப்பாடு உடையவன், (moron).

முண்டுதல் - திமிறுதல்.

முரள் - முரடு - முருடு - முரட்டுக்குணம்!

இப்படி எதிரெதிராகக் கூறும் முரண்தொடை ஆங்கிலத்தில் oxymoron எனப்படும்.

“Here’s much to do with hate, but more
with love.
Why, then, O brawling love, O loving hate,
O anything of nothing first create!
O heavy lightness, serious vanity,
Misshapen chaos of well-seeming forms,
Feather of lead, bright smoke, cold fire,
sick health. .”

(William Shakespeare, Romeo and Juliet , Act I, Scene 1: 175-180).

* hate x love, loving x hate, anything x nothing, heavy x lightness, cold x fire, sick x health!

** cold fire ஒப்பிட்டுப் பார்க்க:

**“நீங்கின் தெறூஉம் குறுகுங்கால்
தண்ணென்னும்
தீயாண்டுப் பெற்றாள் இவள்!”**

*(திருக்குறள் 1104).*

பொழிப்புரை: நீங்கினால் சுடுகின்றது; அணுகினால் குளிர்ச்சியாக இருக்கின்றது; இத்தகைய புதுமையான தீயை இவள் எவ்விடத்திலிருந்து பெற்றாள்?

**“அஃகி அகன்ற அறிவு என் ஆம் யார்
மாட்டும்
வெஃகி வெறிய செயின்.”**

*(திருக்குறள் 175).*

* உணர்வால் நுணுகிப் பொருளால் பரந்த ஒருவரது கல்வியறிவு (பாவாணர் உரை).

*முரண்* - moron!

*அஃகுதல் = குறுகுதல், நுண்மையதாதல், கூரியதாதல்.*

*அஃகுமுரண்* › *ak + moros = oxymoron!

moron (n.)

1910, medical Latin, "one of the highest class of feeble-minded persons," from Greek (Attic) mōron, neuter of mōros "foolish, dull, sluggish, stupid," a word of uncertain origin. The former connection with Sanskrit murah "idiotic" (see moratorium) is in doubt. Latin morus "foolish" is a loan-word from Greek.

Adopted by the American Association for the Study of the Feeble-minded with a technical definition "adult with a mental age between 8 and 12;" used as an insult since 1922 and subsequently dropped from technical use. Linnæus had introduced morisis "idiocy."

oxymoron (n.)

in rhetoric, "a figure conjoining words or terms apparently contradictory so as to give point to the statement or expression," 1650s, from Greek oxymōron, noun use of neuter of oxymōros (adj.) "pointedly foolish," from oxys "sharp, pointed" (from PIE root *ak- "be sharp, rise (out) to a point, pierce") + mōros "stupid" (see moron). The word itself is an illustration of the thing. Now often used loosely to mean "contradiction in terms."

****

## நூலங்காடி



விலை ரூ.80



விலை ரூ.20



விலை ரூ.160

பதிப்பு : த.ரெ.தமிழ்மணி,
பாவாணர் பதிப்பகம்,
வேலங்குடி,
கீழப்படுகை( அஞ்சல்),
திருவாரூர் வட்டம் 610 109
பேசி 98 420 11 3 44

## மீட்பகம்

அரசின் கைதிகளாய்
எண்கள் இட்டு நிற்கின்றன
சாலையோர மரங்கள்!

வணிகப்பலகை சிலுவை
சுமந்து மடியும்
உயிர்த்தெழா மழை மீட்பகம்.

நெடுஞ்சாலைச் சீரமைப்பு
கிழித்துச் சிதைபடும்
காற்றின் சலவையகம்.

கிடத்தப்படுகின்றன
கல்லறையாய் மரவாடிக்குள்
மரங்கள்!

மண்ணின் ஆடை மரங்கள்
களையப்படும்போது
கண்ணன்களாய் அஃறிணைகள்.

கோடாரிகளை முறித்து
மரங்களை மணக்கச் செய்ய
எந்த பட்டத்தாரும் நோக்கவில்லை.

நிழலறுந்துக் கானல் தரியும்
பூமியை ஒருநாள்
சூனியம் சூழும்.

இந்தத் தாளில்
எத்தனை மழைத்துளிகள்
புதைந்தனவோ...!

**- கடம்பை அறிவு**

# வீட்டுக்கு வீடு வானொலிப் பெட்டிக்கு அருகில்.!

இரா.மோகன்ராஜன்



செல்வத்துள் செல்வம் செவிச் செல்வம் ம்பாங்க பெரியவங்க. வானொலிப் பெட்டிப் பட்டித்தொட்டி எங்கும் அறிமுகமாகி ஒலிச்சப்போ அப்படித்தான் இருந்துச்சு.

இன்னைக்கு டீவிய செவத்துல மாட்டி கண்ணு விரிய பாக்குற தலமொறைக்கு காதுவிரிய வானொலி பொட்டிக்கிட்டே பழியா கெடந்தவங்களப் பத்தி கேக்க அதிசயமாத்தான் கெடக்கும்.

பொட்டி ஒரு எடத்துல இருந்தாலும் கசால, மாட்டுக் கொட்டாவ ஆட்டுரலுனு வேலையில கையும், காலும் பரபரத்தாலும் காது ரேடியோ பொட்டிலாதாம் இருக்கும்.

பாட்டி செல்லப் பொட்டியத் தொறந்து வச்சு வெத்தலய அதக்கிக்கிட்டுக் கத சொன்னதுப் போவ, பாட்டியே வாய பொத்திக்கிட்டு ரேடியோ பொட்டிக்கிட்ட ஒதுங்கிக் கெடக்குற காலம் வந்துச்சு.

ஒரு பொட்டி பேசும்முன்னு அப்போலாம் யாரும் நெனைச்சுக் கூடப்பாத்ததுக் கெடையாது.

ஊருக்குள்ள ஓட்டு வீட்டுக்காரங்க, மச்சு வீட்டுக்காரங்க, பஞ்சாயத்து தலைவருங்க வீட்டூலதாம் ரேடியோ பொட்டி இருந்துச்சு.

டீவி பொட்டிப் போலதான் அப்போ வந்த ரேடியாப் பொட்டியும் கரகர மொமொர இரைச்சலோட இருந்துச்சு. காதத் தீட்டி வெச்சுகிட்டுதான் கேக்கனும்

கொஞ்சம் நாட்டு நடப்பு, நெறய புரியாத சங்கீதம். சினிமாப் பாட்டு அப்புறம் இந்தி, இங்கிலீசுனு படிச்சுட்டு இருந்தா அந்தப் பொட்டி பாடினா என்னா, பேசினா என்னா..அப்படித்தான் இருந்துச்சு டிரங்கு பொட்டிப் போல.

டிவி வந்து சினிமா கொட்டகைய இழுத்து மூடுனதுப் போல ரேடியோ வந்து கிராமப்போனை அடக்கிவெச்சுது. அது பாட்டுப்பொட்டி, இது பாடுற பேசுற பொட்டி. எதுக்கு மவுசு கூடும்?

எங்க விட்டுலேயும் கிராமபோன் இருந்துச்சுனு சொல்லிக்க அதோட பூவரசம் பூ வாய்தான் பரண்ல கெடந்துச்சு, பொழுது போவலேனா அதை எடுத்து வெச்சு ரேடியோ செய்தி வாசிக்கிறது.. பாட்டுப்பாடுறது. ரேடியவோட தாக்கமுன்னு சொல்லலாம்.

எங்க சின்ன வயசுல கிராமபோன் போயி ரேடியோ பொட்டி வந்து அதுல காசட் போட்டு பாட்டு கேக்குற வசதியும் 2இன் 1ங்குற பேருல வந்து கிராமபோனையும் ரேடியோவையும் ஒன்னா வச்சு ஒன்ன ஒன்னு தவிர்க்க முடியாம செஞ்சுட்டாங்க. வானொலிப் பொட்டியத் தவிர்க்க முடியாம ஆக்கிடுச்சு.

மாடி வீட்டுலயும் மச்சு வீட்டுலயும் கூடத்துல பாடிட்டு இருந்த ரேடியோ பொட்டி பேசுறத கேக்க காத தீட்டி வச்சுக்கனும்..இல்லே அவங்க வீட்டு தாழ்வாரத்துல இட்லிக்கு மாவாட்டுற மச்சுவீட்டம்மாவுக்கு ஆட்டுரலுல மாவு தள்ளிவிட்டுடே கேக்கனும். நாடகத் தொடர கேக்குறது ஒரு நாளு விட்டுப் போனா மறு நாளுக்குத் தண்ணி புடிக்கிறப்பவோ.. ஓசில ஆட்டுரலுல மாவாட்டுறப்பவோ கேட்டு வெச்சுக்கலாம்.

சிலசமயம் ரேடியோ நாடகத்தவிட அமிர்தம் அம்மா பாவனையோட கேக்கவிட்டுப்போன நாடகத்தச் சொல்றது ரொம்ப நல்லாவே இருக்கும்.

ரேடியோ பொட்டி கூடத்துக்குள்ளாவே புளி மூட்டக்கணக்கா எத்தனநாளுதாம் இருக்குறதுன்னு யோசிச்ச புண்ணியவான் துண்டுத் தீப்பெட்டி சைசுக்கு மாத்தினானோ இல்லியோ. வீடு, தெரு தெக்குன்னு கைக்குச் சின்னதா அடக்கமா பரவுச்சு. கரண்டு இருந்தாலும் இல்லேனாலும் ரேடியோ கேக்க முடிஞ்சுது. அந்தத் தீப்பெட்டி சைசுப் பொட்டிக்கு ட்ரான்சிஸ்டர்னு பேரு.

இந்த சின்னரேடியோ பென்னம் பெரிய ரேடியோ போல கரபுரா சத்தம் இல்லாம சமத்துப் பொட்டியா இருந்துச்சு.

டிரான்ஸ்சிஸ்டர் நாயி பேயி கையிலெலாம் வந்துட்டதாலே. மச்சு வீட்டு ரேடியோ மேலத்தெரு ரேடியோக்கு மவுசும் போச்சு சவுண்டும் போச்சு. செல்போனு வந்தப்போ பவுசு காமிச்சவங்க ஆண்ராய்டு சல்லுசானதும் அடங்கிப்போனாப் போல டிரான்சிஸ்டர் வந்து ஊர ரெண்டு பன்னுச்சு.

அப்போதான் செவிச்செல்வம் பேரு ஊர்வாய்ல அல்லாம ரேடியோ வழியா பிச்சுக்கிட்டுப் பரவுச்சு.

காது மந்தமான செல்வத்துக்கு மூனாவது காதா ட்ரான்சிஸ்டர் இருந்துச்சு. வயக்காட்டுல ஒதுங்குறப்போ கூட அவம் காதுல காச்சு மூச்சுனு ரேடியோ கிசுகிசுக்கும்.

“என்னாப்பா இன்னிக்கு நூசுன்னு?” யாராச்சும் நக்கலா கேட்டாலும் சீரியசா பதில் சொல்லுவான். திருச்சிராப்பள்ளி ரேடியோ ஸ்டேசன் “உழவர் உலகத்துலத்துலேந்து, இலங்கைத் தமிழ் ஒலிபரப்புக் கூட்டுதாபனத்தோட “பாட்டும் பதமும்” வரைக்கும் வரிசையா அடுக்குவான்.

ரேடியோ பொட்டிக்குள்ளே ஒக்காந்து எப்படிடா பாடுவாங்கன்னு கேட்ட அறிவரசனுக்குச் செவிச் செல்வம்தான் விஞ்ஞான வெளக்கமெல்லாம் கொடுத்து அவனை அறிவரசனாக்கினான்னா பாத்துக்குங்க.

என்னையும் அவனையும் நெருங்கிய நண்பனாக்கியது சிலோன் ரேடியோதான். ரேடியோ பொட்டினா சிலோன் ரேடியோன்னுதான் அர்த்தம். பக்கத்துல இருக்குற திருச்சி விவிதபாரதில சில்வண்டு பறக்கும்போல ஒரு சங்கீதம் கூட கேக்கமுடியாம விதவிதமா சவுண்டு வாரப்போ கடல் தாண்டிவார சிலோன் ரேடியோ ஸ்படிகமா கண்ணுல.. இல்லே இல்லே..காதுலஒத்திக்கலாம் போல இருக்கும். அப்படி ஒரு தெளிவு நீச்சுத்தண்ணிபோல.

விவிதபாரதிய ரா போதுலதான் கேக்க கொஞ்சம் தெளிவா இருக்கும். ஊரடங்கிடுதுல்ல..நம்ம செவிச் செல்வம் அதுக்கும் ஒரு அய்டியா வச்சுருந்தான், ஒரு சில்வர் டபராவுல தண்ணிய நெறப்பி ரேடியோ முன்னாடி வச்சுடுவான். இப்போ தெளிவா கேக்கும். அதுக்கும் அறிவியல் வெளக்கமெல்லாம் வச்சுருப்பான். யாரு கேட்டா.

செவிச் செல்வம்னு பேரு வந்ததே அவனொட 3வது காதா ரேடியோ மாறிப்போனதுதான். இன்னும்

நெருங்கிப்போனா இடைவெளி இல்லாம சிலோன் கேட்டுட்டுருக்குறத பாக்கலாம். கேக்குறது மட்டுமில்லே கைநெறய அஞ்சலட்ட வாங்கி எழுதிப்போட்டு அவன் பேரு ரேடியோலே சொல்றப்போ அவன் மொகத்தப் பாக்கணுமே..

காலையிலே பொங்கும் பூம்புனலில் ஆரம்பிச்சு இரவின் மடியில் ரேடியோ மடியில படுத்துதான் தூங்குவான்னா பாத்துக்குங்க.

அப்போலாம் ரேடியோ நண்பர்கள் வட்டம் இருக்கும். நம்ம செல்வம் வெளியூருக்கு போறதுன்னாலே அந்த கூட்டமாத்தான் இருக்கும். நம்ம செல்வத்துக்கு அங்க ரேடியோ செல்வம்னு பேராம்.

இளையபாரதத்துல கலந்துகிட்டு வந்து அது ஒலிபரப்பானப்போ அது நம்ம பக்கம் சரியா அலைவரிசை கிடைக்கலங்கற ஏமாத்தத்தைவிட சிலோன் வானொலிலே கே.எஸ்.ராஜா அவம் பேரைச். சொல்லலேனாதான் ரொம்ப ஏங்கிப்போவான். இலங்கை ஒளிபரப்பு கூட்டுத்தாவனத்தின் தமிழ் சேவை இரண்டின் ரசிகன் நான் என்றால் அவன் வெறியன். கே.எஸ்.ராஜாவையும் எனக்குப் பிடிக்குமுன்னா..அவனுக்கு அவரை மட்டுதான் புடிக்கும். “என்னா குரலு..என்னா கம்பீரம்னு!” நாள் பூரா சொல்லிட்டுருப்பான். குளத்துத் தண்ணிலே நின்னுட்டு” “வீட்டுக்கு வீடு வானொலிப் பெட்டி அருகில் அமர்ந்து நீங்கள் கேட்டுக் கொண்டிருப்பது.. திரைவிருந்து!”ம்பான்! கரையேறுற வரைக்கும் அவரு போல பேசுறேனானு மறக்காம கேட்டுக்குவான்.

“இலங்கைவானொலி அறிவிப்பாளர் பலருக்கு இங்கே தமிழகத்தில் சினிமாகாரங்களுக்கு இணையா ரசிகர்ங்க மன்றங்க இருந்துச்சுன்னு சொன்னா யாரும் இப்போ நம்பப்போறதில்லே..

மயில்வாகனன், பி.எச்.அப்துல்ஹமீது, மயில்வாகனம்சர்வானந்தா, ராஜகுருசேனாபதி, செல்வரட்னம், ராஜேஸ்வரி பாலசுப்ரமணியம், புவனலோசினி இப்படி வரிசைகட்டி தமிழ் சேவை அறிவிப்பாளர்கள் ரேடியோ பெட்டிய கலை இலக்கியப் பல்சுவைப் பெட்டியா மாத்தினாங்க.

கே.எஸ்.ராஜாவோட குரல் காதுகளை உறுத்தாத அதேவேளை கம்பீரம் நெறஞ்சக் குரல். நாள் பூரா அவரு ரேடியோவுல இருந்தாலும் அலுப்புத்தட்டாது. இதுல செல்வத்துக்கும் எனக்கும் கருத்து வேறுபாடே வந்ததேயில்லே.

‘நீயா’னு ஒரு படம். சிலோன்ல பிச்சுக்கிட்டு ஓடுனுச்சு. இது கே.எஸ். ராஜாவாலேதான்ங்குறது செல்வத்துக்கு அசைக்க முடியாத நம்பிக்கை. அந்தப் படம் மட்டுமில்லே சிலோன்ல ஓடுற படங்கள் கே.எஸ்.ராஜா வோட விளம்பர பாணியாலதான் வெற்றியாகுதும்பான்.

‘நீயா’ படத்துல என்ன சொல்கிறீர்கள்?” சிறிபிரியா என்பார். படக்காட்சி ஒன்று ஒலியேறும். ‘‘ஒரு நாக்கு உள்ளவங்கதான் உளருவாங்க எனக்கு இரண்டு நாக்கு!’’ என்பார் சிறிபிரியா.

திரைவிருந்து நிகழ்ச்சி முடியுறப்போ உங்களிடமிருந்து விடைபெறுவது என்று சொல்லி நிறுத்தி ‘ராஜானு சிறிபிரியா சொல்லும் காட்சி வசனத்தை ஒலியேற்றுவார் ராஜா.

லாரி டிரைவர் ராஜாகண்ணுனு சிவாஜி படம். இங்க ஓடாத படத்தை அங்க ஓட்டிக்காமிச்சாரு ராஜா. அதுல ஒரு பாட்டு நீ வரும் வரைதோரும் பார்த்திருப்பேன்னு..அப்டியே நிறுத்தி. ராஜானு டி.எம்.எஸ். சொல்றதைப் போட்டு திரைவிருந்தை முடிப்பாரு. தித்திப்பான, கேக்க அலுக்காத விருந்து அது.

அதுமட்டுமா?! திரைவிருந்தில் இடம் பெறும் படங்க சிலோன்லே எந்த எந்த ஊர்ல எந்தத் தியேட்டர்ல ஓடுதுங்குறத மூச்சுவிடாம ராஜாவாலதான் சொல்லமுடியும். கொட்டாஞ்சேனை தொடங்கி யாழ்ப்பாணம் வரை கடகடனு ஒப்பிப்பார்னா பாத்துக்குங்க.

பள்ளி கல்லூரி மாணவர்களுக்கான

போட்டிகள், ஆங்கிலம் கலக்காமல் பேசுவது என்று ராஜா வானொலியோட ராஜாவா வலம் வந்தாரு.

நம்ம செவிச் செல்வம் அப்துல் ஹமீதோடப் "பாட்டுக்குப் பாட்டு"க்கு மட்டும் ரசிகனா இருந்தான். பாடல் வரி சொன்னா டக்குனுப் பாட்டு சொல்வான்; வரி சரியாங்குறதுக்கு உத்தரவாதமில்லே.

இப்போ டி.விலே போற பல லைவ் நிகழ்ச்சிங்க அன்னிக்கு சிலோன் ரேடியோவோடவையா இருந்ததுதான்.

பூவும் பொட்டும், மங்கையர், மஞ்சரி ராஜேஸ்வரி சண்முகத்துக்கு இட்லி மாவு புளிக்காம இருக்க என்ன செய்யலாம்னு செல்விங்குற பேரில டிப்ஸ் எழுதி அதுலயும் கலந்துக்குவான்.

அது யார்ரா செவிச்செல்வினு பாத்தா அந்தக்கத ரேடியோ ஸ்டேசன் மாத்துறது போல சொல்ற கத மாறிப் போய்டும். அதவிடுங்க.

செவிச் செல்வம் தமிழ்ச்சேவை.யில அப்போ ஒலிபரப்பாவுர "இசையும் கதையும் மேலே ரொம்ப இன்வால்வாகி கத எழுத ஆரம்பிச்சான். கத உடுறது ஈசி.. கத எழுதுறது அப்படி இல்லேனு அவன் கத எழுதுறப்பத்தான் தெரிஞ்சிக்கிட்டான். அதுக்காக அவன் வீட்டுக்குத் தேடிப் போனாலும் அங்க இருக்கமாட்டான். அங்க மட்டுமில்லே. எங்கே இருக்கான்னு சொல்ல முடியாத அளவுக்கு தனிமையில கரஞ்சு கத எழுதி அதுக்குப் பொருத்தமா சினிமா பாட்டும் வச்சு அனுப்பினான்.

அந்தக் கதயிலதான் செவிச் செல்வத்தோட செவிச் செல்வி யாராயிருக்குங்குறதே புரிஞ்சுது. அவங்கதயையும், அவன் சுட்சுவேசன் சாங்கும் போட்டு அது ஒலிபரப்பானப்போ ஊரைக் கலக்குக் கலக்குனுச்சு. ஆன அவனத்தான் காணும். எங்க போனான் என்ன ஆச்சுனு யாருக்குமே தெரியாது.

பெறகு ஊரு சத்தம் அடங்கனப்போ, வூட்டுக்கு வந்து ரெண்டு நா சாப்பிடாம கெடந்தான். மூனாம் நா நண்பர்கள்கிட்டே சகஜமாயிட்டான். பழையபடி ட்ரான்சிஸ்டர் காதுல ஒட்டிக்கிச்சு.

இதுபோல செல்வம் காணாமபோனது ரெண்டாம் தடவயும் நடந்துச்சு. அதுக்கு அப்பறம் அவம் ட்ரான்ஸ்சிஸ்டரைத் தொடத்தானுமில்லே.

சிலோன்லே சிங்களவங்க தமிழாளுங்ககிட்ட கலவரம் செஞ்சு நாடு பூரா தமிழாளுங்களை வெரட்டி அடிச்சும், கொன்னும், பொருளுங்களை பிடிங்கிக்கிட்டு உயிரோட கொளுத்தினக் காலத்துல சிலோன் தமிழ்ச்சேவையும் நின்னுபோச்சு. விடுதலப்புலிங்களுக்கு ஆதரவா நடந்துக்கிட்டாருன்னு ராஜாவை சிலோன் ரேடியோவுலேந்து தூக்கிட்டாங்க. ராஜாவ தூக்கின சிலோன் ரேடியோ எப்டி ஒலிக்கும்? ராஜாதான் தமிழ்சேவை. தமிழ் சேவைனா அது ராஜாதான். கொஞ்ச நாளுலேயே தமிழ் ஒலிபரப்பும் நின்னு போச்சு. கொழும்புல ரேடியோகூட தமிழ் பேச முடியல.

அறிவுப்பாளர்களும்தான்.

ராஜா தப்பி வந்து கொஞ்ச நாள் விவிதபாரதிலே பாட்டுக்குப் பாட்டு நடத்தினாரு.

மதுரயில ராஜா கலந்துகிட்ட ஒருகலை நிகழ்ச்சிக்குக் கூடுனக் கூட்டம் கின்னசுரெக்கார்டுக்குப் போனுச்சு. அந்த கூட்டத்துல செவிச்செல்வமும் ஒராளு. அப்படி இருக்கப்போயிதான் ஒரு நா,

வீட்டுக்கு வீடு வானொலிப்பொட்டியில் வச்சுக் கட்டிப்போட்டக் காந்தக் குரலோன் கே.எஸ்.ராஜா சுட்டுக் கொல்லப்பட்டதாகக் கேள்விபட்ட அன்னைக்கு மறுபடியும் அப்படி அவன் காணாமல் போனான்.

போனவன் டி.வி. பொட்டிக் காலத்துலேயும் திரும்பி வந்தானில்லே. இப்போக் கிராம ஃபோன் கெடந்தப் பரண்ல அவம் ரேடியோ பொட்டிக் கெடக்கு. நாளைக்கு டிவி பொட்டியும்கூட கெடக்கலாம். செல்வமும், ராஜாவும் சாகுறவங்களில்லை.! அவங்கள்ளாம் காலத்தோட வாரிசுங்க.

●

# இன்னல் மாளிகை

## தமிழில்: கோ நடராசன்



## The Testments by Margaret Atwood

Chapter - 1

## The Ardua Hall

நீத்தார்களுக்கு மட்டுமே சிலைகளை வடிக்க அனுமதியுண்டு. ஆயினும் நான் உயிருடன் இருக்கும் போதே எனக்கு எப்படி அனுமதி தந்தார்கள்? மிகையச்சத்தில் நான் சிலையாய் போனேன்.

நான் செய்த பற்பல நற்செயல்களை பாராட்டி எனக்குசிலைஎழுப்பப்பட்டதாக, கல்வெட்டுச் செய்தி கூறுவதாக, அத்தை ஈகி சிலைபோல் படித்தாள். இது அத்தைக்கு மூத்தோர்களால் பணிக்கப்பட்டப் பணி.(இங்கு அத்தை என்ற சொல் உறவுமுறைச் சொல் அல்ல. இன்னல் மாளிகையில் பெண்கள் ஒருவரை ஒருவர் அழைக்க பயன்படும் விளி;) நான் பணிவுடன் நன்றிக்குறிக்காட்டிவிட்டு, என்னை மூடியிருந்த திரைச்சீலையின் கயிற்றை மெதுவாக இழுத்து விட்டேன். சிலைச்சீலை, சூறாவளியால் என்னை சுற்றி சுற்றி சுழன்று சுழற்றியது. நாங்கள் வாழும் இவ்வின்னல் மாளிகையில், பொதுவாக நாங்கள் உவகைக்குறிகளை வெளியிடுவதில்லை. இருப்பினும் கைதட்டல்கள் முனகலாய். பதிலுக்கு நான் சற்றே தலை சரித்தேன்.

என் சிலை என்னை விடப் பெரியதாகவும் இளமையாகவும் அழகாகவும் சிற்பக்கலை நெறிகளுக்கேற்ப செதுக்கப்பட்டிருந்தது. தமிழகக் கோவில் சிலைகளைப் போல்.

நேராக நின்று கொண்டிருக்கிறேன். முதுகும் அழகுடன் புடைத்துக்கொண்டிருக்கிறது. ஈகை ததும்ப புன்னகையுடன் இதழ்கள். கண்கள் பரந்த பேரண்டத்தின் மிகச் சிறிய புள்ளி ஒன்றை உற்றுநோக்க.. எனது குறிக்கோள்களை, எனது உள்ளம் தளராக் கடமைகளை, பிடிதளரா தடைகளை உடைத்தெறியும் என் உளப்பாங்கை உணர்த்துவதாய் இருந்தன.

இன்னல் மாளிகையிலிருந்து பயணிக்கும் ஒரே ஒரு ஒற்றையடிப் பாதையின் இறுதியில், வானத்தை மறைக்க வளர்ந்திருக்கும் சிடுசிடுப்பான மரக்கூட்டத்தின் நடுவேநான் ஒற்றையாக நின்று கொண்டிருக்கிறேன்.

கல்லிலும் கூட நாங்களாகிய அத்தைகள் நம்பிக்கையோடு காட்சியளிக்கக்கூடாது போலும்.

என் இடக்கையை பிடித்துக்கொண்டு ஒரு சிறுமி நம்பிக்கையோடு என் கண்களைக் காண்கிறாள். எனது வலக்கை ஒரு பெண்ணின் தலையை வருடிக் கொண்டிருக்கிறது. அவள் அடக்கமாய் குனிந்து கொண்டிருக்கிறாள். அவளது கண்கள் ஏக்கமாய் மேல்நோக்கிப் பார்க்க, முன்பக்க கூந்தல்சரிவு முகத்தை மறைத்துக் கொண்டிருக்கிறது. அப் பார்வையில் தோல்விகளையும், அச்சங்களையும், நன்றிகளையும் ஒருசேர கலக்கிக் கொண்டிருந்தாள். இவள் ஒரு நேர்ந்துவிடப்பட்ட வேலைக்காரி. எனக்கு முன்னே இருப்பவள் ஒரு தேனியரசி. எங்கள் இயக்க ஏக்கநோக்கங்களை பரப்ப பறக்க தயார் நிலையில் எப்பொழுதும் இருப்பவள். என் இடுப்பு அம்பாரப்பட்டையில் தொங்கிக் கொண்டிருப்பது சீலையின் கொசுவம் அல்ல.

ஒரு ஒளிக்கற்றை துப்பாக்கி.

இந்தப் போர்க்கருவி என் தோல்விகளின் நினைவூட்டி. நான் வன்மை உள்ளவளாக இருந்திருந்தால், என் சொற்களே ஊக்கிகளாக இருந்திருக்கக்கூடும். கருவிகளை, அதுவும் போர்க்கருவிகளை ஒரு மென்மை உள்ளவள் கையாள நேர்ந்திருக்காது.

இந்த முதிர்கல்கொத்தி ஓரளவுக்கேனும் என்னை இயல்பான அகநிலையில் இருப்பதாய் செதுக்கி இருக்கிறாள். உணர்வு பெருக்கெடுக்கும் பலநேரங்களில், இவள் சற்று கூடுதல் உரிமையுடன் பிதுங்கும் விழிகளை செதுக்கி விடுவாள்.

அத்தை நெருப்பியை வெறி கொண்டவளாகவும், அத்தை ஈகியை அதித் தைராய்டினியாகவும்

அத்தை வெள்ளியை மனித வெடிகுண்டைப் போலவும் சித்தரித்து விட்டாள்.

சிலை திறப்பு திருவிழாவின்போது கல்கொத்தி ஏனோ உளக்கலக்கத்தோடே காணப்பட்டாள்.

நானும் இரக்கமுள்ளவள்தானே? புகழ்மயங்கி தானே! சிலை மிகவும் உயிர்ப்புடன் இருப்பதாக பாராட்டினேன்.

திருவிழா முடிந்து ஒன்பது ஆண்டுகள் ஓடிவிட்டன. வானிலை மாற்றத்தால் நானும் பெரிதாக மாறி இருந்தேன்.

புறாக்களின் எச்சத்தால் அதிபுதிய ஓவியம் ஆனேன். ஈரம் கசியும் வெடிப்புகளில் பாசிகள் படர்ந்தன. கருவுற வேண்டி முட்டைகளையும், கத்தரிப்பற்ற ஈனுதலுக்காக ஆரஞ்சுகளையும் ,புத்துலகின் பூரிப்பாக சுருள்ரொட்டிகளையும், என் காலடியில் படையல்களாய் குவித்தனர் என் வணங்கிகள்.

ரொட்டித் துண்டுகள் மழையில் நனைந்து வெண்பூஞ்சை பூத்து விடுவதால் நான் அவற்றை விரும்புவதில்லை. ஆரஞ்சுகள் மீது எனக்கு மிகைஈர்ப்பு. சொற்பிறப்பில் நார்தம் என்ற தமிழ்ச் சொல்லில் இருந்துதான் ஆரஞ்சு பிறந்தது என்றும், ஆறுஅஞ்சு சுளைகள் இருப்பதால்தான் அது ஆரஞ்சாக பிறந்தது என்றும் கதைகள் இருப்பதால்,

எப்பொழுதும் எனது சுருக்குப் பையில் அஞ்சாறு வைத்திருப்பேன்.

இன்னல் மாளிகையின் கருவறையில் தான், நான் என் சொற்களை ஏடுகளில் படையல் இடுகிறேன். இன்று நூல் எரிப்பு வன்முறை உலகெங்கும் கொழுந்துவிட்டு எரிகிறது. ஒன்று இரண்டு நூலகங்களாவது தப்பிப் பிழைக்குமா? குருதிக்கறைத் தொட்டு பதித்த விரல் அச்சுகளை

எரித்துவிட்டு அறத்தூய்மை மிக்க புதிய ஏடுகளை எழுதுவதே வன்முறையாளர்களின் நோக்கமாமே!?

அக்குருதி ஏடுகளில் சில வேணும் நாங்களாகிய அத்தைகளால் எழுதப்பட்டவை. அவற்றை எளிதில் அழித்துவிட முடியாது. புதையுற்ற எலும்புகளைத் தோண்டி, அவற்றையும் அறநெறியாக்கி, என்னை அறியா படிப்பாளிகளுக்கும் படையலிடுவேன்.

நான் ஒருவேளை ஏடுகளை வைத்து

பிரமிடுகளை கட்டுவதாய் கனவு காணலாம்.

படிப்பாளிகள் யாருமற்ற உலகில் நான் தனியளாய் வாழலாம். அப்பொழுதும் படைத்துக் கொண்டே தான் இருப்பேன்.

நள்ளிரவு. கைகளில் நடுக்கம்.முதுகுவலிப்பெருந்துயர். பனை வெல்லச் சுக்குநீர் பலமுறை சூடுப்படுத்தியும் பருகாமல் ஆறிக்கிடக்கிறது. எனது அகவியல்கோப்பறைகள் முழுதும் படப்பிடிப்புக் கருவிகள் ஒளிந்து ஒளிர்ந்துக்கொண்டிருக்கின்றன. நான்தான் பொருத்தி இருக்கிறேன். இருந்தும். நான் ஓடிக்கொண்டே இருக்கிறேன்.

காட்டிக் கொடுப்பவர்களும், ஒதுக்கி வைப்பவர்களும் நிறைந்த உலகம் இது. இந்த இன்னல் மாளிகையிலேயே கூட எண்ணில் அடங்காதவர்கள் இருக்கலாம். அவர்களிடம்தான் உதவி கோர வேண்டும். வேறு வழிகள் இல்லை.

பேனாக்களை வாள்களால் வெட்டி விடுவது எளிது. விளைவாக கேடுகளே கூடும்.

---

24.07.2022 ஞாயிறு மாலை தஞ்சாவூர் பெசன்ட் அரங்கத்தில் தஞ்சை ப்ரகாஷ் இலக்கியச் சிந்தனை வட்டம் சார்பில் நடைபெற்ற இலக்கிய விழாவுக்கு மங்கையர்க்கரசி ப்ரகாஷ் தலைமை வகித்தார்.கவிஞர் பித்தன், கவிஞர் அம்மா குருமுருகன் முன்னிலை வகித்தனர்.நிகழ்வில் எழுத்தாளர் வா.மு.கோமுவுக்கு அமரர் சிவ. சுந்தரம் நினைவு வாழ்நாள் சாதனையாளர் விருது ( ரூ 10000 ரொக்கம், கேடயம், பொன்னாடை) வழங்கப்பட்டது.வா.மு.கோமு படைப்புகள் குறித்து மதிப்புறு முனைவர் குப்பு.வீரமணி பேசினார்.எழுத்தாளர் வண்ணதாசன் எழுதியனுப்பிய வாழ்த்துச் செய்தி மேடையில் வாசிக்கப்பட்டது.



வா.மு.கோமு ஏற்புரையுடன் முதல் அமர்வு நிறைவுற்றது. இரண்டாம் நிகழ்வாக எழுத்தாளர் கீரனூர் ஜாகிர்ராஜா வின் 'ஹலால்' சிறுகதைத்தொகுப்பு திருமதி புனிதா கணேசனால் வெளியிடப்பட்டது. திரு.இரா.செழியன் பெற்றுக்கொண்டார்.ஹலால் கதைகள் குறித்து எழுத்தாளர் சுனில் கிருஷ்ணன் பேசினார்.எழுத்தாளர் நாஞ்சில் நாடன் சிறப்புரையாற்றினார்.எழுத்தாளர் சி.எம்.முத்து , முனைவர் கண்ணம்மாள் மனோகரன்,முனைவர் பொ. திராவிடமணி, கவிஞர் அகிலா கிருஷ்ணமூர்த்தி மற்றும் இலக்கிய அன்பர்கள் வாழ்த்துரை வழங்கினர்.

# துரோகம்

சிவசு (மருத்துவர் ஜெயசேகர்)





'டமால்' என்ற பெருஞ்சத்தத்துடன் விமான நிலையத்தின் கண்ணாடியொன்று உடைந்து விழுந்தது. சென்னை விமான நிலையத்தின் வருகைப் பகுதியில் இருந்தவர்கள் பலரும் அலறி அடித்துக்கொண்டு சிதறி ஓடினர். விமான நிலைய ஊழியர்கள் பெரும் பதற்றமின்றி இது எண்பத்தைந்தாவதா, எண்பத்தாறாவதா என்று தங்களுக்குள் பேசியவாறு நகர்ந்து கொண்டிருந்தனர். பழகிப் போயிருக்கலாம். 'விரைவில் நூறாவது' என சிலர் கிண்டலடிப்பதும் கேட்டது. விமான நிலையத்தின் வருகைப் பகுதியில் சிறப்பு விருந்தினர் பகுதியில் அமர வைக்கப்பட்டிருந்தார் மருத்துவர் கலையரசி. வாடிப்போன முகத்துடன் காணப்பட்ட அவரின் இரண்டு தொடைகளிலும் ஆளுக்கொருவராக தலைவைத்து கண்ணீர் சிந்தியபடி படுத்திருந்தனர், அவரின் மகள்கள் மலர்விழியும், மஞ்சிமாவும். மஞ்சிமா மருத்துவப்பட்டம் படித்துக் கொண்டிருந்தார். மூத்தவள் மலர்விழி எம். எஸ்.சி போரன்சிக்சயன்ஸ்(முதுகலை சட்ட மருத்துவம் படித்துக்கொண்டிருந்தார்..

திடீரென எழுந்த நடையும் பதற்றமும் இருவரையும் தலைதூக்க வைத்ததுடன், பயந்த விழிகளுடன் தாயையும் பார்க்க வைத்தது, இறுகிய முகத்துடன் காணப்பட்டார் மருத்துவர் கலையரசி, அவருக்குத் தெரியும் 'டமால்' என்ற ஓசையுடன் விழுந்து நொறுங்கியது விமான நிலைய கண்ணாடி மட்டுமல்ல அவரது பலவருடக் காதல் வாழ்க்கையும் தானென்று.

அவர்கள் பதற்றமடைந்திருக்க கூடும் என்ற நினைப்பில் அவர்களை நெருங்கிய "ஏர் இந்தியா நிறுவன ஊழியர் ஒருவர் "நீங்கள் வேண்டுமானால் முக்கிய விருந்தினர் அறையில் அமர்ந்து காத்திருக்கலாம்" என்றார் சற்றுப்

பணிவுடன். 'பரவாயில்லை: விமானம் வர இன்னும் எவ்வளவு நேரமாகும் என்றாள் மலர்விழி. இன்னும் ஒருமணி நேரமாகலாம் "டெல்லி விமான நிலையத்தின் பனிமூட்டம் காரணமாக எல்லா டெல்லி விமானங்களும் தாமதமாகத்தான் வருகின்றன என்றார் அவர். பரவாயில்லை நாங்கள் இங்கேயே காத்திருக்கிறோம். ஆனால் பாரோ ((Paro)விலிருந்து புறப்பட்ட விமானம் டெல்லி வந்துவிட்டதல்லவா? என்றாள் அவள் (பாரோ, பூடான் நாட்டின் விமான நிலையமுள்ள ஒரு ஊராகும்). ஆம். ''அதிலிருந்த உங்களின் தந்தையின் உடல் டெல்லி விமான நிலையத்தில் மருத்துமனைக்குக் கொண்டு செல்லப்பட்டு மருத்துவர்கள் ஆய்வுக்குப்பின் அவர் மாரடைப்பால் இறந்திருக்கலாம் என பணி மருத்துவர் கூறியதால் உடல் மீண்டும் சென்னை வரும். "ஏர் இந்தியா விமானத்தில் ஏற்றப்பட்டு விட்டதாக டெல்லியிலிருந்து தகவல் வந்தது. மேடம், டாக்டர் நாராயணினின் உடல் ஏர் இந்தியா ஏ320 விமானத்தில் வந்து கொண்டிருப்பதும் உறுதி செய்யப்பட்டு விட்டது'' என்ற மெல்லிய குரலில் கூறிவிட்டு பணிவாக அவர்களின் பதிலுக்குக் காத்திருந்தார் அவர்.

டெல்லிசென்னை விமானம் சென்னை நோக்கி முன்னேறிக் கொண்டிருந்தபோது மருத்துவர் கலையரசியின் நினைவுகள் பின்னோக்கிப் போய்க்கொண்டிருந்தன. "நம்ம கல்யாண நாள் கொண்டாடுவதற்காக நாம் பூடான் போறோம் என பாஸ்டர் நாராயணன் கூறியதும் 'ஹே' என கத்தியவாறு அவரது இருமகள்களும் அவரைக் கட்டியணைத்துக் கொண்டனர். இமயத்தின் உச்சியில் குடியிருக்கும் பூடானில் வலம் வர அவர்கள் நீண்ட நாட்கள் கனவு கண்டிருந்தனர். அப்பாவைப் போலவே நெடுந்தூரப் பயணங்களில் மிகவும் ஆவலாக இருந்தனர். இரு மகள்களும். பல்வேறு நாடுகளின் வரலாறு , பூகோளம், கலை, கலாச்சாரம் அவர்களைச் சுற்றுலாப் பிரியர்களாக ஆக்கி வைத்திருந்தது. அதிலும் தந்தை குறிப்பாகப் பூடானை தேர்ந்தெடுத்ததில் மகள் மஞ்சிமாவிற்கு மெத்த மகிழ்ச்சி. பூடானின் 'பாரோ' விமான நிலையத்தில் இறங்கி, ஏற அவள் கனவு கண்டு கொண்டிருந்தாள். உலகின் மிக அழகான மற்றும் ஆபத்தான விமான நிலையங்களில் பாரோ விமான நிலையமும் ஒன்றாகும். நீண்டுயர்ந்த இமயமலையின் இரண்டு உச்சிகளுக்கு நடுவில் உள்ளதுதான் 'பாரோ' பள்ளத்தாக்கு. அதிலுள்ள சிறிய விமான நிலையத்தில் தலையிறங்க எல்லா ஓட்டுநர்களுக்கும் அனுமதியில்லை. சிறப்புத் திறமை வாய்ந்தவர்களுக்கு மட்டுமே அங்கு தரையிறங்க அனுமதியுண்டு. விமான ஓடுபாதையின் இரண்டு பக்கமும் 18,000 அடி உயரத்தில் எழுந்து நிற்கிறது இமயமலை, கடல் மட்டத்திலிருந்து சுமார் எட்டாயிரம் அடி உயரத்தில் அமைந்துள்ளது இந்த விமான நிலையம். 2011ஆம் ஆண்டு வரை சுமார் 8 விமான ஓட்டிகளுக்கு மட்டுமே அங்கு தரையிறங்க அனுமதி உண்டென்றால் பார்த்துக் கொள்ளுங்கள். மஞ்சிமாவின் நிகழ்ச்சிக்கு அதுவே காரணம். இது டாக்டர் நாராயணன் மற்றும் மருத்துவர் கலையரசியின் இருபத்தைந்தாவது திருமணநாள் கொண்டாட்டம். ஆனால் மஞ்சிமாவிற்கு மகிழ்ச்சியைத் தந்த அளவிற்கு இந்த செய்தி அவர் தாய் கலையரசிக்கும் அக்காள் மலர்விழிக்கும் மகிழ்ச்சியைத் தந்ததாகத் தெரியவில்லை. அடுத்தது காட்டும் பளிங்குதானே முகம். நாராயணன் அதுபற்றி கவலைப்படுவதுபோல் தெரியாமல் அவர் அறைக்குள் நுழைந்து கொண்டார். அவர் மறைந்ததும் ''ஏன்மா உனக்கு ஜாலியா இல்லையா? "என அம்மாவைப் பார்த்து உருகினாள். மஞ்சிமா, "இரு உங்க அப்பா பிளானைப் பார்ப்போம்'' என்றவாறு அவர் எழுந்துக்கொள்ள அவரைத் தொடர்ந்தாள் மலர்விழி,

சமீபத்தில் கலையரசிக்கும் நாராயணனிற்கும் இடையிலான உறவில் சற்று விரிசல் ஏற்பட்டுள்ளது. அதனை அவளின் பெரிய மகள் மலர்விழி மட்டும் சற்று அறிவாள். மஞ் சிமாவிற்கு அது தெரிய வாய்ப்பில்லை. கலையரசி தஞ்சை மாவட்டத்தைச்

சேர்ந்தவர். படித்ததும் தஞ்சை மருத்துவக் கல்லூரியில் தான். நாராயணன் அண்டை மாநிலமான கேரளாவைச் சேர்ந்தவர். அனைத்திந்திய பிரிவில் மருத்துவம் படிக்க கொட்டாரக்கரா மாவட்டத்திலிருந்து தஞ்சைக்கு வந்தவர். வந்தவர் தஞ்சையில் மருத்துவம் படித்ததுடன், கலையரசியின் மனதையும் படித்திருந்தார். கல்லூரிக் காலத்தில் அந்தக்கால காதல் போல விரட்டி விரட்டி கலையரசியினைக் காதலித்துக் கை பிடித்தார். பின்னர் இருவரும் சென்னையிலேயே தங்கி மருத்துவம் பார்த்து வந்தனர். முதலில் பிறந்தவளுக்கு முன்தோன்றி மூத்த குடி வழி வந்ததால் 'மலர்விழி' எனத் தமிழ்ப் பெயரிட்டனர். இரண்டாம் மகளுக்கு நாராயணனின் விருப்பப்படி மலையாளப் பெயரிடப்பட்டது. மூத்தவள் பெற்றோரைப் போன்றே மருத்துவம் படிக்க ஆரம்பித்தாள். இளையவள் சாகசம் விரும்பி, அதனால் விரும்பி போரன்சிக் சயின்ஸ். படிக்க ஆரம்பித்தாள். நன்றாகப் போய்க்கொண்டிருந்த வாழ்க்கை சில ஆண்டுகளாக நாராயணனால் தடம் புரள ஆரம்பித்தது. மருத்துமனையைக் கண்காணிக்கும் பொருட்டில் நியமிக்கப்பட்ட 'லவ்லி' என்ற கேரள பெண்ணால் தான் பிரச்சனை ஆரம்பபமாயிற்று. நாராயணன் அவளுடன் நெருங்கிப் பழகுவதாகக் கலையரசிக்குத் தகவல் எட்டியது. மேலோட்டமாக நாராயணன் அதை மறுத்தாலும் அவர் கலையரசியின் கண்களைப் பார்த்து பேச முயன்றார். 'லவ்லி' வேலையை விட்டுவிட்டாலும் இன்னமும் 'அவள்' அவரால் தான் மறைத்து பாதுகாக்கப்படுகிறாள் என்பதைக் கலையரசி மட்டும் அறிவாள். தாயின் முகவாடலைக் கொண்டு மலர்விழியும் இதனை உணர்ந்திருக்கிறாள். அற்புதமான 'தங்கள்' காதல் வாழ்க்கை வெறும் மனவாழ்க்கையாகி விட்டது என்பதில் கலையரசிக்கு மனதில் கடும் கோபமெழுந்தது எனினும் தனது பெண் குழந்தைகளுக்காகப் பொறுத்துக்கொள்ள வேண்டியிருந்தது.

இந்நிலையில் தான் தங்களது இருபத்தைந்தாவது மணவிழாவை 'பூடானில்' கொண்டாடுவதாக அறிவித்திருக்கிறார் நாராயணன். ஆழ்ந்த யோசனையில் இருந்த கலையரசியை உற்றுநோக்கினாள் மஞ்சிமா. அம்மா நாம் பூடான் போறதில் ஒரு சிக்கல். "என்னடி சிக்கல்?" என்றாள் கலையரசி சார்பாக மலர்விழி. நம்ம நாலு பேருக்கும் நம் பிளைட்ல (விமானத்தில் டிக்கட் கிடைக்கல. நாம் மூன்று பேரும் முதல்ல பூடான் போறோம். இரண்டு மணி நேரம் கழித்து வர்ற பிளைட்லதான் அப்பா வர்றார். வரபோதும் அப்பபடித்தான் கிடைச்சிருக்கு என்ன செய்யறது? வாடினாள் மஞ்சிமா. கலையரசிக்கு நாராயணனின் இந்தத் திட்டத்தில் ஏதோ உள்நோக்கம் இருப்பதாகப்பட்டது. விரைவில் அதற்கு விடை கிடைத்தது. இவர்களை முன்னர் அனுப்பிவிட்டு நாராயணன் 'லவ்லி'யுடன் தான் பூடான் வருகிறார் என்பதும் பாரோவில் இறங்கியதும் அவள் மட்டும் 'திம்பு'வில் (திம்பு பூடானின் தலைநகர்) தங்க வைக்க ஏற்பாடு செய்துள்ளதையும் அறிந்தாள். ஆனால் மகள்களிடம் ஏதும் கூறவில்லை. ஆனால் இந்த முறை அவள் நாராயணனை மன்னிக்கத் தயாராகவில்லை என்பதை மட்டும் அவளது முகம் காட்டியது. பயணத்திற்கான நாள் நெருங்கியது.

பயணத்திற்குத் தேவையான பொருட்களைப் பெட்டியில் பரபரப்பாக எடுத்து அடுக்கி வைத்துக் கொண்டிருந்தனர் மலர்விழியும் மஞ்சி மாவும். 'அப்பாவுக்கு டயபடிசுக்கு (சர்க்கரை வியாதி இனிப்பிற்கு பயன்படும் செயற்கை இனிப்பான்களை தேடிக் கொண்டிருந்தாள் மலர்விழி. "அம்மா, அப்பா சாப்பிட சுகர்பிரி சாஷே இங்க வைச்சிருந்தேன் காணோம் நீ பாத்தியா?" 'இல்ல நா பாக்கலம்மா' என்றாள் கலையரசி, "சரி: நான் எதுக்கும் மஞ்சிமா ரூம்ல போய் பாக்குறேன்' என்றபடி நகர்ந்தாள் அவள். அறையில் குளித்துக் கொண்டிருந்த மஞ்சிமா அறையில் யாரோ ஏதோ உருட்டுவதைக் கேட்டு 'ஏய்

என்னடி பண்ற என் ரூம்ல' என கத்தினாள். "நான்தான்டி அப்பாவோட சுகர்பிரி இங்கே இருக்கான்னு பாக்கவந்தேன்", ஏய் நான் பொட்டாசியம் சயனைட் சும்மா ஷேஷேல அடைச்சி வச்சிருக்கேன் அது சுகர் மாதிரிதான் இருக்கும், நீ மாத்தி எடுத்துறாத இரு நான் வர்ரேன் என கத்தினாள் மஞ்சிமா. 'பளிச்' என்று ஒரு ஒளித்தோன்றி மறைந்து கலையரசியின் மனதில்.

பூடான் தேசிய விமான நிறுவனத்தின் 'டிருக் ஏர்' (Druk air) ஏடிஆர் ரக விமானம் மெல்ல இமயமலைப் பள்ளத்தாக்கில் இறங்க ஆரம்பித்தது. அற்புதமான விமானப் பயணமது. அந்த சிறிய ஓடுதளத்தில் மிகத் திறமையாக, விமானத்தின் வேகத்தைக் கட்டுப்படுத்தி விமானத்தை நிறுத்தினார். விமானி இறங்கியதும் இமயம் இருகரம் நீட்டி வரவேற்பதாகத் தென்பட்டது. 'பாரோச்சு' நதி சற்றே சலசலப்புடன் ஓடிக்கொண்டிருந்தது. பாரோ நகரம் முற்காலத்தில் பூடானின் தலைநகரமாக விளங்கியிருக்க வேண்டும். இங்கே ஏராளமான புத்த விகாரைகள் உள்ளன. உலகில் புகழ்பெற்ற 'டைகர்ஸ் நெஸ்ட்' எனும் புத்த மடாலயம் இமயத்தின் விளிம்பில் தொங்கிக் கொண்டிருக்கும். அதிசயமும் இங்குள்ளது. 'டைகர்ஸ் நெஸ்ட்' புத்த மடாலயத்தின் எதிரே அதே பெயரில் அமைந்துள்ள ஒரு தங்கும் விடுதியில்தான் அறைகள் எடுக்கப்பட்டிருந்தது. 'டைகர்ஸ் நெஸ்ட்' தங்கும் விடுதி ஆற்றங்கரையில் ஒருபுறம் அமைந்த மலையடிவாரத்தில் உள்ளது. அதற்கு எதிரே ஆற்றின் எதிர்கரையில் உள்ள படுபயங்கரமான பள்ளதாக்கு உள்ள மலையின் விளிம்பில் பழங்கால புத்த மடாலயமான 'டாக்சங்க்' என அழைக்கப்படும் 'டைகர்ஸ்ட் (டாக்சங் என்பதற்குப் புலிகளின் வசிப்பிட மடாலயங்கள்' உள்ளது. பழங்காலத்தில் (747 AD பௌத்த துறவிகள் தியானம் செய்ய தேர்ந்தெடுத்த இடம்தான் இது.

சமவெளியிலிருந்து 2600 அடி உயரத்தில் உள்ளது. சுமார் இரண்டு மணி நேரம் நடந்து (மலையேற்றம் தான் இதனை அடைய இயலும். ஓரளவு தூரத்தைக் குதிரையில் கடந்து நடந்து அந்த இடத்தை அடைந்தபோது உலகின் சொர்க்கத்தை தரிசித்த ஆனந்தம் கிடைத்தது. 'டைகர்ஸ் நெஸ்ட்' பார்த்துவிட்டு திரும்பும்போது அம்மாவிற்கும் அப்பாவிற்கும் இடையே வாக்குவாதம் நடைபெற்றதை மகள்கள் இருவரும் கவனித்தார்கள்.

விடுதிக்குத் திரும்பியதும் அப்பா தனது பெட்டியை அடைத்து தயார் செய்து கொண்டிருந்ததை அறிந்த மஞ்சிமா 'என்னப்பா இது எங்கே அவசர அவசரமாக கிளம்புகிறீர்கள்?' என்று கேட்க "அது ஒன்னுமில்லடா நாளைக்கு எங்க திருமணநாள் இல்லையா? நாம் அதை 'திம்பு'லதான் கொண்டாடுறோம். 'பாரோ!' சின்ன டவுன், திம்பு பெரிய ஊர். அங்க 'வாங்சுக்' என்று ஒரு ஹோட்டல்ல தான் கொண்டாடப்போறோம். அதான் அங்க முன்னரே அப்பா போயி சில ஏற்பாடு பண்ணனும். நீங்க நாளைக்கு காலைல கிளம்பி 'திம்பு' வந்திருங்க, வர்ற வழி ரொம்ப பிராமாதமா இருக்கும். வெறும் அறுபத்தைந்து கிலோ மீட்டர்தான். ஆனா ஒன்னறை மணிநேரமாகும். இமயத்தின் அழகையும், குளிர்ச்சியையும், ஆற்றின் இரைச்சலையும் நன்றாக ரசிக்கலாம்" என்றவாறு மஞ்சிமாவின் முதுகில் தட்டிக்கொடுத்தார் நாராயணன். அவர் புறப்பட்டதும் மலர்விழி "அம்மா, அப்பா திம்பு போய்ட்டாரு" 'ம்' என்றபடி அது தெரியுமென தலையாட்டினாள் கலையரசி. 'அவரு போகட்டும்மா 'பாரோ கிராப்ட் (பாரம்பரிய பூடான் உடைகள், அழகணிகள்) நல்லாயிருக்கும்மா. நாம அங்க ஷாப்பிங் போயிட்டு வருவோம் என்றாள் மலர்விழி. அம்மா 'சுஜான்னு' ஒரு டீ (தேநீர்) உண்டு. ரொம்ப பேமஸ். அது 'வெண்ணெய் தேநீர்' சூப்பரா இருக்கும். குடிக்கலாமா என்றாள் மஞ்சிமா. நினைவுக்காகச் சில பாரம்பரிய கலைப்பொருட்கள் வாங்கிய பின்னர் 'ஷோளம் டிரோபல்' உணவகத்திற்குச் சென்றனர். பூடானின் நூடுல்ஸ்ஸா,

இல்ல சைனீஸ் நூடுல்ஸா, என்ன இவ்வளவு சிக்கலா இருக்கு என்றவாறு நூடுல்ஸை தின்பதற்குத் தடுமாறினார்கள் மலர்விழியும், மஞ்சிமாவும். அதைவிட கடுமையான சிக்கலில் தன் வாழ்க்கை இருப்பதாகக் கலையரசி உணர்ந்தாள்.

பாக்சூ ஆற்றின் கரையோரமாக இமயமலையின் அழகை ரசித்தப்படி பயணம் ஆரம்பித்தது. பாச் ஆறு 'கசோம்' என்ற பகுதியில் மற்றுமொரு ஆற்றினைக் கலந்து ஆர்ப்பரித்தது. வாழ்க்கையும் இப்படித்தான் இரண்டு தனித்தனி நதிகளாகத் தரையிறங்கும்போது இல்லாத இரைச்சல் இரண்டு நபர்கள் வாழ்வில் இணையும்போது ஏற்படுகிறதே. நதிகளும் அப்படித்தானே விரைவில் பிரிந்து விடுமோ. மலைகள் குறுக்கே வந்தால் நதிகள் என்ன செய்யும். 'வாங்சுக்' நதிக்கரையில் உள்ள பள்ளத்தாக்கு நகரம் தான் திம்பு. ஒன்றரை லட்சத்திற்கும் குறைவான மக்கள் தொகையைக் கொண்ட நகரம் இது. கடல் மட்டத்திலிருந்து 8000 அடி உயரத்தில் உள்ளது. மன்னரின் கீழ் ஆட்சியில் இருந்தாலும் செயற்கை உரம். பூச்சிமருந்துகளின்றி (பசுமை விவசாயம் செய்து வருகிறது பூடான். மகிழ்ச்சியான மக்கள் உள்ள நாடாகவும் திகழ்கிறது. திம்புவைப்பற்றி எங்களை அழைத்து வந்த கார் ஓட்டுநர் அருமையாகப் பேசிக் கொண்டே வந்தார். "எல்லாம் சரிதான் உனக்கு திம்பு என்றால் என்னம்மா ஞாபகத்திற்கு வருகிறது?" என்றாள் மஞ்சிமா அம்மாவைப் பார்த்து, அதற்கு கலையரசி "இது உன் அப்பாவிடம் கேட்க வேண்டிய கேள்வி?'' மாமா? என்றபடி சிறிது மௌனத்திற்குப் பிறகு திம்பு என்றால் தமிழர்களுக்கு இழைக்கப்பட்ட துரோகம் தான் என் நினைவிற்கு வருகிறது என்றாள் கலையரசி. மலர்விழி சொல்ல ஆரம்பிப்பதற்குள் ஓட்டுநர் 'டஷிசோ டிசான்' எங்கள் தேசிய அரசாங்கக் கட்டடம். உங்களுக்கு ஞாபகம் இருக்கிறாதா? விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனுக்கும் இந்திய பிரதமர் ராஜிவ்காந்திக்கும் இடையே சமாதான ஒப்பந்தம் கையெழுத்தான இடம் இதுதான் என நிறுத்தினார் அவர். "அதுதான் சொன்னேன் துரோகத்தின் பிறப்பிடம்'' என முணுமுணுத்தாள் கலையரசி.

ஹோட்டல் 'வாங்சூ' திபெத்திய கட்டிடக் கலைமுறையில் வடிவமைக்கப் பட்டிருந்தது. இரவு தவிர்க்க இயலாத காரணத்தால் 'டுர்க்' விடுதியில் தங்கிவிட்டதாக நாராயணன் கூறினார். அது எங்கப்பா இருக்கு. அது திம்புவோட தேசிய அரசாங்க கட்டிடம் இருக்கே. நீங்க வர்றப்பா பாத்திருப்பீங்களே அங்கதான் இருக்கு. நம்ம டூர்க் ஏர்லைன்ஸ் வந்தோம்ல. அதனால நமக்கு ஒரு ரூம் அங்க பிரியா (இலவசமாகி கொடுத்திருக்காங்க. அதனால மட்டுமில்ல நான் 'டாசின்' பார்க்கனும்னு ஆசைப்பட்டேன். இங்கே அதோட காப்பகம் ஒன்று இருக்குனாங்க அங்க போனேன். லேட் ஆயிருச்சி. குளிர் வேறயா அதான் அங்கேயே தங்கிட்டேன். மலர்விழியும். மஞ்சிமாவும் சமாதானமாயினர். கலையரசியால் சமாதானமடைய முடியவில்லை. "அப்பா டாசின்னா என்னப்பா?' மஞ்சிமா விடவில்லை. டால்ஃபின் தேடியலைஞ்ச 'லிங்க் அனிமல்' (இணைப்பு மிருகம்) வகையைச் சேர்ந்தது இந்த மிருகம். இந்த மிருகம் பிறக்கும் போது ஆடு மாதிரி இருக்கும். ஆனால் வளர்ந்த பிறகு மாடு மாதிரி மாறிவிடும் தெரியுமா? இதுதான் பூடானின் தேசிய மிருகம். 'அப்படியா அப்பா அத எனக்கு கட்டாயம் காட்டனும்' என்றாள் மஞ்சிமா சிணுங்கியபடி. "ஒரு மிருகம் பிறக்கும் போது ஒரு உருவத்துடனும் வளர்ந்த பிறகு வேறு ஒரு மிருகமாகவும் தோற்றமளிப்பது ஒன்றும் அதிசயமில்லை. மனிதர்கள் அனைவரும் அப்படித்தான்" என்றாள் கலையரசி நகைத்தப்படி.

மணநாள் என்ற சம்பிரதாயத்திற்காக டோர்டின்மா புத்த கோயிலுக்குச் சென்றடைந்தனர். 51 மீட்டர் உயரமுள்ள வெண்கலத்திலான புத்த சிலை அமைதியாகந் தியானம் செய்து

கொண்டிருந்தது. அதன் உடல் முழுவதும் தங்கத்தகடுகளால் மூடப்பட்டிரூந்ததால் காலை இளவெயிலில் தகதகத்தது. "நமது நாட்டிலுள்ள பொற்கோயில்களில் உள்ள பாதுகாப்பு கூட இங்கேயில்லையே'' என அதிசயித்தாள் மஞ்சிமா, மதிய உணவிற்குப்பின் தலை வலிப்பதாக உணர்ந்த கலையரசி 'டாகின்' பார்க்க மறுத்துவிட்டு விடுதியறைக்குத் திரும்பினாள். அவர்கள் அனைவரும் திரும்பிய பிறகும் தலைவலி தீர்ந்தபாடில்லை. இது சந்தேகத்தால் எழுந்த மன அழுத்த தலைவலி என்பதை மருத்துவரான கலையரசியால் அறிய முடியாதா என்ன? தன்னுடைய சந்தேகத்தைத் தீர்த்துக் கொள்ள தலைவலியைப் போக்கிக் கொள்ள 'டூர்க்' விடுதிக்குத் தன் காரில் பயணமானாள். விடுதியின் வரவேற்பாளர்களிடம் இந்திய, தமிழ்நாட்டு விருந்தினர்கள் தங்கியுள்ளதைப்பற்றி விசாரிக்க, அறை எண் 215 ல் 'லவ்லி' என்ற பெண் தங்கியிருப்பதை உறுதி செய்தாள். மனம் படபடத்தது. உடைந்த மனதுடன் விடுதிக்குத் திரும்பினாள். தனது பரப்பளவில் எழுபது சதவீதத்திற்கு மேல் காடுகளைக் கொண்டிருந்த போதிலும் தனது வளர்ச்சிக்குப் பொதுமக்களின் மகிழ்ச்சியளவைக் குறியீடாகக் கொண்டிருந்த பூடான் தேசத்தை விட்டு கிளம்ப தயாராகிக் கொண்டிருந்தோம். கலையரசியின் தொலைபேசி ஒலித்தது. மூத்த மகள் மலர்விழிக்கு மணமகன் தேடிக் கொண்டிருந்தனர். அவர்கள் வீட்டிலிருந்தே அழைப்பு. மெல்லிய குரலில் பேசினாள் கலையரசி. ''உங்க குடும்பத்த எங்களுக்கு ரொம்ப பிடிச்சிருக்க. ஒன்லி பிகா ஆஃப் தெட் வி பிர்பர் யுவர் டாட்டர்'' என்றபடி எதிர்முனையில் இருந்து தொடர்பு துண்டிக்கப்பட்டது. 'குடும்பம்' என்ற சொல் மட்டுமே அவள் காதுகளில் ரீங்காரமிட்டுக் கொண்டிருந்தது. அதிகாலை விமானம் என்பதால் மகள்கள் இருவரும் தூக்கமின்றி மகிழ்ச்சியாய்ப் புரண்டுக் கொண்டி ருந்தனர்.

அதிகாலை மூன்று மணிக்குத் தயராகி விட்டனர். 'அப்பா காலை நாலு மணிக்கு பிளைட், உனக்குப் பத்து மணிக்குத்தான். அதிகாலை நல்லா ரெஸ்ட் எடுத்துட்டு வாப்பா. 'மஞ்சிமா தன் தந்தையிடம் விடைபெற்றாள். கடைசியாகக் கலையரசி கணவனிடம் வந்தாள். அரைகுறை தூக்கத்தில் இருப்பதுபோல பட்டது. நடிக்கிறாரோ எனவும் தோன்றியது. ''என்னங்க நாங்க வர்றோம். ரெண்டு நாளா கண்டதையும் தின்னுகிட்டு இருக்கீங்க. சுகர் கண்ட்ரோல் இல்லாம போயிருக்கப் போவுது. உங்களுக்கு சுகர் பிரிஷேஷே எடுத்துட்டு வந்தா மலர்விழி. அத மறச்சிட்டு நீங்க சு'சுகர்பிரி சேர்த்து சாப்பிடுறீங்க. வர்றதுக்குள்ள கண்ட்ரேல் பண்ணுங்க. உங்க சட்ட பையில சுகர்பிரி ஷேஷே வைச்சிட்டு போறேன். தேவைன்னா யூஸ் பண்ணுங்' என்றவாறு கணவனிடமிருந்து நகர்ந்தாள் கலையரசி.

இமயத்தின் மலைகளையும், சிகரங்களையும் எளிதாகக் கடந்தது விமானம் வாழ்க்கையின் இடர்களையும் இதுபோல் கடந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும். அவர்கள் சென்னை விமான நிலையத்தை அடைந்து தங்களது பயணப் பைகளைச் சேகரித்து கொண்டிருந்தபோது, தான் ஏர் இந்தியா ஊழியர் கலையரசியைத் தேடிவந்தார். "எக்ஸ்கியூஸ் மீ மேடம், நீங்கள் டாக்டர் கலையரசி தானே?'' 'ஆம்' என தலையசைத்தாள் கலையரசி. ''உங்களுக்கு ஒரு அதிர்ச்சியளிக்கக்கூடிய சோகமான தகவல் வந்துள்ளது மேடம்'', ''என்ன?'' என்பதுபோல அவளை ஏறிட்டாள். ''உங்கள் கணவர் காலை பூடானின் பாரோவிலிருந்து கிளம்பிய விமானத்தில் பயணம் செய்தபோது மாரடைப்பு ஏற்பட்டதாகவும், விமானம் டில்லியில் தரையிரங்கியதும் அவர் மரணமடைந்தது உறுதி செய்யப்பட்டதாகவும் தகவல் வந்துள்ளது''. மகள்கள் கதற ஆரம்பித்தனர். மெல்ல தான் கைப்பற்றி அவரை அருகிலிருந்த இருக்கையில் அமர வைத்தனர். அப்போதுதான் 'டமால்' என்ற சத்தத்துடன் விமான நிலையக் கண்ணாடி உடைந்து விழுந்தது.

# அப்பாவின் கடைசி நிமிடங்கள்

## கலை பாரதி



அப்பா எங்கள் ஊரின் அடையாளங்களில் ஒன்றாக மாறிப் போனவர். ரெங்கசாமி என்கிற அவரது சொந்தப் பெயரை காட்டிலும் சிங்கப்பூரார் என்கிற வந்த பெயரே நிலைத்து இருந்த காலம் அது. தன் வாழ்வின் பெரும் பகுதியை சிங்கப்பூரில் கழித்து இருந்தாலும் அவரது கடைசி காலகட்டம் சொந்த மண்ணில்தான். பிறருக்குக் கொடுத்து அதில் நிறைகிற மனம் அப்பாவுக்கு எப்போதும் உண்டு. ஊரில் நடக்கும் நல்லது கெட்டது எல்லாவற்றிலும் அப்பாவின் தலையீடு அதிகமாக இருக்கும். எத்தனையோ இல்லாத வீட்டுத் திருமணங்களுக்கு அப்பா தாலி எடுத்துக் கொடுத்து உதவியதும் உண்டு.

இப்போது பெரும்பாலும் சொந்த ஊருக்கு செல்கின்ற வரை இருக்கின்ற மகிழ்ச்சி சென்றபிறகு இருப்பதில்லை. எப்போதும் நண்பர்களுடன் குளத்தில் குளிக்கின்ற நான் சனிக்கிழமைகள்தோறும் அப்பாவுடன் தான் குளிப்பேன். தலையில் எண்ணெய் வைத்து சீயாக்காவினால் கண்கள் சிவப்பேற அங்குரான் குளத்தில் குளிக்க வைப்பார். அதற்குபயந்து கொண்டு ஓடி விடுவதும் உண்டு. அப்போது இருந்த அங்குரான்குளம் இப்போது இல்லை. வெள்ளகுட்டைக் கரையில் கரை இருக்கிறது. குட்டையைக் காணோம். ஓடைக் கரையோரம் ஓடையை தேடுகிற நிலை தான் இப்போது.

அப்போதெல்லாம் எங்கள் வீட்டு வாசல் சந்தோசங்களாலும் சத்தங்களாலும் நிரம்பி இருக்கும். இரவு உணவு எல்லாம் வாசலில் தான்.ஆளாளுக்கு வாசலில் தென்னங்கீற்று எடுத்துப் போட்டு அதன் மேல் பாய் போட்டு படுத்து இருப்போம்.ஒரே கூத்து, கும்மாளம், சினிமா, பாட்டு, அரசியல் என கலந்து கட்டி உரையாடுவோம். அதிலும் அப்பாவுக்கு அரசியல் என்றால் திமுக

அரசியல் தான். இந்த நாடக அரசியல் எல்லாம் ஒன்றுக்குமே உதவாது என்று பேசுவார். அப்போது மகேந்திரண்ணன் முகத்தை திருப்பிக் கொள்ளும். அதற்கு எம்ஜிஆர் என்றால் உயிர்.

அப்பா சிங்கப்பூரில் இருந்து ஊருக்கு வந்த பயணம் ஒன்றில் அம்மாவும் நடண்ணனும் கூடவே .அதில் நடனண்ணனின் பெயரில் உள்ள பெட்டியில்தான் நகைநட்டு அதிகமாக இருந்ததாம். விமான நிலையத்தில் அப்பாவின் பெட்டியைச் சோதனை போட்டிருக்கிறார்கள்.பெட்டியில் ஒன்றுமில்லை. அம்மாவின் பெட்டியை சோதனை போட்டிருக்கிறார்கள். பெட்டியில் ஒன்றுமில்லை. அண்ணனின் பெட்டியை சோதனை போட வந்த அதிகாரி

"இது யாரோட பெட்டி..."

"என்னோட பெட்டி...

என்று திக்கித் திணறி சொன்னதாம் அண்ணன் சதாசிவம்.

"உன்னோட பெட்டியா..?

தளுக்மொளுக் கென்று இருக்கின்ற அண்ணனை தூக்கிய அதிகாரி

"உன் பேர் என்னப் பா..."

என் பேரு கலைஞர்...

அண்ணன் சதாசிவம் சிங்கப்பூரில் இருக்கும் போது அப்பாவின் நண்பர்கள் கலைஞர் என்று தான் கூப்பிடுவார்கள். அந்த நினைவில் தன்னுடைய பெயரை அண்ணனும் கலைஞர் என்று சொன்னவுடன் அந்த அதிகாரி மகிழ்ந்து, அண்ணனை தூக்கி முத்தமிட்டு அண்ணனின் பெட்டியை சோதனை போடாமல் தள்ளி விட்டாராம்.

இதனை அப்பா சொல்ல நான் கேட்கும் போதெல்லாம் அப்பாவின் கண்களில் பெருமிதம் நிரம்பி வழியும்.

அப்பாவுடனான அன்றைய காலகட்டத்தில் வாசலில் உண்டு நிலவைக் குடித்து அன்பைப் பருகி மகிழ்ந்து இருந்த அழகான நாட்கள் அவை. எங்கள் தெருக்களின் புழுதிகளில் சித்தப்பாவின் பாட்டுகள் நிறைந்திருக்கும். எனக்குத்தெரிந்து அப்பா

"முத்தான முத்தல்லவோ... முதிர்ந்து வந்த முத்தல்லவோ ..

என்ற பாடலை அப்பா எப்போதாவது பாட நான் கேட்டதுண்டு.

பெரியண்ணன்,

"அட பொன்னான மனசே.. பூவான மனசே வைக்காத பொண்ணு மேல ஆசை..."

என்று பாடும். எந்த பெண்ணின் மீது வைத்த ஆசைக்காக அன்று அண்ணன் அந்தப் பாட்டை பாடி இருக்கும் என்று இப்போது நினைத்துப் பார்க்கிறேன். அம்மாவின் சோகம் அறவே இல்லாத நான்,

"பெத்து எடுத்தவதான் என்னையும் தத்து கொடுத்துப்புட்டா..."

என்று பாடும்போது அதில் பெத்தவ மனசு கல்லாச்சி என்ற வரிகளை திரும்பத் திரும்ப பாடச் சொல்லி அம்மாவை கோவப்பட வைத்து அப்பா குலுங்கி குலுங்கி சிரித்த நாட்கள் நிழலாடுகிறது.

அப்பாவுடனான என் பொழுதுகள் ஓர் ஏழு ஆண்டுகள் தான் இருக்கும்.நான் மூன்றாவது வகுப்பிலிருந்து பத்தாவது வரை படித்த காலகட்டம் வரை தான் எனக்கு நினைவு இருக்கிறது. அப்பாவும் கூட்டங்களில் திருமண வீடுகளில் உரையாற்றும் பொழுது எல்லாம் வாய் பார்த்து நின்றிருக்கிறேன். பக்கத்து வீட்டு குப்புசாமி அண்ணன் திருமணத்தில் பேசும்போது 'நம் சமுதாய மக்கள் அம்பேத்கரை போல படிக்க வேண்டும் . அவர் சேற்றில் முளைத்த செந்தாமரை' என்று பேசி அம்பேத்கர் என்ற பெயரை முதன்முதலில் எனக்குள் கடத்தியவர் அப்பா. தன்னுடைய மகள் வழி பேரனுக்கு கூட அம்பேத்கர் என்று தான் பெயர் வைத்தார். ஆனால் அவன் ஆட்டோ ஓட்டுகிறான் என்பதுதான் எதார்த்தமாக இருக்கிறது.

ஒருமுறை சிங்கப்பூரிலிருந்து கப்பல் மூலமாக நாகப்பட்டினம் வந்து நாகப்பட்டினத்திலிருந்து பொருள்களை ஒரு லாரியில் ஏற்றிக்கொண்டு ஊருக்குள் வரும்போது ஏதோ ராணுவத்திற்கு ஆள் பிடிக்க வருகிறார்கள் என்று சொல்லி அந்த இரவு நேரத்தில் எல்லோரும் ஓடி ஒளிந்த கதையை இப்போதும் அண்ணன் ராஜேந்திரன் சொல்லிக் கொண்டே இருக்கும். பொருட்கள் கொண்டு வந்த பெட்டியை அண்ணன் தம்பி சொந்தஞ்சோலி என்று அனைவரையும் வைத்து திறந்து அனைவருக்கும் அள்ளி கொடுப்பவர் அப்பா. அது போன்ற ஒரு நாளில் நண்பர் முருகானந்தம் மூன்று வயது குழந்தையாக இருக்கும்போது அவரது அம்மாவிடம் ரொட்டி டின்னும் கால்சட்டை மேல் சட்டையும் எடுத்து கொடுத்து இருக்கிறார்கள். அந்த குழந்தை வளர்ந்து ஆசிரியரான பிறகு அந்த ஈர அன்பை நினைவில் பொதிந்து வைத்து அவரது திருமணத்திற்கு அழைப்பிதழ் கொடுக்க வந்தவர் அம்மாவிற்கு புடவை எடுத்துக் கொடுத்து வாழ்த்துப் பெற்றது நெகிழ்வான தருணங்களில் ஒன்றாகும்.இது ஒரு சோற்றுப்பதம்.

அப்பாவுடனான நண்பர்கள் அப்பாவைப் பற்றி சொல்ல கேட்கும்போதெல்லாம் என் கண்களில் பளீரென்று ஒரு மின்னல் வெட்டிச் செல்லும்.

சிங்கப்பூரார் மகனா நீங்க...?

மன்று பையனா நீங்க..?சொந்த ஊருன்னு சொல்லிகாகிட்டுயாரு வந்தாலும் அள்ளிக் கொடுத்தவர் உங்க அப்பா.சிராங்கூன் ரோட்டில் உள்ள சீனன் கூட உங்க அப்பாவைபார்த்தால் வணக்கம் சொல்லிட்டு போவான் என்று அப்பாவின் பழைய நினைவுகளை அவரது நண்பர்கள் சொல்லும் போதெல்லாம் பெருமிதம் எனக்கு.

அது1992. அன்றைய வருடம் நான் பத்தாம் வகுப்பு படித்துக்கொண்டிருந்தேன். பத்தாம் வகுப்பில் முதல் மதிப்பெண் எடுக்கும் மாணவனுக்கு முதல் பரிசு ரூபாய் 301 என்று அறிவித்திருந்தார்கள். நான்தான் பள்ளிக்கூடத்திலேயே முதல் மாணவன். மதிப்பெண் ஒன்றும் அதிகமில்லை 308தான்.ஆனாலும் அப்பாவுக்கு அவ்வளவு பெருமை. மன்னார்குடி பின்லே மேல்நிலைப் பள்ளியில் சேர வேண்டும் என்கிற முடிவு. அந்த வருட பதினோராம் வகுப்பு சேர்க்கை விண்ணபத்தை செயராமன் டீக்கடையில் உட்கார்ந்துதான் நிரப்புகிறோம். அப்பா என்ன நினைத்தார்களோ தெரியவில்லை "எனக்கு வயசு ஆயிட்டு கார்டியன் கையெழுத்து போட்டு அவனை கொண்டுபோய்ச் சேர்த்துவிட்டுடு" என்று பெரியண்ணியிடம் சொன்னார்கள். அப்படியே எனக்கு மன்னார்குடி பின்லே மேல்நிலைப் பள்ளியில் 11வது அட்மிசன் போட்டது பெரியண்ணன்.2.7.92அன்று பள்ளி திறப்பு. நான் முதல் நாள் பள்ளிக்குச் செல்ல வேண்டும்.

பத்தாம் வகுப்பு படிக்கும் வரை எங்கள் ஊரைவிட்டு தனியாக வேறு எந்த ஊருக்கும் சென்றதில்லை. ஆதலால் இரண்டாம் தேதி என்னை பள்ளியில் விட்டுவிட்டு சாயங்காலம் நெடுவாக் கோட்டையிலுள்ள மாமா வீட்டுக்கு சென்று விடுவதென்று முடிவானது மாமா என்றால் அப்பாவின் சிங்கப்பூர் நண்பர். அவர்கள் வீட்டில் தங்கிப் படிக்க வைப்பது என்பது அப்பாவின் எண்ணமாக இருந்தது. ஒன்னாம் தேதி மாலை ஆறுமணி நடராசன் கடையில் துணிகளை அயர்ன் செய்து எடுத்து வருகிறோம். கூடவே அப்பாவின் நண்பர் செகநாதன். எப்போதும் தண்ணீகுடிக்கும் அப்பா அன்று தண்ணீ குடிக்கவில்லை. மது அருந்துவதை தண்ணீகுடிப்பது என்றும் சொல்வார்கள். அன்று பேசிக்கொண்டு வரும்போது கூட

'நீ வாத்தியாருக்குத் தான் படிக்கணும். அப்பதான் நாலு பேரு மதிப்பார்கள்." என்று இப்படி இப்படியாக என்னிடம் பேசிக்கொண்டே வரும்போது ,கூட வந்த செகநாதன் பேருந்து 27க்கு குறுக்கால செல்ல முற்படும்போது அப்பா அவரின் கையைப்பிடித்து இழுத்து

"பஸ் போயிடட்டுமய்யா. ஏன்ய்யா அவசரப் படுற..ஒன்னு கிடக்க ஒன்னு

ஆயிட்டுன்னா என்ன செய்றது.. மெதுவாப் போங்க என்கிறார்.

அப்பாவைப் பார்த்த வெள்ளை மாடும் புள்ளி மாடும் பெருங்குரலெடுத்து கத்தியது.

“மாடு கத்துது... அதுக்கு வைக்கோல் பிடுங்கி போடுடா'' என்றார் என்னிடம்.

எப்போதும் போல அன்றும் எங்கள் அனைவருக்கும் வாசலில் தான் சாப்பாடு. எப்போதும் கவுச்சியோடு சாப்பிடுகிற அப்பா அன்று சாப்பிட்டது ரசமும் கூழ்வடகமும்.ஒரு சின்ன சத்தம் இல்லை .மறுநாள் காலையில் முதன்முதலாக பள்ளிக்கூடம் செல்ல வேண்டி இருப்பதால் இரவு முன்னமே தூங்கப் போனோம். அப்பா வீட்டிற்குள். வாசலில் பெரியண்ணன் ஒரு பாயிலும் நானும் நடண்ணனும் ஒரு பாயிலும் படுத்து இருந்தோம். இரவு 11 மணி இருக்கும். கிளம்பி வெளியில் வாசலுக்கு வந்த அப்பா பெரியண்ணன் கொடங்கையில் வந்து விழுந்து விட்டார்.வேர்த்து வேர்த்து கொட்டியது. நெஞ்சு வலி. உடனே வீட்டில் கிடந்த வண்டியைப் பூட்டி அப்பாவை உட்கார வைக்கின்றார்கள்.

பக்கத்தில் நடண்ணனும் அம்மாவும் வியர்வையைத் துண்டால் துடைத்தபடி. சின்னப்பா வண்டி ஓட்டுகிறது. நானும் பெரியண்ணனும் வண்டிக்கு முன்னால் ஓடிக்கொண்டிருக்கிறோம், மருத்துவரை எழுப்ப. விசயகுமார் மருத்துவமனையில் அப்பா இரும்புக் கட்டிலில் படுத்து இருக்கிறார். அப்பாவின் பக்கத்தில் நின்று நானும் அவரது வியர்வையைத் தூடைக்கின்றேன். என்னை பார்த்த அப்பா என் கழுத்தை கோர்த்து பிடித்து தன் முகத்தை என் முகத்தோடு வைத்து தேய்கின்றார். முகத்தின் லேசான தாடி முடிகள் என் கன்னத்தை குத்துகிறது.

“அவனுக்கு கழுத்தை வலிக்கும். அவன் கழுத்தை விடுங்க...” என்ற அம்மா அவர் கைகளை சிரமப்பட்டு பிரித்து எடுக்கின்றது. மருத்துவர் விசயகுமார் “இங்கு பார்க்க முடியாது..நீங்க முத்துப்பேட்டை கொண்டு போய் விடுங்கள்“ என்கிறார். கண்டக்டர் அண்ணன் ஏற்பாட்டில் கார் வருகிறது.

காரின் கதவு வரை தானாக நடந்து வந்த அப்பா,

“என்னது முத்துப்பேட்டைக்கு வெறும் வேட்டி பனியனோடு அழைச்சுக்கிட்டு போறீங்களா.. போயி சட்டை எடுத்துகிட்டு வாங்க... “என்று அந்த இக்கட்டிலும் விரட்டுகிறார். நடண்ணனும் ஓடிச்சென்று சட்டை எடுத்துகிட்டு வந்தவுடன் மகேந்திரன், குப்புசாமி, கண்டக்டர், பெரியண்ணன், அப்பா,அம்மா அனைவரும் காருக்குள். அப்பா காரின் ஓரத்தில். காருக்கு அந்தப்பக்கமாக ஓடி வருகிற நான் அப்பாவின் கைகளை பிடிக்கின்றேன். கைகளில் உள்ள முடிகளை நான் தொட்டுப் பார்க்கின்றேன். அதுதான் என்னுடைய கடைசித் தொடுதல். முத்துப்பேட்டையில் மருத்துவர் கணேசனும் கைவிரிக்கிறார். பட்டுக்கோட்டை பாலகிருஷ்ணா மருத்துவமனை நோக்கி விரைகிறது கார். பட்டுக்கோட்டையில் மருத்துவர் பாலகிருஷ்ணனும் அன்று இல்லை. உடன் தஞ்சை மருத்துவக் கல்லூரிக்கு அழைத்துச் செல்கின்றனர்.

தஞ்சை மருத்துவக் கல்லூரியில் காலை 7 மணிக்கு அப்பா பெரியண்ணனைக் கூப்பிட்டு

“ சின்னப்பய நான் இல்லைன்னு பள்ளிக்கூடம் போக மாட்டான் முதல்நாள் பள்ளிக்கூடம் போகாமல் இருக்க கூடாது நீ அழைச்சிகிட்டு போயி அவன விட்டுட்டு வந்து விடு. என்கிறார்.

நான் எங்கள் ஊர் அங்குரான் குளத்தில் குளித்து முழுகி ஈரத்துணியுடன் முருகனை அழுதபடியே வேண்டிக்கொண்டு நிற்கிறேன். கமலம்மாதான் என்னை விரட்டி விடுகின்றது.

“அவரு நல்லா இருப்பாரு.. இங்கே ஏன்டா அழுதுகிட்டு நிற்கிறாய்“ என்று.

பள்ளிக்கூடத்திற்கு கூப்பிட்ட பெரிய அண்ணனிடம் “அப்பா வரட்டும் நான் அப்பா உடனே போய்க்கிறேன்...”

*என்கிறேன். நடண்ணனும் அக்காவை அழைப்பதற்காக திருத்துறைப்பூண்டி சென்றுவிட்டது.*

*2.7.92 வாசலில் பெஞ்சில் படுத்திருந்த பெரியண்ணன் காலை 11 மணிக்கு இருந்தாப்புல இருந்து அழ ஆரம்பிக்கின்றது. நானும் அழுகிறேன் எங்கள் வீட்டு வாசலில் ஊரே கூடிவிட்டது.அதே நேரம் காலை 11 மணிக்கு*

*“சின்னப்பயலே தென்னம் பிள்ளையை மாடு திங்கிறது அதை விரட்டி விடுடா...”*

*நினைவு பிறழ்ந்த நிலையில் அப்பா பேசிய கடைசி வார்த்தைகள் அவை. அப்பாவின் உயிர் பிரிந்து விட்டது.*

*இன்றும் அப்பா உட்கார்ந்த நாற்காலி இருக்கின்றது. அவர் போட்டிருந்த கருப்பு பின்னித் துண்டும் இடுப்பு பச்சை வாரும் இருக்கின்றன. கூடவே அவருடைய நினைவுகளும் இருக்கின்றன.*

*ஆனால்.. அப்பாதான் இல்லை.*

2.7.2022 மு.ரெங்கசாமி அவர்களின் 30வது நினைவுநாள்.

---

# தகுதி தாண்டவம்

வைகறை துயிலெழுந்து
நீராடி உணவுண்டு
நாகரிக உடையணிந்து
பாடசாலை ஓடியபோதும்
என்னோடு வர மறுக்கிறது...

விறகு வெட்டும்போது
தடுக்கி விழுந்து
காயம்பட்டுக் கிடக்கும்
அம்மாவை விட்டு
என் மனம்!

பின்னாளை நினைத்து
கருத்தாய்ப் படித்து
இல்லம் சென்றால்
இன்முகமில்லை..
அம்மாவின் அழுகை!

அடுக்கடுக்காய் பணி
துடுக்காய் முடித்து
அமர்ந்து
புத்தகமெடுத்தால்
கண்ணிலோ நித்திரை!

முட்டி மோதி
வெந்து நொந்து
எடுத்த மதிப்பெண்ணை
எவரோடோ ஒப்பிட்டு
எமக்கில்லையாம் தகுதி!

**– தமிழாதன்**
முன்னவால்கோட்டை

# நலமென்பது

யாராவது நலமா?
எனக் கேட்கும் போதுதான்
நம் நலத்தை எல்லாம்
கெடுத்துச் சென்றவர்களை
ஞாபகப்படுத்திக் கொள்கிறோம்!

இன்னும் நலமாய்
இருப்பதாய் நடித்தும்
கண்களில் கசியும்
வலியை மறைத்தும்
புன்னகையை
முகத்தில் ஒட்டிக் கொள்கிறோம்!

உண்மையில் நேசத்தின்
பெயரால் தண்டிக்கப்பட்ட
மனங்கள்
இங்கு
நலமாகவே இல்லை!

நலமாய் இருப்பதாய்
நடித்துக்கொண்டுதான்
இருக்கின்றன...

எனவே யாரும்
நலமா? என யாரிடமும்
கேட்டு விடாதீர்கள்...

நலம்பெற
பிரார்த்தியுங்கள்
எல்லோருக்காகவும்!

**– கா.முகம்மமு ஷா**
திட்டுவிளை

சிறுகதை

# உதிரம்

## வெங்கலம் ச.மோகன்



விடிந்து வெகுநேரமாகியும் கதவு திறக்கப்படாமல் இருந்ததால், சரி ! காய்ச்சல்காரி எந்திரிக்க முடியாம கெடக்குறாளாட்டுக்கும் என்று அக்கம் பக்கத்தில் யாரும் பெரிதாகக் கண்டுகொள்ளவில்லை. வீட்டுக்குத் தெக்கால பட்டியிலிருந்த ஆடுகள் வழக்கத்திற்கு மாறாகக் கத்திக்கொண்டிருந்தன.

கடேசியா கணேசன்தான் கதவை முட்டித் திறந்தான். அந்தக் கூரை வீட்டின் பழைய கதவு, அதிக சிரமமில்லாமல் திறந்து கொண்டது.

உள்ளே தரையில் பொண்ணு,

காலைப் பரத்திக்கொண்டு அலங்கோலமாகக் கிடந்தாள்.

தொசுக்குன்னுற்றதுக்குள்ள சேதி காத்தா பரவி, பொண்ணுவின் விட்டுக்கு முன்பு கூட்டம் கூடிவிட்டது.

***

“எலேய்! காச வறுத்துத் தின்னா

காச்ச வுட்ருமாடா. ம்! கண்ணாலம் காட்சின்னு எனக்கும் அந்த பெரியாண்டவன் அமுசம் போட்ருந்தான்னா, இப்படியெல்லாம் கெடந்து சின்னப்படுவனா.

எல்லான் ஏந் தலயெழுத்து”

என்று நோப்பாளித்துக்கொண்டே, கணேசன் தொப்புளானிடம் கொடுத்துவிட்ட காசை வாங்கி தலவாணிக்கு அடியில் வைத்தாள் பொண்ணு.

பொண்ணுவின் மனசுக்குள்

என்னென்னல்லாமோ ஓடின.

இப்படியொரு ஈன வாழ்க்கை வாழ்வதை விட எங்காவது

மண்டக் கேணில வுழுந்து செத்துப்போய்விடலாம் என்று கூட ஆரம்பத்தில் நினைத்திருக்கிறாள்.

ஆனால், முழுக்க நெனஞ்சப்பறம் முக்காடு எதுக்குங்கிற கணக்காய், அவள் உடம்பில் மிஞ்சியிருந்த வாலிபம் அவளை இந்த சீப்பட்ட வாழ்க்கைக்குப் பழக்கிவிட்டது.

தாயாலி மவன். ஆஸ்பத்திரிக்கு கூட்டிட்டுப் போனா என்னா கொறஞ்

சாப்பூடுவான். இவன் என்னய வச்சிகிட்டிருக்கறது ஊருல எவனுக்குமே தெரியாது பாரு ...

ஒன்றும் பேசாமல் நின்றுகொண்டிருந்த தொப்புளான், கிழிஞ்ச ட்ரவுசரைக் கையில் பிடித்துக்கொண்டே சிட்டாகப் பறந்துபோய்விட்டான்.

நாலாவதாகப் பிறந்த குழந்தையும் பொட்டப்புள்ளையா போச்சேன்னு அந்தக் குழந்தைக்கு போதும்பொண்ணு என்று பெயர் வைத்தார்கள். சீக்குல கோழிக்குஞ்சுங்க சாவுற கணக்கா, நாலுல ரெண்டு காலராவுல தொள்ளிப் போச்சு. மிச்ச இருந்த ரெண்டும் வளந்த பொறவும் கூட, அம்மாக்காரி கோக்கொல்லேன்னு கத்திக்கொண்டேதான் கிடப்பாள்.

சீ...ஓம் மூஞ்சில முழிச்சா

பொடிக்கு பொயலை அம்படாதுடீ ...

அந்த மவராசன் இருக்கமாட்டாம பெத்துப்போட்டுட்டு போயிட்டான். இவுளுககிட்ட மாரடிக்க எவளால ஆவும்...

கம்மனாட்டி வளத்த கழுவாயிடக் கூடாதேன்னுதான் இப்படி கெடந்து அல்லாடுறேன் ...

அந்தக் கூக்கரையை எல்லாம் பெரியவள் காதிலேயே வாங்க மாட்டாள். ஆனால் போதும்பொண்ணுக்கு அம்மாக்காரியின் மீது ஆத்திரம் பொத்துக்கொண்டு வரும்.

ஓம் பெரிய மவ தின்ன தட்டக்கூட கழுவமாட்டா. மேனாமினுக்கி. வாக்கப்பட்டு பூட்டான்னா, ஒன்ன திரும்பிக்கூட பாக்கமாட்டா. கடேசி காலத்துல நாந்தான் ஒனக்கு பீ மூத்திரம் அள்ளணும். இரு இரு

ஒன்ன அப்ப வெச்சிக்கிறேன்...

பொண்ணுவின் மயிரைக் கொத்தாகப் பிடித்து முதுகில் ஒன்னு வைப்பாள் அம்மாக்காரி. அம்மாவுக்கும் மவளுக்கும் எப்பவும் ஏழாம் பொருத்தம்தான்!

சிலநேரம் ஈஞ்சி வெளக்கமாறு கூட பிஞ்சிவிடும்.

பொண்ணுவுக்கு மயிரு கொஞ்சம் அடர்த்திதான். சடை பின்னிவிட்டால் இடுப்புக்குக் கீழே வந்து விழும். கருப்புதானென்றாலும் பொண்ணு கொஞ்சம் லட்சணமானவள்தான்.

அந்த லட்சணமெல்லாம் கரைந்துபோய் இப்போதுபொண்ணுவின் கண்ணுக்குக்கீழே கருவளையம் பூக்கத் தொடங்கிவிட்டது. அத்தோடு இதுநாள் வரையில் இல்லாத கவலைகளும் அவளுக்குள் வேர்விடத் தொடங்கிவிட்டிருந்தன.

குறுவெசனம் பிடித்துப்போய்,

சுய இரக்கம் அவள் கண்களிலிருந்து

நீராய் கசிய, ஒரு குழந்தையைப் போல் கட்டிலில் மடங்கிக் கிடந்தாள்.

***

எட்டாவது படிக்கும் வரை சட்டப் பாவாடதான். ஓம்பதாவதில் தாவணிக்கு மாறியபோது பொண்ணு குறுகுறுத்துதான் போனாள். தன் சோட்டுப் பிள்ளைகள் எல்லோரும் வயசுக்கு வந்துவிட்ட நிலையில், வயசுக்கு வராத பொண்ணு மட்டும், வகுப்பறையில் எல்லோர் கூடவும் இருந்தாலும் அசூயையான ஒரு தனிமையை உணர்ந்தாள்.

தான் மட்டும் எங்கோ தொலைந்து போய்விட்டதாக நினைத்துக் கொள்வாள். அந்த வருசமும் வயசுக்கு வராமல் போனதால், அதற்குமேல் பள்ளிக்கூடம் போக வெட்கப்பட்டுக்கொண்டு, படிப்பை விட்டுவிட்டு அம்மாக்காரியுடன் ஆடு மேய்க்கப் போய் ; காடு கரம்புன்னு திரிந்து கொண்டிருந்தாள்.

மாதவிடாய் குறித்த வெளிப்படையான உரையாடல்கள் நம்மிடம் இன்றுவரை உருவாகவில்லை. மாறாக, புவியியல் முழுவதும், இளம் பெண்கள் தங்கள் இரத்தப்போக்கு பற்றி வெட்கப்படவேண்டும் என்று காலம் காலமாக கற்பிக்கப்பட்டுள்ளது. அப்படியான இரத்தப்போக்கு எதுவும் நிகழாத பொண்ணு, வெட்கப்படாமல் வேறென்ன செய்வாள்?

அந்துசா இருக்கவேண்டிய அம்மாக்காரியேபொழுதுவிடிஞ்சுபொழுது சாஞ்சா, மகளை மானாங்கண்ணியா திட்டிக்கொண்டேதான் இருப்பாள். அதென்னமோ தெரியல, அவளுக்குப் பொண்ணு என்றாலே எப்பவுமே புளிச்சக்கீரை சட்டிதான். பத்தாதுக்கு

அவ வயசுப் புள்ளிவளும் அவளை எதற்கும் துணை சேர்ப்பதில்லை.

பள்ளிக்கூடத்தில் காலர் பட்டன் போட்டுக்கொண்டு பொண்ணுவைச் சுற்றிச்சுற்றி ஆலவட்டம் போட்டுக் கொண்டிருந்த இரண்டொரு பையன்களும் கூட இப்போதெல்லாம் திரும்பிப் பார்ப்பதில்லை. தண்ணியெடுக்க, துணி தொவைக்க, கீத்துக்கொட்டாயில் படம் பார்க்கன்னு எல்லா இடத்துக்கும் பொண்ணு தனியாகத்தான் போவாள்.

அப்படித் தனியாகப் போவதும் கூட

பொண்ணுவுக்கு

நொய்த்திரியம்தான். பூன மீச வைச்ச எளவட்டங்களின் ஏவுடியம் அவளைப் பின்னால் தொரத்தும்.

அவவயசுக்கு வராததச் சொல்லி தொசங்கட்டி கிண்டலடிப்பார்கள். ஆரம்பத்தில் தயங்கித் தயங்கி கடந்து போனவள் அப்புறமெல்லாம் அவர்களை மண்டகப்பிடி பிடித்துவிடுவாள்.

ஏண்டா ! கட்டையில போறவனுவளா ... ஒங்களுக்கெல்லாம் அக்கா தங்கச்சி கெடையாதாடா...!? வயசுக்கு வர்லைன்னா அது ஏங் குத்தமா...

ஊர்ல புதுசா கண்ணாலம் கட்டிக்கொண்டவர்கள் ஜோடியா தெருவில் போவதைப் பார்க்கும்போதும், நிறை சூலிகளைப் பார்க்கும்போதும் பொண்ணுவிற்கு ஒருமாதிரி ஆகிவிடும். அன்று முழுக்க அவளிடம் பேசும் எல்லோரிடமும் எரிந்து எரிந்து விழுவாள். அப்போதெல்லாம் காரணமே அறியாமல் யாரையாவது பழிவாங்கவேண்டும் போல் தோன்றும். அன்றைய ராத்திரியில் தூக்கம் வராமல் கயித்துக்கட்டிலில் சாமம் வரை புரண்டு கொண்டிருப்பாள். அந்தமாதிரி சமயங்களில், அவள் தன்னைத் தற்காலிகமாகத் தணித்துக்கொள்வாள்.

***

பொண்ணு சொன்ன மாதிரியே அவ அக்காக்காரி வாக்கப்பட்டு போனதுக்கப்புறம் ஏதாவது வரும்புடிக்குன்னாதான் ஊருக்கு வருவா. தங்கச்சிக்காரி வயசுக்கு வராததால் அவள் புருசன் வீட்டு ஆட்களும் வந்து எட்டிப்பார்ப்பதில்லை.

பொண்ணுதான் அம்மாக்காரிக்கு கடேசி காலத்துல சேவுகம் பண்ணிக்கிட்டு, மலையங்காட்டுல ஆடு மேச்சிக்கிட்டு பராரியாட்டம் ஓடியாடிக்கொண்டிருந்தாள்.

மதியம் ஆடு ஓட்டுவதற்குள்,

கூட்டிப் பெருக்கிச் சோறாக்கித்

துணி தொவைச்சி ... இப்படி மங்கமாண்ட வேலைகளையும் தான் ஒருத்தியே இழுத்துப்போட்டுக்கொண்டு செஞ்சாலும் தன்னையும் தன் உடம்பில் ஊற்றெடுக்கும் தினவையும் பகலில் மட்டுமே அவளால் மடைமாற்ற முடிந்தது.

மச்சி வீட்டு பவுனம்பாள் மவளுக்கு நலுங்கு வச்சபோது பொண்ணுவும் போயிருந்தாள். பொட்டு வைக்க தன்னை யாரும் கூப்பிடாதது கூட அவளுக்குக் கவலையில்லை.

சாப்பிட உட்கார்ந்தபோது பவுனாம்பாள் மூஞ்சைத் திருப்பிக்கொண்டாள். பொண்ணுவின் இலைக்கு சந்தவம் வைக்காமல் போய்விட்டாள். வந்த அழுகையை வாயோடு அடக்கிக்கொண்டு வீட்டுக்கு வந்துவிட்டாள். அன்றிலிருந்து கண்ணாலம் காதுக்குத்து என்று எதற்கும் பொண்ணு போவதுமில்லை.

அவளையாரும் அழைப்பதுமில்லை.

பள்ளிப்படிப்பைத் தாண்டாவிட்டாலும் பொண்ணு சில விசயங்களில் பக்குவப்பட்டுதானிருந்தாள். தன்னைப் புறக்கணிப்பவர்களை அவள் பெரிதாக எடுத்துக்கொள்வதே இல்லை. தன்னை அவர்களிடமிருந்து பாதுகாத்துக்கொள்ள சிடுமூஞ்சியாய் மாறிப்போனதால், அவள் முகத்தில் எப்போதுமே ஒரு இறுக்கம் ஒட்டிக் கிடக்கும்.

ஆனால் தன் உடம்பின் தேவைகளை அவளால் அப்படி அவ்வளவு சுளுவாய் புறக்கணிக்க முடியவில்லை. வேக்காடாய் இருக்கும் ராத்திரிகளில் அவளது அடிவயிற்றில் லேசாகக் குறுகுறுக்கும். கைகளைப் பிசைந்துகொண்டு கண்களை மூடிக்கொள்வாள். உடம்புக்குள்

வழியும் அனலையும் கண்ணுக்குள் கசியும் புனலையும் ஆற்றத் தெரியாமல் அல்லாடியபடி,

கரையிலிட்ட மீனாய் கட்டிலில் நெளிந்து கிடப்பாள்.

ஆனால் கொஞ்ச காலத்திற்கு மேல் தன் உடம்பைஜெயிக்க முடியாத பொண்ணுவிற்கு மாட்டு யாவாரி கணேசனுடன் எப்படியோ தொடுப்பு ஏற்பட்டுவிட்டது. கொண்டவனுடன் கூடிக் குலவும் பாக்கியதையும், குழந்தைகள் பெற்று கொஞ்சி குலவும் யோக்கியதையும் தனக்கு வாய்க்கவே போவதில்லை என்றான பின்பு, பாவம்! பொண்ணுவால் வேறென்னதான் முடியும்...

பொண்ணுவின் வீட்டுத் திண்ணையில் உட்கார்ந்து கொண்டுதான் கணேசன் எப்பவும் ஏவாரம் பேசுவான். திண்ணையோர வேம்பின் நிழல் அவனுக்கு ஒரு நொண்டிச் சாக்கு.

நாலு பல்லு பட்டுருக்குது. ரெண்டாயிரத்துக்கு ஒரு நயா பைசா கொறைக்கமுடியாதுப்பா ...

செனை மாடுய்யா. போடற கன்னு கெடெரியா இருந்தா உனக்கு யோகந்தான்...

இப்படி சொல்லிக்கொண்டே,

ஏ! புள்ள... பொண்ணு ஒரு சொம்பு தண்ணி குடேன் என்பான். தண்ணி கொடுக்கும்போது பொண்ணுவையும் அறியாமல் அவள் கண்கள் கணேசனை ரசிக்கும். கருகருன்னு கிருதா மீசை. சட்டையில் 2 பட்டனை எப்பவும் போடமாட்டான். மாரிலும் மயிர் வனம்தான். அவன் உடகார்ந்திருக்கும் உசரதுக்குத்தான் பொண்ணு வருவாள்.

கணேசனுக்கும் வேறு போக்கிடம் இல்லை. ஆனால் நல்ல வரும்புடிக்காரன்.

என்ன! குடிச்சிட்டு அப்பப்ப கொஞ்சம் அலம்பல் பண்ணுவான். பொண்ணுவின் அம்மாக்காரி உசுரோட இருக்குமட்டும் ஏடக்குறுக்க வந்துபோனவன்,

கெழவி செத்தபிறகு கூரைவிட்டு திண்ணையிலேயே ஐக்கியமாகி விட்டான். கெழவியின் சாவுக்கும் கருமாதிக்கும் கணேசந்தான் மறைமுகமாக செலவு செய்தான். பொண்ணுவின் வீட்டில் சோறு தண்ணி பொழங்குவதில் தொடங்கி கடைசியில் பொண்ணுவையும் பொழங்கத் தொடங்கிவிட்டான். பொண்ணுவிற்கும் அது தேவையாகத்தானிருந்தது. எத்தனை ராத்திரி ஏங்கிக் கிடந்திருப்பாள். ஊரில் எல்லாப் பெண்களுக்கும் கண்ணாலம் காட்சி என்று எல்லாம் சராசரியாய் நிகழ்ந்துகொண்டிருக்கும்போது, தனக்கு மட்டும் ஏன் இப்படி என்று எத்தனை நாள் கண்ணீர் சிந்தியிருப்பாள். எந்த ஜென்மத்துல என்ன பாவம் பண்ணுணனோ என்று எத்தனை நாள் புலம்பித் தீர்த்திருப்பாள். அப்படிக் கிடந்தவளுக்கு கணேசன் வடிகாலாக வந்துசேர்ந்தான். பொண்ணுவும் அவனைப் பெலாப்பிசினாட்டம் பிடித்துக்கொண்டாள். அவனிடமிருந்த முரட்டுத்தனம் அவளுக்கு ரொம்பவும் பிடித்திருந்தது.

கணேசனால் அவளுடைய மனக்கசப்பும் குறையத் தொடங்கியது. இப்பெல்லாம் காசு பணம் அம்புட்டையும் கணேசன் அவள் கையில்தான் கொடுத்துவைத்தான்.

அதுவரை நாலைஞ்சு பித்தளை சருவமும் ஒரலு குந்தானியுந்தான், அம்மாக்காரி மிச்சம் வச்சிட்டுப் போயிருந்த பரம்பரை சொத்து. தங்கச்சிக்காரி வயசுக்கு வராம கெடக்குறாளேன்னு அந்தக் கூரை வீட்டில் பாகம் கேட்காமல் நறுசாக ஒதுங்கிக்கொண்டாள் மேனாமினுக்கியான மூத்தவள்.

ஆட்டாம் புழுக்கை அள்ளிக்கொண்டிருந்தவளுக்கு, கணேசன் வந்த பிறகு வெந்தயச் செயினெல்லாம் கூட கழுத்துக்கு வாய்த்தது. பூசணம் பூத்துக்கிடந்தவளின் உள்ளே கொஞ்சநாட்களாய் பூக்கள் பூக்கத்தொடங்கியிருந்தன.

***

ஏரிக்கரை பெரியாண்டான் கோவில் அரசமரத்தடியில் எளவட்டங்கள் சீட்டாடும் நேரங்களில், ஊர் சேதிகள் எல்லாம் ஊடாடும்.

எலேய் ! மாணிக்கம். வயசுக்கு வராத பொம்பளைக்குக் கூட ஆம்பளங்க மேல ஆசை வருமாடா...

எனக்கும் அதான்டா டவுட்டு. அதெப்டிறா வரும்?

போடா... வயசுக்கு வர்றதுக்கும் அதுக்கும் சம்மந்தமில்லடா என்று சேகரோ குமாரோ யாராவது ஒருத்தன் கூட்டத்தில் பதில் சொல்லுவான்.

சிரிப்புச் சத்த எக்காளத்தோடு சீட்டாட்டம் களை கட்டும்போது, அந்தச் சிரிப்பில் அரசமரம் கூட அதிர்ந்து கிடக்கும்.

கணேசனுடனான பொண்ணுவின் தொடுப்பை கும்பக்கூட்டத்தில் எவளாவது சாடை பேசிவிட்டால் போதும். பிலுபிலுவென பிடித்துக்கொள்வாள். ஆமா... இவ ஊரு மேஞ்ச கதையெல்லாம் எனக்குத் தெரியாது பாரு ... வந்தேன்னா அறுத்துவுட்றுவண்டி....!

ஓக்கியம் ஒலயில. நண்டு வளயில ...

பேச்சிலேயே எதிராளியை சந்தி சிரிக்க வைத்துவிடுவாள்.

***

காமாஞ்சோமான்னு ஒரு வருசம் போனதே தெரியல. இப்பல்லாம் கணேசனின் போக்குவரத்து குறையத் தொடங்கிவிட்டது. அவனுக்கும் மாட்டு யேவாரம் குறைந்துவிட்டது. இழுத்துப் புடிச்சி சம்பாரிக்கிற கொஞ்ச காசையும் குடிச்சி தீத்துவிட்டு, போதையில் எங்காவது மல்லாந்து விடுவான். பொண்ணுவுக்கு நரை விழுந்து தோல் சுருக்கமிட்ட நாட்களில் கணேசனின் பொழக்கம், ஆடிக்கொருநாள் அம்மாசிக்கொருநாள்னு ஆகிப்போச்சு. ஆளு கையில சொல்லிவுட்டா கூட சிலநேரம் வந்து சேரமாட்டான். மொத்தத்தில் பொண்ணுவின் உடம்பு கணேசனுக்கு இப்போது பச்சநாவியாகிவிட்டது.

பொண்ணுவுக்குத் தன் உடம்பின் தினவு ஏறத்தாழ அடங்கிவிட்டதுதான். ஆனால் தன் பவுசு தீர்ந்ததும் தன்னிடமிருந்து விலகும் கணேசனின் மீது ஆத்திரம் ஆத்திரமாக வந்தது. ஆனால் அந்த ஆத்திரம் கொஞ்சம் கொஞ்சமாய் குறைந்து நாள்பட்ட புண்ணாய் அவளின் மனதில் நிறைந்துபோனது.

ம்! காத்தடிக்கிற வரைக்கும் தூத்திக்கிட்டுப் போயிட்டான். யாரச் சொல்லி என்னாவப்போவுது.

பாம்பாட்டம் நீண்டுகிடந்த மயிரில் அநேகம் உதிர்ந்துவிட்டதில் நாற்பத்தி சொச்சம் வயசிலேயே பாரப்பட்ட கிழவியாட்டம் ஆகிவிட்டாள் பொண்ணு.

தன்னை நினைக்கும் பொழுது பொண்ணுவுக்கு வேகோலம் வேகோலமாய் வரும். ஆனால் அழுவதைத் தவிர அவளால் வேறொன்றும் செய்யமுடியவில்லை.

பதின்ம வயதின் கடேசியில் பொண்ணு வயசுக்கு வருவதற்காக அம்மாக்காரியும் பனவெல்லம் கருஞ்சீரவம் அம்மான் பச்சரிசின்னு என்னென்னவோ கொடுத்துப் பார்த்தாள். கடன ஒடன வாங்கி பெரியாண்டானுக்கு கெடா கூட வெட்டினாள். ஆனால் கடேசிவரை பொண்ணு வயசுக்கு வரவேயில்லை.

காய்ச்சலா கிடந்த பத்திருபது நாளும் கணேசன், பொண்ணுவின் வீட்டுப்பக்கம் எட்டிக்கூடப் பார்க்கவில்லை. இன்னைக்கு பிச்சை போடுற மாதிரி சின்னப்பய கையில் காச குடுத்துவுடுறான். நானும் வயசுக்கு வந்து காலாகாலத்துல கண்ணாலம் முடிஞ்சிருந்தன்னா இப்படி அனாதையா நாதியத்துக் கிடந்திருப்பனா... எங்க ஆயி அப்பன் என்னய பெக்காமயே இருந்திருந்தா, இப்படி ரெண்டாட்டுல வுட்ட குட்டிகணக்காதான் ஆயிருப்பேனா...

நானும் ஒரு பொறப்புன்னு பொறந்து ச !... ஏன் நெலமை ஏன் எதிரிக்குக் கூட வரக்கூடாது.

என்று நினைத்தபடியே பல்லை நறநறவென்று கடித்தாள். உடம்பில் பலம் கூட்டி கட்டிலை விட்டு மெல்ல எழுந்தாள். தலை கிறுகிறுக்க, அந்தக் கசடு அடிவயிற்றிலிருந்து திரண்டு மேலெழுந்து பொண்ணுவின் தொண்டையை அடைத்தது. வேதனையுடன் எச்சில் கூட்டி விழுங்கிக்கொண்டவளின் ஞாபகத்தில் கணேசனுடன் கடைசியாகச் சம்போகித்தது மின்னி மறைந்தது. அவன் இரண்டு கைகளாலும் தன் பின்னந்தலையை பற்றி இழுத்து வாயோடு செய்த அந்த முத்தம் இன்னும் உதட்டில்

தொற்றிக்கொண்டிருப்பதாகப் பட்டது. சீலையின் முந்தானையால் அந்த முத்தத்தை துடைத்தெறிய முயன்றவளின் கண்களின் ஓரம் அனிச்சையாய் நீர் கசியத் தொடங்கியது.

பாழாப்போன இந்த ஒடம்பு சொகத்துக்காகத்தானே இத்தனை அவலமும் அவமானமும்!

என் உடம்புக்குள்ளாற இருக்கிற இந்த ரத்தக் கசடு வெளியே வராமப் போனதுதானே இது எல்லாத்துக்கும் காரணம்...

அனலும் சில்லிப்பும் ஒரே நேரத்தில் உடலெங்கும் மேவ, வெறி கொண்டவளாய், கழுத்தில் கருப்பேறிக் கிடந்த வெந்தயச் செயினை பிய்த்து எறிந்துவிட்டு சமையக்கட்டிலிருந்த அந்த மாடாக் குழியை நோக்கி நடுங்கும் கால்களால் நடந்தாள். வெளியே அந்தரத்து இருட்டில் நிலாவும் நடுங்கிக்கொண்டிருந்தது போலத்தான் தோன்றியது.

***

ஏய்..சேதி தெரியுமாடீ!

நம்ம கணேசன் வப்பாட்டி, பிளேடால மடியக் கிழிச்சுக்கிட்டு செத்துட்டாளாம். சீலை பூரான் ஒரேரத்தமாம்... பாத்தா மயக்கம் வந்துரும் என்று பொண்ணுவின் வீட்டுக்கு வெளியே தெருவில் பெண்கள் கிசுகிசுத்துக் கொண்டிருந்தார்கள்.

ஊழிக்காலம் போல ஊரே ஒரு மாதிரி பரபரத்துக் கிடந்தது.கூரை வீட்டுக்கு உள்ளே இடுப்புச்சீலையை நனைத்துவிட்டு தரையில் ஓடி உறைந்திருந்த பொண்ணுவின் உதிரத்தில் காலைப்பொழுதின் ஈக்கள் சாவதானமாய் மொய்த்துக் கொண்டிருக்க, வீசியெறியப்பட்ட வெந்தயச் செயினின் கண்ணிகள் அறுபட்டு தங்க மணிகள் தரையில் சிதறிக் கிடந்தன. ●

---

# அன்பை மட்டும் பகிர்வோம்

சிறுவனின்
சிட்டிகை விரலிடையில்
சிலிர்த்தபடி
உதிர்த்துவிட்டுப் போகிறது
வண்ணங்களை
வண்ணத்துப் பூச்சியொன்று!

பணி நிமித்தம்
பாராமலிருக்கும்
மேய்ப்பனின்
முழங்கால்களை
மெல்ல முட்டியபடி
கவனம் ஈர்க்கிறது
ஆட்டுக்குட்டியொன்று!

புசுபுசு பூனையின் மீதேறி
விளையாடிக் கொண்டிருக்கிறது
நட்பாகிப்போன
எலிகளின்
குறும்புக் குட்டிகள்!

புலிக்குட்டியின்
வாலைத்தொட்டு
பிடிப்பது மரமேறி
விளையாட்டு காட்டுகிறது
சேட்டைக்குப் பேர்போன
குரங்கொன்று!

யாவர்க்கும் யாவற்றுக்கும்
வரவு செலவு
கணக்குகளற்று
லாபத்தில் இயங்கும்
பேரன்பின் நிறுவனங்கள்
நட்டத்தில் இயங்குவதாக
அறிவிக்கப்படுகின்றன!

அள்ளியள்ளி
எல்லோர்க்கும்
இரைத்துக் கொண்டிருந்தாலும்
ஊறிக்கொண்டே இருக்கிறது
யாவருக்குமான
அன்புக்கேணி!

**- க.தங்கபாபு**

# இடங்காண்கோட்டை
# சிவகுமார்
# கவிதைகள்



காமக் களைகள் களைவது எப்படி?
காதற் பயிர் விளைவது எப்படி?
என்றெனக்குத் தடுமாற்றம்
எனக்குள் நீ வந்தபின்பு மாற்றம்...
விதையென விழுந்தாய்
எனக்குள் பெருவிளைச்சல்...
உன் காதலில் விளைந்த
நினைவுச் சாத்துகளையே
நிரப்பி வைத்திருக்கிறது
என் மனப்பந்தாயம்...

மலர்கள் உனைக் காணவே
மூடிய விழி திறந்து மலர்கின்றன
கண்ட பின்பு
உனைப்போலில்லையே என
வாடி.. வாடி... உதிர்கின்றன

வாசலில் கோலமிட்டு
நடுவில் பூ வைத்துப் போகிறாய்..
வாசலுக்கும் வந்ததடி வாசம்..

விதவிதமான பூக்களை
வாசலில் வரைகிறாய்
நீ போனபின்னே
அவை பூத்து மணக்கின்றன..
பூ நீ இட்ட கோலம்
பூக்கோலம் ஆனதடி..

என் உள்ள வாசலில்
உன் விழி விரலால்
கோலமிட்டுப் போகிறாய்
அழகழகாய்...
என் உள்ளம் இல்லமானது
நீ வந்து குடியிருக்க...

இந்த வையத்தில்
வாய்மொழிகளின் தாய்மொழி
தமிழ்தான் என்றாலும்
கண்களால் பேசிக்கொண்ட
முதல்மொழி
காதல்மொழிதான் என்பதை
உன் கண்களிடமிருந்தே
கற்றுக் கொள்கிறேன்...

மின்வெட்டு வந்த தமிழகம்போல்
நான் விழுந்து கிடந்தாலும்
உன் கண்வெட்டு தருகிறது மின்சாரம்
எழுந்து நடக்க...

ஓரக்கண் உளியால்
என் இதயச் சுவரில்
வெட்டிப் போனாய்...
அது காதல் கல்வெட்டு..

நேர்பார்வை பார்த்து நீ நடக்கையில்
வருகிறது வினா..
ஓரப்பார்வை பார்த்துப் போகிறாய்
கிடைக்கிறது விடை..

இமைச்சிறகு விரித்த
விழிக் கருவண்டு
என் இதயப் பூவின்
குருதி குடித்து
உனை நிரப்பிப் போகிறது...

ஓர் நொடிக்குள்
பாராமல் பார்த்துச் செல்லும்
ஓரவிழி மின்னல் வெட்டால்
தாக்குண்டு கிடக்கிறேன்..
உன் இதழ்மருந்து கொடுத்தே
எழுப்ப வேண்டும் எனை...

இமைப் பாக்குவெட்டி
இமைத்து இமைத்து
எனைத் துண்டாடுகிறது..
உன் பார்வை
வசிய மருந்து கொடுத்து
ஒட்ட வைத்து ஒட்ட வைத்து
எனை உயிர்ப்பிக்கிறாய்..

●

# பொறப்பு

## த.ரெ.தமிழ்மணி



குப்பென்று வேர்த்ததும் முழிப்பு வந்தது. உடம்பு முழுதும் ஒரே கசகசப்பு. மூன்று மணிக்கு எழுந்து நான்கு மணிக்கெல்லாம் புறப்பட்டால் எப்படி இருக்கும்? முன்னிருக்கையில் முழங்காலால் முட்டுக் கொடுத்து மூவர் மடியிலும் படுத்திருந்த இளந்திரையன் வயட்டி எடுத்தான். வீட்டில் இருக்கும்போதே, 7 மணிக்கு எழுப்பத் தொடங்கினால் அந்தா இந்தா என்று 8 மணிக்குத்தான் பாயை விட்டு எழுவான். பயணத்தில் சொல்லவா வேண்டும்? கண்ணாடியை இறக்கிவிட்டு வெளியே தலைநீட்டி எட்டிப் பார்த்தேன். வண்டி, நெரிசலுக்கு நடுவே நின்றிருந்தது.

“இது என்ன இடம்?”

“பாண்டிச்சேரி. ஜிப்மர்கிட்ட வந்துட்டோம்.” ஓட்டுநர் செந்தில் சொல்லி முடிப்பதற்குள் வெளியிலிருந்து பலமான கைத்தட்டல் ஓசை கேட்டது. கதவோரம் நின்ற திருநங்கை காசு கேட்டார். செம உயரம்; கருப்பழகு. சுள்ளென்ற வெயிலில் நின்றும் முகத்தில் சொட்டு வேர்வை இல்லை.

“ஐய.. என்னா இம்மாம்நேரம் துழாவுற? சிக்னல் போட்டுட போறான்”

– பொறுமையின்றிப் பார்த்தார். வழக்கமாகச் சாமி படத்திற்கு முன்னால் சில்லரைக் காசுகள் இருக்கும். இப்போது அங்கு இரண்டு ரூபாய்தான் இருந்தது. பின்புறம் திரும்பிய ஓட்டுநர் உதடு பிதுக்க, படுத்திருந்த இளந்திரையனை நெட்டித்தள்ளி பணம் எடுக்க முற்பட்டோம். அதற்குள் பச்சைவிளக்கு ஒளிர்ந்தது. வண்டிகள் உறுமிக்கொண்டு பறக்கஆயத்தமாயின. செந்தில், கையிலிருந்த காசைக் கொடுத்தார். வாங்கிப் பார்த்த திருநங்கை,

“ரெண்டு ரூவாவுக்குத்தான் இந்தக் தேடு தேடுனியா? ஆளப்பாரு.. ஒரு பத்து ரூவா கூடவா இல்ல?” கேட்டபடி வண்டிகளுக்கு வழிவிட்டு நகர்ந்தார். செந்தில் முகம் சுண்டிப்போனது.

“இந்த அரவாணிகளே இப்படித்தான். வண்டி மாத்தும்போது ராவடி பண்ணும் பாருங்க...”

“எல்லாரையும் அப்படிப் பாக்க கூடாது செந்திலு. அந்தம்மா திட்டினது உன்ன மட்டுமில்ல; எங்களையும்தான்!”

''அவங்களுக்குன்னு ஒரு வேலை கிடைச்சா ஏன் இப்படி பிச்சை எடுக்கப்போறாங்க?'' என் மனைவியும் சேர்ந்து கொண்டாள்.

மனநிறைவில்லை செந்திலுக்கு. வண்டி வேகமெடுத்துக் கிழக்குக் கடற்கரைச் சாலையில் பறந்தது. சாலையின் இருபுறமும் மா, பலா, கொய்யா எனச் சிறுகடைகள் வரும்போது வாங்கலாம் என்று பார்த்தால் இருட்டிவிடும். வாங்கலாமா, வேண்டாமா என்ற நினைப்பில் வேடிக்கை பார்த்துக்கொண்ட வரும்போது மகள் நறுமுகையின் கெஞ்சல்–

''அப்பா.. அம்மா... குட்டிகுட்டி மரத்துல லட்டு லட்டா மாம்பழம் தொங்குது. காரை நிறுத்த சொல்லுங்கப்பா... நான் போய் பிச்சுக்கிட்டு வந்துடுறேன்...''

''ஆமாப்பா'' இளந்திரையனும் சேர்ந்து கொண்டான்.

''அதெல்லாம் தப்பும்மா! பழம்தானே வேணும்? செந்திலு! அந்தக் கடையோரமா நிறுத்து! வண்டி நின்றதும், மனைவி அனிதா, பிள்ளைகளை அழைத்துக் கொண்டு போனாள். முன்னிருக்கையில் இருந்த டேவிட் எழவே இல்லை. செமதூக்கம்! டேவிட் இளம் உடற்கல்வி ஆசிரியர்; துணைக்கு வந்தவர்.

கடையில், எச்சில் ஊறவைக்கிற அளவுக்கு வகைவகையான மாம்பழங்கள் வாங்கியது அல்லாமல் கொசுறு வேறு கிடைத்ததால் மூவர் கண்களிலும் மாம்பழத் தித்திப்பு.

''நாம என்ன பண்ணிக்கிட்டிருக்கோம். அப்பாவ பாருங்கம்மா.. கடிகாரத்தையே பாத்துக்கிட்டிருக்காங்க...''

''இருக்காதா பின்னே? ரொம்ப நாளா பாக்கணும்னு ஆசைப்பட்ட சாளுவன் குப்பத்துக்கில்ல போறாங்க''

''அங்க, என்ன இருக்கும்பா?'' ஆர்வம் மேலிடக் கேட்டான்.

''நான் சொல்றண்டா தம்பி... அது, சங்ககால முருகன் கோவில். ஏதோ ஒரு கடல்கோள்ல புதையுண்டு போயிருக்கு. கடைசியா அடிச்ச ஆழிப்பேரலையால கடல் உள்வாங்குச்சி. அப்ப, ஆராய்ச்சியாளருங்க கண்கள்ல தட்டுப்பட்டிருக்கு''– நான் பெருமையாய்ப் பார்த்தேன். கொஞ்சம் படிக்கும் வழக்கமுடையவள். இளந்திரையன் அடுத்த கேள்விக்குத் தாவினான்.

''கடை, கடத்தெருவெல்லாம் இருக்குமா அக்கா?''

''அதெல்லாம் இருக்காது... கடற்கரைதான் இருக்கும்''

கேட்டவன் கண்களில் சின்ன ஏமாற்றம். அதுவும் சாளுவன் குப்பம் வந்துவிட்டோம் என்பதை அறிந்தவுடன் கரைந்துபோனது. வண்டி அரைவட்டம் அடித்து வலப்புற ஓரமாகச் சென்று நின்றது. சாலையோரம் நடந்து சென்ற அம்மாவிடம் கேட்க, தொலைவில் சவுக்குத்தோப்புக்கிடையே அமைக்கப்பட்டிருந்த கம்பி வேலியைக் காட்டினார். கதவைத் திறந்து கொண்டு இறங்கிய பிள்ளைகள் இருவரும் ஆர்வம் மேலிட கோயிலை நோக்கி ஓடினர்.

''கார்ல இதுக்கு மேல போக முடியாது. மணல்ல சிக்கிக்கும்'' – எச்சரித்த 'இல்லாள்' பிள்ளைகள் பின்னே நடந்தாள். முன்னிருக்கையில் தூங்கிக் கொண்டிருநத டேவிட் அப்போதுதான் விழித்தார். இடம் வந்துவிட்டதைப் பார்த்துவிட்டு சுறுசுறுப்பானார்.

''செந்திலு! ஐயாவால நடக்க முடியாது. காரை மணல்மேல ஓட்டாம, புல்லாமூச்சியா பாத்து வுடு''

டேவிட் சொன்னபடிதான் ஓட்டினார். ஆனால் சிக்கிக் கொண்டு உறுமியது. ஒரே மணல்மூட்டம்.

''டேவிட்டு! இதை அப்பறம் பாத்துக்கலாம். முதல்ல என்னை இறக்குங்க. செந்திலு! நீயும் வா போகலாம்''

டேவிட் என் கால்களைப் பிடித்து வெளியே இழுத்து செருப்புகளை ஒழுங்காக மாட்டிவிட்டு நிமிர்த்தினார். அவர் கைகளைப் பிடித்தவாறு நடக்கத் தொடங்கினேன். கண்ணாடிகளை ஏற்றிவிட்டு கதவைச் சாத்திய செந்தில் எங்களைப் பின்தொடர்ந்தார்.

சரிவில் இறங்கும்போது கால்கள் மணலில் புதைந்தன. செருப்புக்கும், காலுக்கும் இடையே புகுந்த மணல் சுட்டது. பள்ளமான பகுதிக்கு வந்து சேர்ந்தோம். மேலே ஏறப்போவதை நினைத்தால் மலைப்பாக இருந்தது.

''ஐயா இனிமே நடக்க வேணாம். உப்பு மூட்டை தூக்கிக்கிறேன். கையை என் தோள்பட்டைக்கு மேலே நீட்டுங்க!''

என்றவாறு முதுகைக் குனிந்தார். குச்சிகுச்சியான என் கைகள் பிச்சிக்குமோ, என பயந்தபடி நீட்டினேன். மணிக்கட்டைப் பிடித்து முதுகில் சுமந்து வேகமாய் மேலேறினார். சமதரை வந்ததும் மெதுவாகப் பிடியைத் தளரவிட்டார். பயந்தபடி ஒன்றுமில்லை. உடம்பு அழுத்தியதில் நெஞ்சுக்கூடு மட்டும் இலேசாக வலித்தது. மீண்டும் கைகளைப் பிடித்து நடக்கலானேன்.

''இந்த தூண்களெல்லாம் ஏன் இப்படிக் கிடக்கு?''

– குவிந்து கிடக்கும் பாறைத்தூண்களைக் காட்டிக் கேட்டார்.

''இது சங்ககாலக் கட்டடத்து மேல பல்லவர் எழுப்பிய பாறைத்தூண்கள். ஆய்வுக்காக இப்படி வச்சிருக்காங்க''

– பேசிக்கொண்டே கம்பி வேலி அருகில் வந்தோம். பெரிய பள்ளத்தில் இருந்த கோயில் கண்களை விரியச் செய்தது. கீழடியில்கூட இப்படியொரு முழுக்கட்டுமானம் கிடைக்கவில்லை.

''என்னங்க இது.. வடக்கு பக்கம் பாத்தாபடி கட்டியிருக்காங்க?

– வினவினாள் மனைவி அனிதா.

''இந்த வடிவமைப்புதான் இக்கோயிலோட தொன்மைய காட்டுது. கிழக்கு மேற்கு திசையில் கட்டணும்னு ஆகமவிதி உருவாக்கப்படுவதற்கு முன்பு கட்டப்பட்டது. தெற்கு திசை பார்த்து கும்பிடுவது போல அமைக்கப்பட காரணம், குமரிக்கண்டத்தில் இறந்த முன்னோர்களை வணங்கும் வழக்கமே''

இதுவரை அங்குமிங்கும் ஓடி ஒளிப்படம் எடுத்துக் கொண்டிருந்த நறுமுகை வந்து குறுக்கிட்டாள்–

''எனக்குத் தெரியும். தென்புலத்தார் வணக்கம் தானே?''

''ஆமாம்மு'' தலையசைத்தேன்.

விடவில்லை அவள்.

''இந்த முருகன் கோயிலுக்கும் சாளுவன் குப்பம்ங்கிற பேருக்கும் தொடர்பு இருக்காப்பா?''

உதடு பிதுக்கினேன்.

''கண்டிப்பா இல்லை. இந்த ஊரோட பேரு திருவிழிச்சில். சாளுவ மன்னன் ஆட்சி செஞ்சப்ப மாத்திட்டாங்க''

''சாளுவன் குப்பம் பேரு புரிகிற மாதிரிதானே இருக்கும்?''– இழுத்தாள்.

''இல்லம்மா. பழைய பேரில் வாழ்ந்த வரலாறு இருக்கு. புதுப்பேரில் அடிமைப்பட்ட வடுதான் இருக்கு'' – மறுத்தேன். புரிந்தது போல தசையசைத்தாள். எனக்கு கோயில் அருகே செல்லும் ஆர்வம் அதிகரித்தது.

''டேவிட்! என்னை அந்தக் கல்வேல்கிட்ட அழைச்சிட்டுப் போறீங்களா?''

அதற்காகக் காத்திருந்தவர் போல என்னைத் தோளில் சாய்த்தார். மீண்டும் உப்புமூட்டை முன்புபோல இப்போது சறுக்கவில்லை. தரைமட்டத்திற்குக் கீழே மண் கெட்டித்து இருந்ததே காரணம். கல்வேல், பீடம் போன்ற சதுரக் கட்டமானம் ஒன்றின்மேல் ஊன்றப்பட்டிருந்தது. அதனருகே சென்றவுடன் இறக்கி விட்டார். செருப்பைக் கழற்றி விட்டு பீடத்தில் ஏறினேன்.

''என்ன.. பக்தியா?'' டேவிட் சிரித்தார்.

''இல்ல. அதுக்கு மேலே. கடல் அழித்தது எத்தனையோ? இது கடல் காத்து தந்த அரும்பொருள். 2300 ஆண்டுகளுக்கு முந்தைய தமிழர்கள் கட்டிய வணங்கிய இடத்தில் நான் நிற்கிறேன். இந்த வரலாற்றுப் பெருமிதம் இயல்பாக மதிக்கத் தோன்றுகிறது.

கல்லால் ஆன வேலை வரலாற்று வாஞ்சையுடன் வருடினேன். இதன் சிறப்பை உணர்ந்த எதிரிகள், 2008இல் உடைத்துவிட்டனர். பின்னர் அதனை ஆய்வாளர்கள் ஒட்டினர். ஒட்டிய

இடம் வேலின் கழுத்தருகே காயம்பட்டது போல் தெரிந்தது.

எதிரே ஒரு செங்கல் கட்டுமானம். அருகே அரைவட்டப் பாறையால் மூடிய அமைப்பு. வேலின் பின்னே கோயில்; சிதிலமடையாத கருவறைச் சுவர்கள். கோயிலின் பின்னே குடைவரைச் சிற்பமாக, யானை செதுக்கும் முயற்சியைக் காலம் தடுத்து விட்டிருந்தது. டேவிட் உதவியுடன் மேலே ஏறி அங்கிருந்த ஒற்றைப் பனையில் சாய்ந்தவாறு முழுக் கட்டமைப்பையும் கண்களுக்குள் உள்வாங்கினேன்.

''அப்பா! நேரமாச்சு...'' இளந்திரையன் நிமிண்டினான். கடலுக்கு நன்றி சொல்லி கிளம்ப ஆயத்தமானேன்.



சங்ககால கல்வேல்

ஓட்டுநர் முன்னே சென்று வண்டி எடுக்கும் முயற்சியில் ஈடுபட்டார். வாய்ப்பில்லை. பின்னே வந்து வேகமாக முன்னே சென்றாலும் மணலை வாரி அடித்ததே தவிர நகரவில்லை. என்னை ஒரு வேப்பமரத்தில் சாய்ந்தபடி நிற்க வைத்துவிட்டு, டேவிட்டும் வண்டியைக் கிளப்ப உதவினார். நடக்கவில்லை. அரைமணி நேரம் மெனக்கட்டும் விளங்கவில்லை.

கடற்கரையிலிருந்து காதல் இணை ஒன்று எங்களை வேடிக்கை பார்த்துக்கொண்டே சாலையை நோக்கிச் சென்றது. இளைஞர்கள் சிலர் மதுப்புட்டிகளோடு எங்களைக் கடந்து சென்றனர். உதவி கோருவது என்று புரியவில்லை.

''முருகா! ரொம்ப சோதிக்காதே.. காரை எப்படியாச்சும் மீட்டுக் கொடு'' அனிதா புலம்பினாள்.

சற்று நேரத்தில் திருநங்கையர் மூவர் கடற்கரையிலிருந்து வந்து கொண்டிருந்தனர். டேவிட் என்னை உட்கார வைத்ததைப் பார்த்து எங்களை நோக்கி வந்தனர். அருகில் வந்ததும்–

''என்னப்பா டிரைவர் நீ? அதுதான் வாங்கிக்கிதே.. அப்புறம் ஏன் அதுலேயே திரும்பத் திரும்ப காரை கொண்டுபோய் வுடுற? ரிவர்ஸ் எடுத்து, வேற தடத்தில் வேகமா பாத்து வுடு''

ஒரு திருநங்கை செந்திலுக்கு ஆற்றுப்படுத்தினார். மற்ற இருவர் ஆளுக்கொரு வேப்பமரத்தை நோக்கி போயினர். வேர்த்து விறுவிறுத்து தொப்பரையாய் நனைந்திருந்தார் செந்தில். வண்டியைப் பின்னே எடுத்து சொன்னபடி புதுத் தடத்தில் விரட்டினார். மீண்டும் சிக்கும் சூழலில் -

''ஏ! நிறுத்து.. நிறுத்து... வீலுதான் மாட்டுதே... அப்புறம் ஆக்சிலேட்டர அமுக்குற?''

''காலையிலேர்ந்து இந்த அரவாணிங்க நம்ம பாடாபடத்துதுங்க'' – முனகினார். அதற்குள் கைக்கொள்ளா அளவு வேப்பங்கொத்துகளோடு வந்து முன் சக்கரங்களில் போட்டனர்.

''இப்ப விடு காரை''

– உத்தரவுக்காகக் காத்திருந்தது போல் பறக்கவிட்டார். பாய்ந்து மேட்டிலேறி சமதளத்திற்கு வந்தவுடன் உறுமல் நின்றது. அப்பாடா என்றிருந்தது. நன்றி பார்வையோடு 100 ரூபாயை எடுத்து நீட்டினாள் அனிதா.

"ஐய.. எதுக்கு இது? உடம்பு முடியாதவரை வச்சுகிட்டு நின்னே... வர்றவன் போறவன் எல்லாம் நமக்கென்னுட்டு போறமாதிரி நாங்களும் போகமுடியுமா?'' வாங்க மறுத்தார்.

இன்னொரு திருநங்கை நாணயம் ஒன்றை எடுத்து மந்திரித்துக் கொடுத்தார்.

"இந்தா பர்சுல வச்சிக்க" நெகிழ்ச்சியோடு வாங்கிக் கொண்டாள். விடைபெற்றார்கள், பெண்களைவிட அழகாய் தெரிந்தார்கள். அழகு தோற்றத்தில் மட்டும் இல்லையே...

செந்திலின் மனசில் சொற்களால் ஏற்படுத்த முடியாத மாற்றங்கள் நிகழ்ந்து கொண்டிருந்தன. ●

# புறநானூறு - தமிழரின் வேர்களைத்தேடி...

இலரா மோகன்

அது ஒரு
அனல் தெறிக்கும்
போர்க் களம்

படைக்கலத் தூரிகை
பசுமைப் பட்டின்
குருதிச் சாற்றால்
தீட்டிய ஓவியம்...

வீரம் குதிக்கும்
தீரமிகு காவியம்..

வீரம்
கொண்ட கொள்கையில்
நிற்பது வீரம்...
குன்றாய் மானம்
காப்பது வீரம்..
எண்ணிய இலக்கினை
எய்துதல் வீரம்..

தன்னை ஏதின்றி
தாழ்த்திப் பேசுவோர்..
தன்னுரிமை பறிப்போர்..
தளையிட நினைப்போர்..
ஆணவம் தகர்த்து
ஆக்குதல் வீரம்...

போர் என்பது
பொருதல் மட்டுமா..
அல்ல... அல்ல...

அது
அறத்தின் மண்டிய
மாண்புறு மறப்போர்.



ஒழுங்கு அமைந்த
உயர்தனி விதிக்குள்
பொருது வெல்வதே
போர்அறம் தமிழர்க்கு...

போரில் பகைவர்
தாக்காத வரையில்
நேரிய வீரர்
தாக்குதல் இழுக்கு...

ஒத்த வலிமை
இல்லாப் பகையை
சுத்த வீரன்
சாடுதல் அழுக்கு...

முற்றுகைக்கு அஞ்சி
முடங்கிய வேந்தர்
அற்றிட போரிடல்
அறத்தின் சறுக்கு...

புண்ணும் வடுவும்
போரின் பரிசு - இவை
ஒன்றும் பெறாதவன்
வாழ்வோ தரிசு...

முகத்திலும் மார்பிலும்
பெறுவது விழுப்புண்...
முதுகிலும் புறத்திலும்
உறுவது புறப்புண்...

அம்பினைப் பகைவர்
நாணேற்றும் வேளை
தம்விழி அசைந்து
கண்ணிமை மூடினும்
புறப்புண் என்றே
பழிப்பர் அறவோர்...

மார்பினில் பாய்ந்து
மேனியைத் துளைத்து
மறுபுற முதுகினில்
கூர்முனை தோன்றினும்
புறப்புண் என்றே
இறப்பர் தமிழர்...

விழுப்புண் பெறுவது
விழுமியம்... மானம்...
புறப்புண் உறுவதோ
பேடிமை அவமானம்...

போர்க்களம் தன்னில்
நிகழ்த்திடும் அறம்
மறவர்க்கு மட்டுமே
உரித்தது அல்ல...
செருவினில் நின்று
சேர்ந்து போரிடும்
களிற்றுக்கும் பொருந்தும்
கருத்தே அவ்வறம்...

களிறுகள் போரில்
காட்டிய மரபு...
தமிழர்கள் நித்தம்
ஊட்டிய தொடர்பு...

கரிய மலையோடு
கட்டிப் புரண்டது
காரிருள் மேகம்...
அது
களிறோடு மோதிய
களிற்றின் வேகம்...

உரமிகு கோட்டுடன் (தந்தம்)
பூண்அணி கோடு
உராய்தலில் வெட்டியது
மின்னல் கோடு...

இடியென முழங்கின
இருபக்க வேழம்...
கொட்டும் மழையாய்
களிற்றின் இரத்தம்...

களிறோடு பிடிகளும்
கலக்கின களத்தை...
பெண் யானையின்(பிடி)
கடைக்கண் ரசித்தது
ஆண் யானையின் (கன்று)
அரும்போர் திறத்தை...

காதல் களிறு
களத்தினில் நிகழ்த்திடும்
மோதல் சாகசம்
மூட்டிய செருக்கால்
பிடிகள் தமக்குள்
பெருமை பேசின...
முடியா களிற்றை
முனகி ஏசின...

போரினில் அஞ்சி
புறத்தே ஓடிய
வீரமில் களிற்றின்
பெண்யானை வெட்கி
நாணி நகைத்ததாம்...

வானுயர்ந்த போர்மரபை
வடித்திட்டார் கோவூர்கிழார்...
-----------------

ஒரு சமயம்
குறுநில மன்னனோடு
மோதிப் பொருதான்
பெருநில வேந்தன்
பெரும்படை ஏந்தல்...

குறுநில மன்னனோ
இளையோன்.. வலியோன்...
குருதியில் வெப்பம்
கொதித்திடும் புலியோன்...
மானமும் வீரமும்
மனத்தினில் உடையோன்...

அவனது புகழால்
அழுக்காறு உற்றான்
(பொறாமை)
மாநிலம் விரிந்த
மாட்சிமை வேந்தன்...

அடக்கிட....
அடிமைப் படுத்திட....
ஒடுக்கிட...
உரிமை பறித்திட....
தொடுத்தான் போர்
தொலைந்தான் பார்... என
குடித்தான் மனப்பால்...
கொடுங்கோல் நினைப்பால்...

பட்டத்து யானையின்
மத்தகத்து வேந்தன்
கூற்றமாய் சினந்து (எவன்)
கொடும்போர் புரிந்தான்...

கிட்டத்தில் எவரும்
கிட்டிடா வண்ணம்
முட்டியது யானை...
மிரண்டது தானை...

சிற்றூர் மன்னன்
சீறியே பாய்ந்தான்
சிறுஇலை வேல்தனை
சினந்து வீசினான்
வேந்தன் உணர்ந்த
வேழத்தில் பாய்ந்து அதன்
ஏந்து முகத்தில்
குத்தி நின்றது...

வேந்தன் வெகுண்டான்
ஒளிர்வேல் எறிந்தான்
சந்தனம் பூசிய
குறுநில மன்னனின்
விரிந்த மார்பினில்
வேகமாய்ப் பாய்ந்தது...
சொரிந்தது குருதி...
செந்நீர் அருவி...

இளைஞன் தேடினான்
எறிவேல் காணான்
எதிரே வேந்தனோ
களிற்றின் மேலே...

சமநிலை இல்லா
சமரில் இளைஞன்
கண்கள் இரண்டும்
கக்கிற்று நெருப்பை...
புண்உமிழ் குருதியாய்...
துப்பிற்று வெறுப்பை...

வேந்தனின் வேழம்
விரைந்தது அவனிடம்
தும்பிக்கை சுழற்றி
தூக்கி அடித்திட...

ஒருகணம்...
ஒரே கணம்தான்...

தன்
நெஞ்சில் பாய்ந்து
நேர்குத்தி நின்ற
வஞ்சக வேந்தனின்
வேலினைப் பிடுங்கினான்...
குருதி வடியும்
கூரிய வேலினை
எறிய உயர்த்தினான்
இளையோன் கையினை...

கண்டது..
மிரண்டது...
கலங்கியது...
களிறு
பெருநில வேந்தனின்
பட்டத்து யானை..

இளைஞனின் எறிவேல்
எப்படிப் பாயும்...
அறியும் அந்த
அனுபவ வேழம்...

பட்டென்று திரும்பிற்று
படபடத்து ஓடிற்று...

பட்டத்து யானையே
புறமுதுகு இட்டதால்
பயந்தன அத்தனை
போர்க்கள களிறும்
பாய்ந்தன களம்விட்டு...
புறமுதுகு தானிட்டு...

இளம்பெண் யானைகள்
இதனைக் கண்டன
குழம்பின... கொதித்தன...
குன்றின நாணி...

அஞ்சி ஓடுதல்
அவமானக் கேடு - இனி
கெஞ்சினும் களிற்றினை - பிடி
கொஞ்சிடல் ஏது...

பாடி முடித்தார
கோவூர் கிழார்...

விளங்கினும் போர்அறம்
விழைந்தது தமிழினம்
இழந்தோம் இவையெலாம்
ஏற்றோம் இழிவெலாம்...

நீறுபூத்த நெருப்பு
ஊதிவிட்டால் ஒளிரும்...
மாசடைந்த தங்கம்
உலையிலிட மிளிரும்...

புற நானூற்று
உலை தொடுவோம்...
வரலாற்றில்
நிலை பெறுவோம்...

''சீறூர் மன்னன் சிறியிலை எஃகம்
வேந்துஊர் யானை ஏந்து முகத்ததுவே...
வேந்துஉடன்று எறிந்த வேலே என்னை
சாந்துஆர் அகலம் உளம் கழிந்தன்றே
உளம்கழி சுடர்ப்படை ஏந்திநம்
பெருவிறல்
ஓச்சினன் துரத்த காலை மற்றவன்
புன்தலை மடப்பிடி நாணக்
குஞ்சரம் எல்லாம் புறக் கொடுத்தனவே''

புறநானூறு - 308
புலவர் - கோவூர் கிழார் ●

எண்ணங்களை எங்களுக்கு எழுதி அனுப்புங்கள். களம் தர காத்திருக்கிறது கண்ணாமூச்சி...

# ஊடலும் சாடலும்

சு.இராமசுப்பிரமணியன்



அரசுக்கல்லூரிகளில் பணியாற்றியதால், சென்னை, கோவை, திருவண்ணாமலை, மன்னார்குடி, தஞ்சை என்று பல ஊர்களில் வசிக்கும் வாய்ப்பு கிட்டியது. திருவண்ணாமலையில் 12 ஆண்டுகளும் மன்னார்குடியில் 10 ஆண்டுகளும் என்று எனது பணிக்காலத்தின் பெரும்பகுதி இந்த இரண்டு ஊர்களில் கழிந்துவிட்டது. இரண்டு ஊர்களுமே ஆண்டு முழுவதும் விழாக்கள் நடைபெறும் சிறப்புப்பெற்ற ஊர்கள்.

**திருவண்ணாமலை:**

திருவண்ணாமலை சிவத்தலம். ஔவை சிறப்பித்துக்கூறிய 'சான்றோர்கள்' வாழும் தொண்டைமண்டலத்தில் அமைந்துள்ளது. 2668 அடி உயரம்கொண்ட மலையின் கிழக்குப்பக்கம் மலைச்சரிவில் 1100 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்ட அண்ணாமலையார் கோயில் அமைந்திருக்கிறது.

சிவனுக்கான பஞ்ச தலங்களில், நெருப்புக்கானத்தலமாக திருவண்ணாமலைக் கருதப்படுகிறது. "திருவண்ணாமலையை நினைக்க முத்தி' என்று ஒரு சொலவடையும் உண்டு. அப்பர், சுந்தரர், ஞானசம்பந்தர், மாணிக்கவாசகரால் பாடப்பெற்ற திருத்தலம். திருவண்ணாமலையை எரிமலை என்று பலரும் தவறாக நம்பிக்கொண்டும், எழுதிக்கொண்டும் இருக்கின்றனர். திருவண்ணாமலை எரிமலை அல்ல.

சிவன்கோயில் என்றாலும், அருணகிரிநாதரால் முருகன் பெருமைக்கும் உரிய தலம். கிழக்கில் இராஜகோபுரம் வழியாகக் கோயிலுக்குள் நுழைந்தால், இடதுபுறம் பழமையான முருகன் கோயில் உள்ளது. அந்தக் கோயிலுக்கு "கம்பத்து இளையனார் கோயில் என்று பெயர். முன் மண்டபத்தில் உள்ள ஒரு தூணில் முருகன், அருணகிரிநாதருக்குக் காட்சிகொடுத்ததால் அப்பெயர் வந்ததாகச் சொல்கிறார்கள்.

திருவண்ணாமலை என்றாலே,

ஒவ்வோர் ஆண்டும் கார்த்திகை மாதத்தில் வரும் தீபத்திருவிழாதான் அனைவரது நினைவுக்கும் வரும். திருக்கார்த்தியல் அன்று மலை உச்சியில் நெய்தீபம் ஏற்றுவது மிகச்சிறப்பான விழா. ஒரு தீபத்தின்போது, ஊரிலிருந்து வந்திருந்த உறவுக்காரர் ஒருவருடன் மலை ஏறி, 2668 அடி உயரத்தில் உள்ள மலைடஉச்சிக்குச்சென்று தீபம் ஏற்றுவதை அருகிலிருந்து பார்த்திருக்கிறேன்.

தீபத்திருநாள் அன்று காலை 4 மணி அளவில் கோயிலில் பரணி தீபம் ஏற்றப்படும். கார்த்திகைத்தீபம் போன்றே பரணிதீபமும் மிகவும் சிறப்பு வாய்ந்தது.

ஆகஸ்ட் 14,15,16 ஆகிய மூன்று தினங்கள் அருணகிரிநாதர் விழா மிகச்சிறப்பாகக் கொண்டாடப்படும். பல்வேறு ஊர்களில் இருந்தும் பலவகையான கலைஞர்களும் வந்து கலந்துகொள்வார்கள். பெங்களூர் ரமணி அம்மாள், குன்னக்குடி வைத்தியநாதன், பித்துக்குளி முருகதாஸ், வலையப்பட்டி (தவில்) போன்ற பல இசை பிரபலங்களை நான் அருணகிரிநாதர் திருவிழாவில்தான் பார்த்திருக்கிறேன். ஒரே இடத்தில், ஒரே நேரத்தில் பதினெட்டு நாதசுரக்கலைஞர்கள், பதினெட்டுத் தவில் கலைஞர்கள் கலந்துகொண்டு நிகழ்த்தும் கூட்டு இசைக் கச்சேரியைப் பார்த்தும், கேட்டும் பரவசமடைந்திருக்கிறேன்.

**உண்ணாமுலை அம்மனின் ஊடல்;**

குறிப்பிட்டுச் சொல்லவேண்டிய மற்றொரு முதன்மையான விழாதான், “திருவூடல். ஒவ்வோர் ஆண்டும் பொங்கலுக்கு மறுநாள் திருவண்ணாமலையில், ‘திருவூடல்‘ திருவிழா நடைபெற்றுவருகிறது. பிருங்கி முனிவர் உண்ணாமுலை அம்மனைத் தவிர்த்து, அண்ணாமலையாரை மட்டுமே வணங்கிவந்தாராம். ஒருமுறை அம்மனும் சாமியும் ஒன்றாக அமர்ந்திருந்த போது, பிருங்கி முனிவர் வண்டு உருவில் அண்ணாமலையாரை மட்டும் சுற்றிவந்திருக்கிறார். அது அம்மனுக்கு சந்தேகத்தை ஏற்படுத்த, அதன் காரணமாக சாமியுடன் ஊடிவிட்டார் என்று அண்ணாமலை புராணம் சொல்கிறது.

அடி அண்ணாமலை என்று மலையின் பின்புறம் சிறு கோயில் ஒன்று உள்ளது. அளவில்தான் சிறியதே தவிர அமைப்பில் அப்படியே அண்ணாமலையார் கோயிலை ஒத்திருக்கும். அந்தக்கோயில், அண்ணாமலையாரின் மற்றொரு ‘அம்மனுக்கானது’ என்று சொல்கிறார்கள். உண்ணாமுலை அம்மனின் சந்தேகத்திற்கு சாமியின் அப்படிப்பட்டத் திருவிளையாடலும் காரணமாக இருக்கலாம்.

சாமியுடன் அம்மன் எப்படி ஊடுகிறார் என்பதை நிகழ்த்திக் காட்டுவதுதான் ‘திருவூடல்’‘ சாதாரண மனிதர்கள் என்றால் வெறும் ஊடல். சாமியும், அம்மனும் என்பதால் திருவூடல்.

அண்ணாமலையார் கோயிலின் தெற்கில், மிக அகலமான வீதி உள்ளது. அங்குதான் திருவூடல் இரவு ஏழு மணிக்கு நிகழ்கிறது. அதன் காரணமாக அந்த வீதி, திருவூடல் வீதி என்றே அழைக்கப்படுகிறது. ஆன்மிகம், கடவுள் நம்பிக்கை என்பதற்கு அப்பாற்பட்டு, அந்தத்திருவூடல் நிகழ்வு காண்பதற்கு அத்தனை சிறப்பாகக் கண்கொள்ளாக்காட்சியாக இருக்கும். குறிப்பாக அம்மன் வாகனத்தைச் சுமந்துசெல்பவர்கள், வாகனத்தை ஆட்டிஆட்டி அம்மன் ஊடுவதை அத்தனை அழகாக நம் கண்முன் கொண்டுவந்துவிடுவார்கள். திருவாரூர் தேரோட்டம்போல திருவண்ணாமலை திருவூடலும் அத்தனை சிறப்புவாய்ந்தது.

திருவூடல் முடிந்தபிறகு, உண்ணாமுலை அம்மன் கோயிலுக்குத் திரும்பிவிடுவார் (அம்மனே ஆனாலும், பெண்களுக்கு வேறு போக்கிடம் ஏது?. அண்ணாமலையார் குமாரகோயிலுக்குச் சென்று இரவு தங்கிவிட்டு, மறுநாள் காலை கிரிவலத்தை முடித்துக்கொண்டு கோயிலுக்குள் நுழைவார். அப்போதும் அம்மனுக்கு சினம் தணியாததால், கொடிமரத்திற்கு அருகில் மீண்டும் ஓர் ஊடல் நிகழும். அதனை மறுவூடல் என்கின்றனர். அப்புறம் என்ன, கூடல்தான்.

**மன்னார்குடி:**

மன்னார்குடி வைணவத்தலம். செண்பக ஆரண்யம் என்று அழைக்கப்படும் இராஜமன்னார்குடி சோழமண்டலத்தில் அமைந்துள்ளது. தஞ்சை, தமிழகத்தின் நெற்களஞ்சியம் என்றால், மன்னை, தஞ்சையின் நெற்களஞ்சியம் (தகவல், முதல் தெருவில் வசித்த முன்னாள் ஆரம்பப்பள்ளி ஆசிரியர் சக்கரவர்த்தி)

தமிழ்நாடு அரசுக்கல்லூரி ஆசிரியர் இயக்கத்தில் தீவிரம் காட்டியமைக்காக, திருவண்ணாமலையிலிருந்து மன்னார்குடிக்கு பழிவாங்கல் அடிப்படையில் பணியிடமாற்றம் செய்தனர். ஆனால், உண்மையில் எனது இயக்கப்பணி, மன்னார்குடிக்கு வந்தபிறகு மேலும் தீவிரமானது என்பதுதான் உண்மை. மறைந்த நெடுவாக்கோட்டை ராஜேந்திரன், மறைந்த மேலவாசல் மா.சீ.பூபாலன், இரா.காமராசு, புலவர் கலியபெருமாள், ஏசுதாஸ்ய (லிமிசி) போன்ற பல போராளிகளையும் எனக்கு நண்பர்கள் ஆக்கியது. தேசிய மேல்நிலைப்பள்ளியில் எனது மகனும், செய்ன்ட் ஜோசப் கான்வெண்டில் எனது மகளும் பள்ளிப் படிப்பை முடித்தனர்.

மன்னார்குடியில் 10 ஆண்டுகளும் மகிழ்ச்சியாகவே கழிந்தது. நாங்கள் மன்னார்குடியில் வசித்த 1996 வரையிலும்கூட மாட்டு வண்டிகளே பயன்பாட்டில் இருந்துவந்தன. பிள்ளைகள், பள்ளிக்கு மாட்டு வண்டிகளிலேயே சென்றுவந்தனர். அது ஊரின் பழமையைப் பறைசாற்றிக் கொண்டே இருந்தது. பொங்கலுக்கு மேலராஜவீதியில் மலைபோல் குவிந்திருக்கும் கரும்புக்கட்டுகளையும், இஞ்சி மஞ்ச ளையும் முதன்முதலாகப் பார்த்தபோது உண்மையாகவே மலைத்து விட்டேன். பொதுவாக மற்ற ஊர்களில் பொங்கலுக்குக் கரும்பு ஒன்றிரெண்டு வாங்குவதுதான் வழக்கம். ஆனால் மன்னார்குடியில், கரும்பை கட்டுகட்டாகவே மக்கள் வாங்கிச்செல்வதைப் பார்த்து வியப்படைந்திருக்கிறேன்.

மன்னார்குடிபோல், துளிகூட கலப்படமற்ற பால் வேறு எங்கும் எங்களுக்குக் கிடைத்ததில்லை. எனது மனைவி, அந்தப்பாலைக் காய்ச்சித் தயிராக்கி, மோர் கடைந்து, வெண்ணெய் எடுத்து, உருக்கிய நெய்யும் வீட்டில் இருக்கும். ஒவ்வொரு மாதமும் பால் கூப்பன் வாங்கச்செல்லும்போது மறக்காமல், அந்தக் கலப்படமற்ற பாலில் செய்த சுவையான பால்கோவா வாங்கிவருவேன். சில நாட்களில், எனது மனைவியே பால்கோவா தயாரித்துவிடுவார்.

மாலைவேளைகளில், மேல ராஜவீதியில் சைக்கிளில் பால் வியாபாரம் செய்பவர்கள் வரிசையாக நின்று, காய்ச்சியப் (பனங்) கற்கண்டுபால் விற்பார்கள். வேறு எங்கும் இப்படிப் பார்த்ததில்லை. தஞ்சை போன்ற மற்ற ஊர்களிலும் கற்கண்டு பால் கிடைக்கிறது. இங்கொன்றும் அங்கொன்றுமாக கடைகளில் கிடைக்கும். மன்னார்குடி மேலராஜவீதி போல் தினமும் மாலைவேளைகளில் மட்டும், கடைகளின்றி சைக்கிளில் கற்கண்டுபால் விற்பதைப்போல் மற்ற ஊர்களில் பார்க்கமுடியாது. அது மன்னார்குடிக்கேயான தனிச்சிறப்பு.

இங்குள்ள இராஜமன்னார்கோயில் வைணவத்தலங்களில் மிகப்பெரியது. குலோத்துங்கசோழனால் சுண்ணாம்புக்கலவையும், செங்கல்லும் கொண்டு கட்டப்பட்டது. ‘திருவாரூர் தேரழகு, மன்னார்குடி மதிலழகு’ என்று ஒரு சொலவமும் உண்டு. அந்த அளவிற்கு மதிற்சுவர்கள் உயரமாகவும் அழகாகவும் தோற்றம் தருகின்றன.

இத்திருக்கோயில் ராஜாதி ராஜ சதுர்வேதிமங்கலம் என்றும் அழைக்கப்படுகிறது. 16 கோபுரங்களும், 7 பிரகாரங்களும், 7 தீர்த்தங்களும் உள்ளன. மன்னார்குடி இராஜகோபாலசாமி கோயிலில் நான் பார்த்துப் பெரிதும் வியந்தவை அகலமான வெளிப்பிரகாரங்கள்.

ஹரித்ராநதி மஞ்சளாறு என்பது இராஜகோபாலசாமி கோயிலுக்கானத் தெப்பக்குளம். 23 ஏக்கர் பரப்பளவும், 1158 அடி நீளமும், 847 அடி அகலமும் கொண்டு, கோயில் தெப்பக்குளங்களிலேயே மிகப்பெரியதாக விளங்குகிறது...

மன்னார்குடி ஒரு வைணவத்தலம் என்பதோடு, சமணத்தலமும்கூட என்பது பலரும் அறியாதது. ஹரித்ராநதிக்கு அருகில் ஒரு தமிழ்ச்சமணர் குடியிருப்பும், சமணர் கோயிலும் உள்ளது. 19வது தீர்த்தங்கரரான மல்லிநாதர் அங்கு கோயில்கொண்டிருக்கிறார். நான் அந்தக் கோயிலுக்குச்சென்று பார்த்திருக்கிறேன். இன்றும்கூட, தமிழ்ச்சமணர்கள் அங்கு வசிக்கிறார்கள்.

மன்னார்குடியில், தெற்கு வீதியிலிருந்து கோயிலுக்குச்செல்லும் வீதியில், இராஜகோபாலசாமி கோயிலின் தெற்குக்கோபுர வாசலில் ஒரு வீட்டில் குடியிருந்தோம். மன்னார்குடிக்கு வந்த புதிது. எனது மகள் 5வதும், மகன் 4வதும் படித்துக்கொண்டிருந்தர்கள். அப்போது நடந்த கல்லூரி ஆசிரியர்களின் மறியல்போராட்டத்தில் கலந்துகொண்டு, கைதுசெய்யப்பட்டு 9 தினங்கள் திருச்சி மத்தியசிறையில் இருந்த அனுபவம் மறக்கமுடியாதது.

அந்தப்பகுதி கோபாலசமுத்திரம் என்று அழைக்கப்படுகிறது. அதனால், ஆண்டு முழுவதும் நிகழும் கோயில் விழாக்கள் எங்களுக்கு நன்றாகத் தெரிந்திருந்தது. பங்குனித்திருவிழாவின்போது வாகனங்கள் தெற்குவீதி வழியாகச் செல்லும்.

பங்குனிப்பெருவிழா 18 நாட்களும், அதனைத் தொடர்ந்து ஹரித்ராநதியில் 12 நாட்கள் விடையாற்றி விழாவும், தெப்ப உற்சவமும் நடைபெறும். சூரிய பிரபை, சந்திர பிரபை, வெட்டும் குதிரை, வெண்ணைத்தாழி, சாமித்தேரோட்டம் போன்றவிழாக்கள் மிகவும் பிரபலமானவை. அந்த விழாக்கள் அனைத்துமே சாமியை முன்வைத்து நடத்தப்படுபவை.

**செங்கமலத்தாயாரின் சாடல்:**

செங்கமலத்தாயார் கோயிலுக்கு வெளியே செல்லமாட்டார். அதனால் அவருக்கு "படிதாண்டாப்பத்தினி' என்னும் பெயரும் உண்டு. தை மாதம் நாலாம் நாள்மட்டும் சாமி தாயாருடன் சேர்ந்து காட்சிகொடுக்கிறார். மற்றபடி சாமிக்கும், அம்மனுக்கும் தனி உற்சவம்தான். தாயார் சந்நிதிக்கு எதிரில் பெண் கருடாள்வாரும் உண்டு.

காணும் பொங்கல் அன்று பெண்களும் சிறுவர்களும் கோயிலுக்குள் சென்று நாள் முழுவதும் விளையாடி, மாலையில்தான் வீடுதிரும்புவார்கள். பெரிதும் தெற்குப்பிரகாரத்தில் அவர்கள் விளையாடுவார்கள் என்பதனால், தெற்குக்கோபுர வாயிலில் நின்று அதனை வேடிக்கை பார்க்கும் வாய்ப்பு எனக்குக்கிட்டியது.

ஆயிரக்கணக்கில் மக்கள் வந்தாலும் கோயில் வெளிப்பிரகாரத்தில் இடம் உள்ளது. அப்படி வருபவர்களில் இஸ்லாமியப் பெண்களும் உண்டு. பர்தாவுடன் வருபவர்கள் கோயிலுக்குள் நுழைந்தபிறகு அவற்றைக் கழட்டி வைத்துவிட்டு விளையாடுவார்கள். தமிழகத்தின் சமூக நல்லிணக்கத்திற்கு மன்னார்குடி இராஜகோபாலசாமி கோயில் ஒரு சான்றாகும். கோயிலுக்கு வெளியே செல்லாத செங்கமலத்தாயார், கோயிலுக்குள் வரும் அந்தப்பெண்களை, ஒரு தாயாக, ஆதரித்து, அன்புகாட்டி, அடைக்கலமளிக்கிறார் என்றும் சொல்லலாம். (கொள்ளிக்கண் படாமல் இருக்கவேண்டும் தாயே)

ஆடி மாதம் முப்பது நாளும் அம்மனை முதன்மைப்படுத்தி விழாக்கள் நடைபெறும். செங்கமலத்தாயார் கோயிலுக்கு வெளியே செல்வதில்லை என்பதால், அந்த விழாக்கள் கோயிலுக்குள்தான் நடைபெறும். முப்பதுநாளும் செங்கமலத்தாயார், ஆட்கள் சுமந்துசெல்லும் வாகனத்தில், வெளிப்பிரகாரத்தில் சுற்றிவந்து மீண்டும் கருவறைக்குள் நுழைந்துவிடுவார். அம்மன் கோயிலுக்குவெளியே வரமாட்டார் என்பதனால் ஆடிப்பூரத்தன்று அம்மன் தேரோட்டமும் கோயிலுக்குள்ளேயே நிகழும். தேரை இழுப்பவர்கள் தேசியமேல்நிலைப்பள்ளி மாணவர்கள்.

அந்த முப்பதுநாள் திருவிழாவில், ஒருநாள் 'மட்டையடித் திருநாள்' நடத்தப்படுகிறது. ஆர்வம் காரணமாக அந்தத்திருவிழா பற்றி கேட்டுத் தெரிந்துகொண்டேன்.

இராஜகோபாலசாமி, செங்கமலத் தாயாரை விடுத்து, வேறொரு தொடுப்பு விட்டிற்குச்சென்றுவருவதை வாடிக்கையாக வைத்திருக்கிறார். மிகவும் திறமையாகத் தாயாரை ஏமாற்றிவந்த சாமி ஒருநாள் தாயாரிடம் மாட்டிக்கொள்கிறார்.

குறிப்பிட்ட நாளில் கண் அயர்ந்ததால், இரவு முழுவதும் தொடுப்பு வீட்டில் தங்கிவிட்டு, மறுநாள் காலையில்தான் இராஜகோபாலசாமி வீடு திரும்புகிறார். இரவு வீட்டிற்குத் திரும்பாததன் காரணம் செங்கமலத் தாயாருக்குத் தெரிந்துவிடுகிறது. விடிந்து வீட்டிற்குத் திரும்பிய சாமியை தாயார் பனைமட்டையால் வெளுத்து வாங்கி விடுகிறார். அதுதான் மட்டையடித் திருநாள்.

**பூமியும், சாமியும்:**

‘பூமியை படைத்தது சாமியா, சாமியைப் படைத்தது பூமியா?’ என்றால் பூமிதான் சாமியைப் படைத்தது என்று உறுதியாகச் சொல்லலாம். எந்த மதமானாலும், ஆற்றல்மிகு சாமிகள் அனைத்துமே ஆண்கள்தான். ஆதாமின் தேவைக்காகவே ஏவாள் படைக்கப்பட்டதையும் இதனோடு சேர்த்துப் பார்க்கலாம். மாத்திரமல்ல, இதுபோன்ற ஊடல், சாடல் விழாக்களும், பெண்தெய்வங்கள்சார்ந்தே நிகழ்வதையும் சிந்தித்துப்பார்த்தால், கோயிலும், தெய்வங்களும், விழாக்களும் ஆணாதிக்க மனிதசமூகத்தின் நகல் (replica) என்பது புரியும்.

தமிழ்நிலப்பரப்பில் அனைத்து ஊர்களிலும் இருக்கும் அம்மன் கோயில்கள், தாய்வழிச்சமூகத்தை நினைவுபடுத்துபவை. அதற்குப் பிறகான கோயில்கள், வழிபாடுகள் அனைத்துமே, தந்தைவழிச் சமூகம் சார்ந்து ஆண்களை உயர்த்திப் பிடிப்பவையாகவே இருப்பதைப் பார்க்க முடியும். அதனால்தான் மனிதன் அவன் உருவாக்கிய சாமிக்கு, அவனது பழக்கவழக்கங்களையே விழாக்களாக்கியிருக்கிறான்.

திருவண்ணாமலையில், உண்ணாமுலை அம்மன் செல்லமாக ஊடிய பின் சாமியுடன் கூடிவிடுகிறாள். இதற்கு நேர்மாறாக மன்னார்குடியில், செங்கமலத் தாயார் சாமியைப் பனைமட்டையால் அடித்தபிறகு, கோபம்தணிந்து, இராஜகோபாலசாமியுடன் கூடுகிறாள். தாயார்கள், அம்மன்களைவிட உக்கிரமானவர்கள்போலும்.

**சங்க இலக்கியங்களில் ஊடலும், சாடலும்:**

சங்க காலத்தில் ஒருத்திக்கு ஒருவன் என்று பெண்கள் வாழ்ந்திருக்கிறார்கள். ஆனால் ஒருவனுக்கு ஒருத்தி என்பது நடைமுறையில் இருந்திருக்கவில்லை. ஆண்கள் பரத்தையர் வீடுகளுக்குச் செல்வது அறத்திற்கு எதிரானதாகப் பார்க்கப்படவில்லை. அப்படி, பரத்தையிடம் சென்ற தலைவன் திரும்பிவரும்போது, சில பெண்கள் அமைதியாக ஏற்கிறார்கள். சில பெண்கள் தலைவனுக்கு உரைக்கும் விதத்தில் சுட்டிக்காட்டியபின் ஏற்கிறார்கள். ஒருசிலர் விரட்டியடிக்கிறார்கள்.. இல்லம் என்பது தலைவி கட்டுப்பாட்டிலேயே இருந்திருக்கிறது. ஏற்பதும், மறுப்பதும் பொருளாதாரம் சார்ந்தும் இருந்திருக்கிறது.

**ஏற்க மறுத்தல்:**

வேம்பின் பைங்காய் என் தோழி தரினே
‘தேம் பூங் கட்டி என்றனர்; இனியே,
பாரி பறம்பில் பனிச் சுனைத் தெண்ணீர்
தைஇத் திங்கள் தண்ணிய தரினும்
‘வெய்ய உவர்க்கும்‘ என்றனிர்
அய்ய, அற்றால் அன்பின் பாலே”
(குறு. 196 மிளைக்கந்தன்)

முன்பு எம் தலைவி பச்சை வேப்பங்காய்களைத் தந்தாலும் தேன்கலந்த கரும்புக்கட்டிபோல் இனிக்கிறது என்று சொன்ன நீவிர், பின்பு பாரியின் பறம்புமலையில் உள்ள சுனையில் தைமாதத்துக் குளிர்ந்த நீரைக் கொடுத்தாலும், சுடுகிறது, உவர்ப்பாக உள்ளது என்றீர். உம்மை நம்பமுடியாது என்றுசொல்லி, பரத்தையிடம் இருந்து திரும்பிவரும் தலைவனுக்குத் தலைவியின் இல்லில் இடமில்லை என்று தோழி வாயில் மறுக்கிறாள்.

**விரட்டியடித்தல்:**

**..............................................என்**
**தொல்கவின் தொலையினும் தொலைக சார**
**விடேஎன் விடுக்குவென் ஆயின் கடைஇக்**
**‘கவவுக் கைதாங்கும் மதுகைய குவவு முலை**
**சாடிய சாந்தினை வாடியே கோதையை**
**ஆகில் கலம் கழிஇ அற்று**
**வாரல் வாழிய கவையி நின்றோரே**
**( நற்றிணை 350/5:10)**

பரத்தையிடம் சென்ற தலைவன் மீண்டும் இல்லுக்குத் திரும்பியபோது, “எனக்குக் காமம் கிட்டாது போனாலும் போகட்டும். எனது மேனி அழகு வீணாகிப்போனாலும் போகட்டும். பரத்தையைத் தழுவிய தலைவனின் கரங்கள் என் உடலைத் தீண்ட அனுமதிக்கமாட்டேன். அப்படித் தீண்ட அனுமதித்தால், அது தீட்டின் காரணமாகக் கழித்தெறியப்பட்ட கலத்தைத் தீண்டுவதற்கு ஒப்பானது” என்று சொல்லி, தலைவனை ஏற்க மறுக்கிறாள் ஓர் இற்கிழத்தி.

கண்ணகி, கோவலனை ஏற்றுக் கொண்ட காரணத்தாலேயே சிலம்பு காவியம் உருவானது.

அன்றுமுதல் இன்றுவரையிலும், மற்றொரு பெண்ணிடம் தொடர்பு கொள்ளும் ஆண்களை ஏற்பதிலும், மறுப்பதிலும் பெண்கள் வேறுபடவே செய்கிறார்கள். மீண்டும் ஏற்பதிலும்கூட எல்லாப் பெண்களும் ஒரே மாதிரியாக இருக்கமாட்டார்கள் என்பதற்கும் உண்ணாமுலையம்மனின் மென்மையான திருவுடலும், செங்கமலத் தாயாரின் கோபம்கொப்பளிக்கும் மட்டையடியும் சான்றாக உள்ளன...

செங்கமலத்தாயாரின் அந்த மட்டையடி’ இராஜகோபாலசாமிக்கு மட்டுமல்ல, அதுபோன்ற நடத்தைகொண்ட ஒவ்வொரு ஆணின் முதுகிலும் விழுந்த அடி என்றும் நாம் கருதலாம்.

●


## படைப்புகள் வரவேற்கப்படுகின்றன!

கதை சொல்லி களிடமிருந்து கதைகள்

கவிஞர்களிடமிருந்து கவிதைகள்

கட்டுரையாளர் களிடமிருந்து கட்டுரைகள்

பள்ளி ஆசிரியர்களிடமிருந்தும் மாணவர்களிடமி ருந்தும் அறிவியல் சார்ந்த, கல்வி சார்ந்த செய்திகள் என வாசகர்களின் பங்கேற்பினை கண்ணாமூச்சி எதிர்பார்க்கிறது...

மன்னார்குடி பற்றிய நல்ல செய்திகள் பழைய நினைவுகள் மன்னார்குடி சார்ந்த உங்களின் கனவுகள் அனைத்தையும் எழுதி அனுப்புங்கள்.

தகுதியான படைப்பிற்கு களம் அமைத்துக் காத்திருக்கிறது கண்ணாமூச்சி!

படைப்புகள் அனுப்ப வாட்ஸ்அப் எண்

**9659335462**

மின்னஞ்சல்: kannamoochi.mannai@gmail.com

கண்ணாமூச்சிக்கு இதழ் வளர்ச்சி நிதி அனுப்ப கூகுள் பே

**9659335462** விவரத்தை எங்கள் வாட்ஸ்அப் எண்ணிற்குத் தெரிவிக்கவும்.

அன்புள்ள 'கண்ணாமூச்சி' இதழின் ஆசிரியர் அவர்களுக்கு,

'கண்ணாமூச்சி' இரண்டாவது இதழ் கிடைக்கப் பெற்றேன். "மலரு! பாரதி வந்திருக்கான்" அந்த அன்பின் வாய்மொழியை அப்படியே தலைப்பாக இட்டுள்ள இக்கட்டுரையானது,

கடந்த கால நினைவோடையிலிருந்து கொய்யப்பட்ட ஓர் அழகிய மலர்!

அவருடன் இருந்த பழக்கத்தையும், நெருக்கத்தையும் மிக் நேர்த்தியாக வெளிப்படுத்தி, 'கெண்டைக்குஞ்சு', 'வயல் நண்டு' பற்றியும் குறிப்பிட்டிருந்தது, இந்தப் போலி நாகரிகப் புழக்கத்தின் இடையே முகம் காட்டும் எதார்த்தத்தின் வெளிப்பாடு.

நடந்ததை அப்படியே படத்தோற்றம் போல் தெரியக்காட்டி அவர் மீது கொண்டிருந்த அன்பையும், நன்மதிப்பையும் வெளிப்படுத்தி, கலை பாரதியின் 'நெஞ்சுக்குள்' இருந்ததை பார்வைக்கு வைத்தது பாராட்டுக்குரியது.

நடந்ததை நடந்தபடி பதிய வைத்திடும் இலக்கிய ஏடான 'கண்ணாமூச்சி' மேன்மேலும் வளர்ந்திட வாழ்த்துக்கள்!

**பி.புலேந்திரன்**

அன்புள்ள ஆசிரியருக்கு வணக்கம்.

'கண்ணாமூச்சி' முதலிதழ் கிடைத்தது. மகிழ்ச்சி! நன்றி! 'அகல்விளக்கு ஏந்துகிறோம்' ஆசிரியருரை அருமை. சிற்றிதழ்களின் ஆயுளை வரையறுத்திருப்பதுடன், இந்த இதழும் கூட அப்படி நின்றுவிடும். ஆனாலும் வேறுவேறு நபர்களால் தொடரத்தான் செய்யும்' ஆசிரியரின் கருத்து உண்மையே!

தோழர் பரிதி பாண்டியனின் இலக்கிய ஈடுபாட்டையும் ஏழைக்குதவும் மனித மாண்பையும் இரக்க குணத்தையும் 'பரிதி என்னும் மானுடன்' கட்டுரை வழி, அம்ரா பாண்டியன் பகிர்ந்து இருந்ததையும், பரிதி பாண்டியனின் மகன் பாலகுமரன் எழுதியிருந்த 'அப்பாவும் சிகரெட்டும்' கட்டுரையும் உள்ளபடியே மனதை நெகிழ வைக்கும் படைப்புகள் என்பேன். அவர் இன்னும் கொஞ்ச நாட்கள் இருந்திருக்கலாமோ என்ற எண்ணத்தையும் என்னுள் ஏற்படுத்தியது.

மன்னார்குடி விசுவநாதன், இளமதி, மன்னை பாண்டியன், மரிய ஆரோக்யம் ஆகியோருடன் பந்தலடி காந்திமணி நியூஸ் ஏஜெண்ட் கடையில் கூடி நேரம் போவது தெரியாமல் பேசிக் கலைந்த நாட்கள் எத்தனை பசுமை! அந்தக்கால நட்பும், தோழமை உணர்வும், விட்டுக் கொடுக்கும் நேயமும் இனிவருமா? தொடர்க! வெல்க!

அன்பன்

**நவீன்குமார்**

நடுவிக்கோட்டை

பெண்களின் உழைப்பை கண்ணாமூச்சி இதழ் கண்களைத் திறந்து சமூகத்திற்கு காட்டியிருக்கிறது தனது அட்டைப் படத்தில். அதற்கு முதல் நன்றி! ஏனென்றால் பெண்களின் உழைப்பு ஆதிகாலந்தொட்டே மறைக்கப்பட்டுத்தான் இருந்திருக்கிறது. ஒரு மண் சார்ந்த இதழ் பெண் சார்ந்த உழைப்பை மறைக்காமல் காட்டியிருப்பது மூலம் இதழின் சமூகப்பார்வையை இயல்பாய்த் தெரிவித்திருக்கிறது. இதழின் அட்டைப்படம் எனக்குள் ஆயிரம் கிளர்ச்சியையும், உணர்ச்சிகளையும் தந்திருக்கிறது.

**சு.சதீஸ்குமார்**

நெடுவாக்கோட்டை

# தந்தையுமானவர்கள்

## சின்னப்பயல்

ஆசிரியர்களுக்கான மரியாதை என்று இருந்த காலகட்டம் என்ற ஒன்றும் நம் கண்முன்னே இருந்திருக்கின்றது. இப்போது போல் அப்போது இல்லை. இக்காலகட்டத் திரைப்படங்கள் கூட ஆசிரியர்களை மலிவானவர்களாக நகைச்சுவைக்காகத் தொட்டுக் கொள்வதைப் போன்றே பெரும்பாலும் பயன்படுத்துகின்றன."என்னங்க.. தமிழ் வாத்தியார் மாதிரி ட்ரஸ் பண்றீங்க" என்கிற சொல்லாடலை பரவலாகவும் கேட்க முடிகிறது. "இந்த தமிழ் வாத்தியார் இருக்காங்களே.. 'என்று பேசிவிட்டு சுற்றுமுற்றும் பார்க்கக் கூடிய ஆசிரியராக இருந்து பேச்சாளராக மாறியவர்களையும் நான் அறிவேன்.

நான் அதிகம் நேசிக்கும் கதைசொல்லி பவா செல்லத்துரை.நான்கு வயதில் தாத்தா பாட்டியின் கதைகள் கேட்டு தூங்கிய நான் இன்று நாற்பத்தைந்து வயதிலும் பவா செல்லத்துரையிடம் கதை கேட்டுவிட்டு தான் தூங்கச் செல்கிறேன். இன்று தாத்தா பாட்டிகள் இருக்கிறார்கள். அவர்களிடம் கதைகள்தான் இல்லை. ஆனாலும் பவா கதை சொல்லும்போது கூட "இந்த B.Tஅசிஸ்டன்ட் இருக்காங்களே.." என்று அடிக்கடி சற்று ஏளனமாகவே சொல்லிச் செல்கின்றார். B.T அசிஸ்டண்ட் மீது அவருக்கு என்ன கோபமோ தெரியவில்லை.

ஆனாலும் தனக்காக இல்லாமல் இந்த சமூகத்திற்காக உழைத்துக்கொண்டு சமூகத்தைச் சிந்தித்துக்கொண்டே தன்னிழப்பிலும் மக்களை நேசிக்கிற எத்தனையோ B.T அசிஸ்டன்ட்டுகளை எனக்குத் தெரியும்.மகன்கள் என்ன படிக்கிறார்கள் என்பது பற்றி பெரிதும் அலட்டிக் கொள்ளாது மாணவர்களை மகன்களாகக் கொண்டாடுகிற மன்னை உ. இராசேந்திரன், கவிஞர் பரிதி பாண்டியன் போன்ற ஆசிரியர்களை இந்த சமூகம் நன்கறியும்.

இதை எழுதிக் கொண்டிருக்கும் போது என்னுடைய ஏழாம் வகுப்பு ஆசிரியர் வி.ஜி சார் கண் முன் வருகிறார்.அவர் பெயர் கோவிந்தராசு. ஊர் சுந்தர பெருமாள் கோயில்.அவர் எங்களுக்கு ஆசிரியர்.ஆனால் எங்கள் ஊரில் உள்ள குடும்பங்களுக்கு உறவினர் போன்றவர். எங்கள் ஊரில் நடக்கும் கல்யாணம்,காட்சி, காதுகுத்து போன்ற அனைத்து நிகழ்வுகளும் அவரது தலையீடு இல்லாமல் இருக்காது. கும்பகோணத்தில் பட்டுப்புடவை எடுப்பதிலிருந்து சாப்பாட்டிற்குப் பந்திப் பாய் போடுவது வரை அவர் பார்த்துக் கொள்வார். அவர் வந்து விட்டால் வீட்டில் உள்ளவர்களுக்கு பெருத்த நிம்மதி. எல்லாம் அவர் பார்த்துக்கொள்வார் என்று. அவர் தன்னுடைய சொந்தப் பணத்தில் திருமணத்திற்குத் தேவையான துணிமணிகளையும் சமையலுக்குத் தேவையானப் பொருட்களையும் வாங்கிக் கொடுத்துவிட்டு திருமண மொய் பணத்தில் அவர் எடுத்துக் கொள்வார். அதுபோன்றதொரு உறவு ஊருக்கும் அவருக்கும்.

அப்போது பள்ளிக்கூட வழிபாட்டுக் கூட்டத்தில் நான் தான் திருக்குறள் சொல்வேன். 'எல்லா விளக்கும் விளக்கல்ல...' என்ற ஒரு குறளையே திரும்பத் திரும்ப எல்லா வழிபாட்டுக் கூட்டத்திலும் சொன்ன அழகான நாட்கள் அவை. அவ்வாறு ஒரு வழிபாட்டுக் கூட்டத்தில் குறள் சொல்வதற்கு முன்பாகவே மயங்கி விழுந்த என்னை அப்படியே கைகளால் வாரி நெஞ்சோடு அணைத்துத் தூக்கிச் சென்று முகத்தில் தண்ணீர் தெளித்து தன் கைத்துண்டால் துடைத்து மயக்கம் தெளிவித்து எனக்கு தேநீர் புகட்டிய

அந்த நாட்களை இப்போது நினைத்துப் பார்க்கிறேன்.

அந்த ஆசிரியர் மாணவர் உறவின் தொடர்ச்சி இப்போதும் அறுபடாத சங்கிலியாய்த் தொடர்ந்து கொண்டுதான் இருக்கின்றது. என்னிடம் பயின்ற மாணவன் ஒருவன்.அவன் பெயர் முத்து கிருஷ்ணன். பெரிசாகப் படிக்க மாட்டான். ஆனாலும் என் மீது அன்பு உள்ளவன். என் திருமணத்தின் போது எனக்கு ஒரு வாழ்த்து மடலை பரிசளித்துச் சென்றான். எனக்கு கிடைத்த ஆகச் சிறந்த பரிசாக இன்றும் அதனைப் பாதுகாத்து வருகிறேன்.என் மூத்த மகன் பிறந்தபோது பழனிக்கு போய்விட்டு வந்தவன் என் மகனுக்குச் சட்டையும் மனைவிக்குக் குங்குமச்சிமிழ் வாங்கி பரிசளித்துச் சென்றான். இதனை விட வேறென்ன வேண்டும் எனக்கு.

அவன் திருமணத்திற்கு அழைப்பிதழ் கொடுத்திருந்தான்.நானும் நண்பரும் சென்றோம. அந்த திருமண நிகழ்வில் எத்தனையோ பெரியவர்கள் வந்திருந்தார்கள் ஆசிரியர்களாக நானும் நண்பரும். எங்களிருவரையும் மேடைக்கு அழைத்து தாலியை எங்களை எடுத்துத் தரச் சொன்னார்கள். அந்த மாணவனின் அன்பில் அப்படியே நிறைந்து தளும்பி நின்றோம். பின்னர் இரண்டு ஆண்டுகள் கழித்து அந்த மாணவனை எதேச்சையாய் சந்திக்கும்போது

‘‘தம்பி..ஓங் குழந்தைக்கு என்ன பேரு வச்சிருக்க..?"

“அவன் பேரு தமிழ்ச்செல்வன் ஐயா.."

தமிழ்ச்செல்வன்.

அவனுக்குப் பாடம் நடத்திய ஆங்கில ஆசிரியரின் பெயர்.

நான் தொடக்கப்பள்ளியில் படிக்கும்போது எங்கள் சார் ஒருவர் அஞ்சாவது சார் என்று சொல்வோம். தினமும் மிதிவண்டியில் பள்ளிக்கூடம் வருவார். எங்கள் ஊரில் நடக்கும் எத்தனையோ திருமணங்களை அவர் தலைமையேற்று நடத்தி வைத்திருக்கிறார். எங்கள் தெருவில் உள்ள கந்தசாமி அண்ணன் திருமணத்திற்கு அவர்தான் தலைமை. அவரது மகள் கவிதா திருமணத்திற்கும் அவர்தான் தலைமை. கந்தசாமி அண்ணன் பேத்தி திருமணத்திற்கும் தலைமை ஏற்க இருக்கின்ற அஞ்சாவது சாரை ஆவலுடன் இன்றும் எதிர்பார்க்கின்றேன்.அவரது பணி நிறைவு பாராட்டு விழாவின்போது நானும் சென்று இருந்தேன். அப்போது நான் கல்லூரி மாணவன். அந்த விழாவில் இப்படித்தான் பேசினேன.. "எங்க அஞ்சாவது சார் மாதிரி நானும் ஆசிரியராக ஆகணும். பள்ளிக்கூடத்திற்கு தயிர்ச்சோறு கொண்டு போகணும்' என்று.

எங்கள் தெருவில் வசிக்கும் ராச குமாரி அக்கா தன் மகனை முதல் வகுப்பில் சேர்ப்பதற்காக அனிபா கடையில் ஆரஞ்சு மிட்டாய், சர்க்கரை, ஆசிரியர்களுக்கு ஸ்பெஷல் கலர் என்று வாங்கிக் கொண்டு வருகின்றது. எங்கள் அஞ்சாவது சார் தலைமை ஆசிரியர்.ஐந்து வயதை சோதிக்கின்ற காதைத் தொடுகிற நிகழ்வு எல்லாம் நடந்து முடிந்த பிறகு அஞ்சாவது சார் ராசகுமாரி அக்காவிடம்,

‘‘ஓம்புள்ள பேரு என்ன..?"

‘‘அதுவந்து..வந்து அவனையே கேளுங்க சார்.."

‘‘இதுக்கு ஏன் வெட்கப்படுற... ஓம்புருசன் பேரையா கேட்குறேன்.புள்ள பேரைத்தானே கேட்குறேன்.."

“இல்ல..அது வந்து சார்."ராசகுமாரி அக்காவுக்குத் தடுமாற்றம்.

‘‘நீ சொல்றா..ஓம் பேரு என்ன?"

‘‘எம் பேரு பார்த்தசாரதி.."

பார்த்தசாரதி. எங்களோட அஞ்சாவது சாரின் பெயர்.

தலைவர்களின் பெயரை பிள்ளைக்குச் சூட்டுவார்கள். நடிகர்களின் பெயரை பிள்ளைகளுக்குச் சூட்டுவார்கள். அறிஞர்களின் பெயரை பிள்ளைகளுக்குச் சூட்டுவார்கள். ஆனாலும் ஆசிரியரின் பெயரை பிள்ளைக்குச் சூட்டுகிற மரபை முத்துகிருஷ்ணன் போன்ற இரண்டொரு நன்றாகப் படிக்காத மாணவர்களும் ராச குமாரி அக்கா போன்ற அன்பு நிறைந்த பெற்றோர்களும் இப்போதும் தக்க வைத்துக் கொண்டிருக்கிறார்கள் என்றுதான் சொல்லவும் தோன்றுகிறது. ●


தூய செபஸ்தியார் மேல்நிலைப் பள்ளி
காமேஸ்வரம் - கிழக்கு, நாகை மாவட்டம் , செல் : 6380763723
2021 - 22 தொடர்ந்து 17 ஆவது முறையாக பத்தாம் வகுப்பு பொதுத்தேர்விலும்...
மேல்நிலைப் பள்ளியாகத் தரம்உயர்த்தப்பட்டு 5 ஆவது முறையாக +2 பொதுத்தேர்விலும்...
100% தேர்ச்சி
பத்தாம் வகுப்பு மாணாக்கர்கள்
+2 மாணவர்கள்
P.நிவேதிதா 468/500
R.கோபிகா 452/500
S.ஆதிநாராயணன் 443/500
மாவட்ட அளவில் சிறப்பிடம்
V.பாலமுருகன் 580/600
V.குரு 556/600
K.அபிஷேக் 541/600
வெற்றிக்கு உழைக்கும் ஆசிரியர்களுக்கும் பணியாளர்களுக்கும் ஒத்துழைப்பு நல்கிய பெற்றோருக்கும்
சாதனை படைத்த மாணாக்கர்களுக்கும் மனமார்ந்த பாராட்டுக்களும்... வாழ்த்துக்களும்...
தமிழ்வழியில் பயின்று சாதனை புரிந்த
மாணவர்களை கண்ணாமூச்சி வாழ்த்துகிறது.



Siva
தொழில்நுட்பமே
எங்கள் சிறப்பம்சம்...
உங்கள் இல்ல
நிகழ்வுகளைத் துல்லியமாகப்
பதிவு செய்திட
சிவா
வீடியோஸ்
டிஜிட்டல் ஸ்டுடியோ
& லேசர் கலர் லேப்
மன்னார்குடி
செல் : 93440 10195 - 92620 74795
SIVA
PERSONALIZED
GIFT SHOP